# தமிழரசு

1-2-1983 75 காசு
திருவள்ளுவர் ஆண்டு 2014
துந்துபி - தை 19




திருநெல்வேலி
மாவட்ட
சிறப்பிதழ்



சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நடை பெற்ற திருவள்ளுவர் நாள்
விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், யாழ்ப்பாணப் பொது நூலகத்திற்குத்
தமிழக அரசின் சார்பில் ஸ்ரீலங்கா உதவி ஹைகமிஷனரிடம் நூற்
கொடை வழங்கினார். மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சி.,
மாண்புமிகு இலங்கை அமைச்சர் திரு, ராஜதுரை ஆகியோர் உடனிருக்கின்றனர் (15.1.83)

மாண்புமிகு முதல்வர்
அவர்களை மாண்புமிகு
மத்திய ரசாயனத்துறை
அமைச்சர் திரு. வசந்த் சாத்தே
அவர்கள் சென்னையில்
சந்தித்துப் பேசினார்.





மாண்புமிகு முதல்வர் அவர்களிடம்,
அறிஞர் அண்ணா தொழில்நுட்பப்
பல்கலைக் கழக உயர்மட்டக் குழு
அறிக்கையைத் துணை வேந்தர்
திரு வி. சி. குழந்தைசாமி அவர்கள்
அளித்தார். மாண்புமிகு
கல்வியமைச்சர்
திரு, செ. அரங்கநாயகம் அவர்கள்
உடனிருக்கிறார்.

# பிப்ரவரி 3
# பேரறிஞர் அண்ணா
# நினைவு நாள்

தமிழுக்குத் தொண்டுசெய்து
சிறைக்குச் சென்றோன்
தலைசிறந்த பேச்சுவல்லோன்
தமிழ வீரன்
தமர்என்றும் தான்என்றும்
நினைப்ப தன்றி
தமிழ்நாட்டின் நிலத்தினுக்கே
உயிர் உடல்கள்
அமைகஎன இரவுபகல்
உழைக்கும் மேலோன்!
**பாரதிதாசன்**



மங்கையர் சிரிப்பி னுள்ளே
வாலிபக் கவர்ச்சி தேங்கும்!
வாணிகர் சிரிப்பி னூடே
வாணிபத் திறமை தேங்கும்!
பொங்குமென் அருமை அண்ணாப்
புலவனின் சிரிப்பி னுள்ளே
சங்கமுத் தமிழும் நாட்டுச்
சனத்திரள் யாவுந் தேங்கும்!
**கண்ணதாசன்**




# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2014
துந்துபி — தை 19

மலர்: 13 இதழ்: 15
1-2-1983


அளந்துவரும் சொற்கள்
ஆழ்ந்தபொருள் இருளூடே
பிளந்துவரும் மின்வெட்டு
பேச்சுக்கொரு புலவன்
அண்ணாவென்றே இளைஞர்
அன்போடரு கணைவார்
பண்புடைய சொல்ஒன்றால்
பச்சையன்பு பாய்ச்சிடுவார்
**திருலோக சீதாராம்**

அண்ணா துரையென்னும்
அண்ணல் தமிழ்நாட்டு
வண்ணான் அழுக்கெடுப்பில்
வாய்மொழியில்—பண்ணாவான்
சிற்பனெழுத் தோவியத்தில்
செவ்வரசு நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமியென் றாடு
**திரு. வி. க.**



**திருநெல்வேலி
மாவட்டச்
சிறப்பிதழ்**



# வாழ்வில் வளங்காண வழிவகுப்போம்!

## மேதகு ஆளுநர் திரு சுந்தர் லால் குரானா

**தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவையில் மேதகு ஆளுநர் திரு. சுந்தர்லால் குரானா அவர்கள் (திருவள்ளுவர் ஆண்டு 2014 – துந்துபி - தைத் திங்கள் 11-ஆம் நாள்) 24-1-1983 அன்று ஆற்றிய உரை**

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே,

இம் மாநிலத்தின் ஆளுநராக நான் பொறுப்பேற்ற பின்னர், உங்கள் அனைவரையும் கூட்டு அவையில் சந்திப்பதற்கு இதுதான் எனக்குக் கிடைத்த முதல் வாய்ப்பு. முதற்கண் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்தும் பொங்கல் வாழ்த்தும் அளிக்க விழைகிறேன்.

இம் மாநிலத்தில், வெவ்வேறு நடவடிக்கைத் துறைகளில் பல்வேறு திட்டங்கள் 1982ஆம் ஆண்டில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிடத் தகுந்த மாபெரும் சாதனை அடைந்துள்ள திட்டம், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டமாகும். இத் திட்டம் இம் மாநிலத்தின் சிற்றூர்ப் பகுதிகளில் 1–7–1982 முதல் தொடங்கப்பட்டது. அதன்பின், இத் திட்டம் 15–9–1982 முதல் நகரப் பகுதிகளுக்கு நீட்டிக்கப்பட்டது. இரண்டு வயது முதல் நான்கு வயது வரையுள்ள 23 இலட்சம் குழந்தைகள் 27,800 குழந்தை நல நிலையங்களிலும், ஐந்து வயது முதல் ஒன்பது வயது வரையுள்ள 42 இலட்சம் குழந்தைகள் 33,700 பள்ளி நிலையங்களிலும், அன்றாடம் முழுமையான, நல்ல சத்துணவு அளிக்கப்பட்டு வருகின்றனர். பள்ளிக்கூடங்கள் மூடப்படும் முக்கியமான அரசுவிடுமுறை நாட்கள் ஒரு சில நீங்கலாக, ஆண்டு முழுவதிலும் எல்லா நாட்களிலும் குழந்தைகளுக்கு உணவு அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்த விடுமுறை நாட்களுக்கு முதல் நாள் மாலையிலேயே அவர்கள் பள்ளி விட்டுச் செல்கையில், முன்னதாகச் சமைக்கப்பட்ட உணவுப் பொட்டலங்கள், வீடுகளுக்கு எடுத்துச் சென்று அடுத்த நாள் உட்கொள்வதற்காக, அவர்களிடம் கொடுக்கப்படுகின்றன. இந்த ஏற்பாட்டினால் ஆண்டு முழுவதிலும் எல்லா நாட்களிலும் அவர்கள் சத்துள்ள உணவு உட்கொள்கின்றனர். இத் திட்டத்தின் காரணமாக, பெரிதும் கிராமப்பகுதிகளில் 1,40,000-க்கு மேற்பட்டவர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது; இவர்களில் பெரும்பாலோர் மகளிர் ஆவர். ஏராளமான கைம்பெண்கள், ஆதரவற்றோர், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள், ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஆகியவர்கள் இத் திட்டத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள புதிய வேலை வாய்ப்புகளினால் பயனடைந்துள்ளனர்.

பள்ளிகளில் உணவளிக்கும் திட்டத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள பொறுப்பினின்றும் தலைமை ஆசிரியர்களையும், ஏனைய ஆசிரியர்களையும் விடுவிப்பதற்காகவும் அவர்களைக் கல்வி கற்பிக்கும் பணியிலேயே ஆழ்ந்து ஈடுபடச் செய்யும் பொருட்டும், உணவு அளிக்கும் பள்ளி நிலையங்கள் பலவற்றிலும் அமைப்பாளர்களை அரசு நியமிக்க முடிவு செய்துள்ளது. தலைமை ஆசிரியர்களுக்கும், ஏனைய ஆசிரியர்களுக்கும் புதிய பொறுப்பு முழுவதும் நீங்குவதுடன், இதனால் 35,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும். சமுதாயத்தின் வறிய நிலையிலுள்ள ஏழை மக்களுக்கு இத் திட்டம் பெரிதும் பயனுள்ளதாக இருக்கிறது. நாடு விடுதலை அடைந்து பல பத்தாண்டுகள் ஆன பின்னர் இப்போதுதான், இத் திட்டத்தின் காரணமாக, ஏழை இளஞ் சிறார்கள் ஒரு நாளைக்கு ஒரு வேளையாகிலும் நல்ல சத்துள்ள



உணவை உட்கொள்ள முடிகிறது. இந்த ஒரு வேளை உணவுகூட அவர்களுக்கு இதற்குமுன் வயிறாரக் கிடைத்ததில்லை. அவர்களுடைய பெற்றோர்கள் பணி புரியும் நேரங்களில் தங்கள் குழந்தைகளுக்கு உணவளிக்க வேண்டுமே, அவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டுமே என்ற கவலையின்றி, தங்கள் பணிகளில் முழு மூச்சுடன் இத் திட்டத்தினால் ஈடுபட முடிகிறது. ஏற்கெனவே சொல்லியுள்ளதுபோல், ஏராளமான மக்களுக்கு அவர்கள் வாழும் இடங்களிலேயே இத் திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு கிட்டியுள்ளது. வேறெந்தத் திட்டத்தின் மூலமாகவும் சாதாரணமாக இவ்வாறு செய்திருக்க முடியாது; அதுவும் இவ்வளவு பேர்களுக்குச் செய்திருக்க முடியாது. சத்துள்ள உணவு உட்கொண்ட, சிறந்த முறையில் கல்வி கற்பிக்கப்பட்டுள்ள, உடல் நலமுள்ள குழந்தைகளைக் கொண்ட புதிய தலைமுறை கிடைப்பதால் இம் மாநிலமும் இத் திட்டத்தினால் பயனடையும். இந்த ஆண்டில், முக்கியமாக இத் திட்டத்தின் காரணமாக, 2·63 இலட்சம் மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மக்களில் விவரம் தெரிந்த, அறிவார்ந்த எல்லாப் பிரிவினரும் பத்திரிகையாளர்களும் இத் திட்டத்தை உளமாரப் பாராட்டியுள்ளனர். இத் திட்டத்திற்கென பல்வேறு மக்களிடமிருந்தும் தாராளமாக நன்கொடை கிடைத்துள்ளது. இந்நாள் நிலவரப்படி, முதலமைச்சர் சத்துணவுத் திட்ட நிதிக்கு மக்களின் நன்கொடையாக ரூ. 2 கோடிக்கு மேல் கிடைத்துள்ளது. இந்த மக்கள் நலத்திட்டம், இம் மாநிலத்தில் முதியோர் உதவித் திட்டத்தின்கீழ் பயன் பெறுபவர்களுக்கும் 15–1–1983 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

கிராமப் பகுதிகளிலுள்ள உணவளிக்கும் நிலையங்கள், 14–11–1982-லிருந்து தொடங்கப்பட்ட இலவச பற்பொடித் திட்டத்தின்கீழ் பற்பொடியை வழங்குவதற்கும் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. முதல் அமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் காரணமாக, இந்த நிதி ஆண்டில் ஏறக்குறைய ரூ. 112 கோடி செலவாகக் கூடும். இத்தொகை மிக உன்னதமான பணிக்கு நல்லமுறையில் செலவிடப்படுகிறதென, இவ்வரசு நம்பிக்கை கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மாபெரும் தன்மை காரணமாக, இத்திட்டம் செயல்படுத்தப்படுவது தொடர்ந்து உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. மேலும், முதலமைச்சர் தலைமையிலான உயர் அதிகாரக் குழுவால் இத் திட்டத்தின் செயல்பாடு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் 1982ஆம் ஆண்டில் நிறைவெய்தியது மற்றொரு சிறப்பு நிகழ்ச்சியாகும். 1981 டிசம்பர் முதல் 1982 டிசம்பர் வரையுள்ள நூற்றாண்டு விழா ஆண்டு இந்த அரசால் தேசிய ஒருமைப்பாட்டு ஆண்டாக அறிவிக்கப்பட்டது. இந் நாட்டிலுள்ள வேறு பல மாநிலங்களும், மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக நிகழ்ச்சிகள் பலவற்றை நடத்தியுள்ளதும் மனநிறைவளிப்பதாக உள்ளது. இக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, பல்வேறு நாடுகளுக்கும் கலைக் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கல்வித் துறையில் 1982ஆம் ஆண்டில் இம் மாநில அரசு பலரது பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது. எழுத்தறிவின்மையைப் போக்குவதில் இம் மாநில அரசு மேற்கொண்ட முயற்சிகளும் முதியோர் கல்வித் துறையில் ஆற்றிய சிறந்த பணியும் சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ளன. ஒப்புயர்வற்ற க்ரப்ஸ்காயா கல்விப் பரிசினை அளிக்க யுனெஸ்கோ 1982ஆம் ஆண்டில் தமிழ் நாட்டைத் தெரிந்தெடுத்துள்ளது.

இம் மாநிலத்தில் கடந்த சில ஆண்டுகளாக வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கையில், புதிதாக வேலைவாய்ப்பு ஏற்படுத்த மேலும் ஊக்கமளிக்கும் வகையில் புதிய உத்வேகம் அளிப்பது அவசியமென்று இவ்வரசு கருதுகிறது. குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்க மாபெரும் திட்டமொன்றைத் தொடங்குவதெனத் தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் ரூ. 15 கோடி வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுடன் இப் பணி தொடங்கப்படும்.

கிராமங்களில் சமூக, பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த, கிராமங்களில் அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்காக 1980–81-ல் கிராமப் பகுதிகளில் தொடங்கப்பட்ட தன்னிறைவுத் திட்டம், 1982–83-ல் நிறைவெய்தும். முதலாம் ஆண்டில் 69 வளர்ச்சி வட்டாரங்கள் இத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டன. 1981–82-ல் மேலும் 150 வளர்ச்சி வட்டாரங்கள் இத் திட்டத்தின்கீழ் வந்தன. 1982–83-ல் மேலும் 159 வளர்ச்சி வட்டாரங்கள் இத் திட்டத்தின் கீழ் வருகின்றன. ஆகவே, இம் மாநிலத்தில் உள்ள 378 வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்தும் இத் திட்டத்தின்கீழ்

வந்துள்ளன. அடுத்த நடவடிக்கையாக, தன்னிறைவுத் திட்டம் ஒரு சில மாற்றங்களுடன் பேரூராட்சிகளுக்கு நீட்டிக்கப்பட்டு, நடப்பாண்டில் 146 பேரூராட்சிகளில் ரூ. 5 கோடி நிதி ஒதுக்கத்துடன் இத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் இத் தொகை ரூ. 10 கோடியாக உயர்த்தப்படும்.




ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் பொதுக் கழிப்பிடங்களைக் குறிப்பாகப் பெண்களுக்குக் கட்டித் தருவதற்காக மொத்தம் ரூ. 22·56 கோடி செலவாகும் பெருந்திட்டம் ஒன்றும் நடப்பாண்டில் வகுக்கப் பட்டுள்ளது. பொதுக் கழிப்பிடங்கள் அடுத்த நிதி ஆண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சமுதாயத்தில் நலிவுற்ற பாமர மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான பல்வேறு நலத் திட்டங்களை அரசு மேற்கொண்டிருந்த போதிலும், இம் மாநிலத்தில் பருவமழை தொடர்ந்து பெய்யத் தவறியது கடுமையான பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. 1982-ல் தென்மேற்குப் பருவ மழையும் வடகிழக்குப் பருவமழையும் பொய்த்துவிட்டதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். மின் உற்பத்திக்கும் பாசனத்திற்கும் மட்டுமல்லாமல், குடிநீருக்கும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தென்மேற்குப் பருவமழை பொய்த்துவிட்டவுடனே, பொது மக்களுக்குக் குடிநீர் வழங்கும் பணிகளை அரசு தொடங்கிவிட்டது. கிராமப் பகுதிகளிலும் நகராட்சிப் பகுதிகளிலும் 1982 ஆகஸ்டு தொடங்கி 1983 ஜனவரி வரையில் ரூ. 17·50 கோடி செலவில் தமிழ்நாடு, குடிநீர்-வடிகால் வாரியம் 7,500 துளைக் கிணறுகள் இறக்கி, கை பம்புகள் பொருத்தியுள்ளது.

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் அளவைப் பெருக்க, குழாய்க் கிணறுகளும் ஆழ்துளைக் கிணறுகளும் இந்நகரில் இறக்கப்பட்டுள்ளன. மேலும், பொதுநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தவும், கடற்கரை மாவட்டங்களில் உறைகிணறுகளையும், சிறு கிணறுகளையும் அமைக்கவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. நகராட்சிகளில் குடிநீர் வழங்கும் நிலையங்களுக்காக கிளை மின்சாரக் கம்பிகள் போடும் பணிக்கும் ரூ. 1·50 கோடி செலவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் விளைந்து கொண்டிருக்கும் பயிர்களைக் காப்பாற்றுவதற்காக ஓராயிரம் வடிமுனைக் குழாய்க் கிணறுகளை இறக்குவதற்கென்று சிறு உழவர்களுக்கும் சொற்ப நில உழவர்களுக்கும் ரூ. 1·50 கோடி கடன் வழங்கவும் அரசு அண்மையில் அனுமதி அளித்துள்ளது. வறட்சித் துயர் தணிப்பிற்கு ரூ. 190 கோடி செலவாகும் விரிவான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதுபற்றி இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் தற்போது நிலவுகிற வறட்சி நிலைமை நமக்கு நினைவு தெரிந்தவரை மிக மோசமான நிலைமையாகும். இதன் கடுமையை மத்திய அரசு கருதிப் பார்த்து, இயற்கைச் சீற்றத்தினால் ஏற்பட்ட இந்த வறட்சி நிலைமையைப் போக்குவதற்குத் தாராள மனப் பான்மையுடன் நிதி உதவி நல்குமென்று நம்புகிறோம். வறட்சி நிலைமை சந்தேகத்திற்கிடமின்றி மிகவும் கடுமையாகவே உள்ளது. ஆனால், மக்கள் படும் துன்பத்தைக் குறைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டிற்கும் கர்நாடகத்திற்கும் இடையே காவிரி நீரைப் பகிர்ந்து கொள்வதைப் பொறுத்தவரை, 1924ஆம் ஆண்டு ஒப்பந்தம் சட்டப்படிச் செல்லத்தக்கது என்றும், புதியதோர் ஒப்பந்தம் ஏற்படும்வரை தொடர்ந்து செயல்படுத்தக் கூடியது என்றும் இவ்வரசு எப்போதும் கூறி வந்துள்ளது; இப்போதும் அவ்வாறே கூறி வருகிறது. காவிரி பாசனப் பகுதியில் நீர்ப் பற்றாக்குறை காரணமாக வறட்சி நிலைமை இருந்து வருகிறது; நிலைமை இவ்வாறிருக்க, காவிரி நீரில் தமிழ்நாட்டிற்குச் சட்டப்படி உரிமையான பங்கினைக் கர்நாடக அரசு தடுக்கவும் மறுக்கவும் முயன்று வருகிறது. இத் தகராறில் மத்திய அரசு சமரசம் செய்வதுடன், பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணவும் வேண்டும். மேலும் சென்னையில், 15—12—1982-ல் நடைபெற்ற மாநிலப் பாசன அமைச்சர்கள் மாநாட்டில் நமது முதலமைச்சர் இதனை வலியுறுத்தினார்; அப்போது இது குறித்து விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக மத்தியப் பாசன அமைச்சர் ஒப்புக் கொண்டார்.

மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னலை ஓரளவேனும் குறைக்க, அவர்களின் நலன் கருதி, கிடைக்கின்ற நீரைப் பயன்படுத்தும் பொருட்டு, தமிழ்நாட்டின் எல்லைக்குள் ஓடும் காவிரி கிளை நதிகளின் குறுக்கே அணைகள் கட்டுவதுபற்றி இவ்வரசு யோசித்து வருகிறது.

தமிழ்நாட்டில் தொடர்ந்து பருவமழை பொய்த்ததாலும், கர்நாடகாவிலிருந்து காவிரி மூலம் மிகக் குறைந்த நீர் வரவு காரணமாகவும், கேரளாவிலிருந்து மின்சாரம் நமக்குப் போதிய அளவு கிடைக்காததாலும், இம் மாநிலத்தில் மின்சார நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக எல்லாவகைப் பயனீட்டாளருக்கும் மின்



வெட்டு விதிப்பதைத் தவிர அரசுக்கு வேறு வழியேதும் இல்லை. இந்த மின்வெட்டு உயரழுத்த மின்சாரம் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்குத் தேவையில் 75 சதவீதமாகவும் மின் அழுத்தத்தில் 60 சதவீதமாகவும் உள்ளது. அடுத்த பருவமழை பொழியத் தொடங்கும் வரையில் மின் உற்பத்தி நிலைமை மிகவும் இக்கட்டாகவே இருக்கும். ஆயினும், அனல் மின் நிலையங்களில் மின்சாரம் உயரளவுக்கு உற்பத்தியாவதை உறுதி செய்வதற்குத் தன்னாலியன்ற அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது. ஆனால், இம் மாநிலம் தற்போது பல்லாண்டுகளாகத் தொடர்ந்து மின் வெட்டினால் அல்லலுறும் நிலைமை, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் புதிய அனல் மின் நிலையங்களை அமைப்பதன் வாயிலாக மட்டுமே சீரடையும்.

இந் நோக்கத்தினை எய்தும் பொருட்டு, மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு மாநில அரசு பல திட்டங்களைத் தீட்டியுள்ளது. மைய அரசும் மின் உற்பத்திப் பெருக்கத்தை வலியுறுத்துகிறது. இத் திட்டத்தினை வெற்றிகரமாகச் செயற்படுத்தவும் தற்போதுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் செவ்வையாகச் செயல்படுவதை உறுதி செய்யவும், மத்திய அரசின், அதன் பல்வேறு நிறுவனங்களின், ஒத்துழைப்பும் உதவியும் கணிசமான அளவுக்கு இன்றியமையாது தேவைப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மின் நிலையங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்திய அரசு நிர்ணயம் செய்த நிலக்கரி டன் அளவைக் காட்டிலும் நமது அனல் மின் நிலையங்களுக்கு வழங்கும் நிலக்கரி அளவு குறைந்து விட்டதை நாம் இப்போது காண்கிறோம். இவ்வாறு வழங்கப்படும் நிலக்கரியின் தரமும் சிறந்ததாக இல்லை. இத்தகைய காரணங்களை முன்னிட்டு, இம் மாநிலத்தின் அனல் மின் நிலையங்கள் மின் உற்பத்தியில் அதிகச் செலவு கொள்ளும் எரி எண்ணெயைப் பயன்படுத்தி ஓரளவு மின் உற்பத்தி செய்யும் நிலைக்கு உந்தப்பட்டுள்ளன. நிலக்கரியை முடையிருப்பு வைக்க வெளிநாட்டிலிருந்து ஒருமுறை இறக்குமதி செய்வதற்கான இம் மாநில அரசின் செயற்குறிப்பு இன்னும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இது குறித்து மாநில அரசுக்கு உதவும் வகையில் மைய அரசு உடனடி முடிவெடுக்கும் என்று உளப்பூர்வமாக நம்புகிறோம்.

அனல் மின் நிலையம் ஒன்றைப் புதிதாக அமைப்பதற்கு அதிகச் செலவாகும் என்பதையும் இது தொடர்பாகக் கருத்தில் கொள்ள வேண்டும். அனல் மின் உற்பத்திக்கு புனல் மின் உற்பத்தியை விட அதிகம் செலவாகும் என்பது அனைவருக்கும் தெரியும். அநேகமாக நம்மிடமுள்ள புனல் மின் ஆதாரங்கள் அனைத்தையும் இந்த அரசு பயன்படுத்தி விட்டது. எனவே, மின் உற்பத்திக்கு நம்மிடமுள்ள ஒரே மாற்று வழி அனல் மின் உற்பத்தித் திட்டங்களை அல்லது அணு மின் உற்பத்தித் திட்டங்களை மேற்கொள்வதேயாகும். இக்கட்டான இந்தத் தொல்லைகளிலிருந்து விடுபட இந்த அரசுக்கு உதவி செய்வதற்காக மத்திய அரசு தமிழ்நாட்டில் அணு மின் திட்டங்களைத் தொடங்கும் என்று நம்புகிறோம். அனல் மின் நிலையங்களைப் பொறுத்தவரையில், இம் மாநில அரசு அதிக முதலீடு செய்ய வேண்டியிருக்கும். இத் திட்டங்களை தொடங்குமுன் இம் மாநில அரசின் நிதி ஆதாரங்களைப் பெருக்கவேண்டிய அவசியம் உள்ளது. மின் பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்கும் மொத்த மின் கட்டணங்கள் தற்போது மின் உற்பத்திக்கான செலவுக்குக்கூட கட்டிவராத நிலையில் உள்ளது. நடப்பு நிதி ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை முன் வைத்து உரையாற்றியபோது, நிதி அமைச்சர், மின் வாரியத்திற்கு ஆகும் செலவுகளை ஈடு செய்ய அதற்கு ரூ. 271 கோடி தேவைப்படும் என்பதைச் சுட்டிக் காட்டியிருந்தார். எனவே, மாநில மின் வாரியத்தின் ஆண்டு வரவு-செலவுப் பற்றாக்குறை பல கோடிக்கணக்கான ரூபாய் வரை உயர்ந்து கொண்டே போவதை ஓரளவுக்கு ஈடு செய்ய, மின் கட்டணங்களை மனமின்றி உயர்த்துவதைத் தவிர வேறெந்த வழியும் இந்த அரசுக்கு இல்லை. மின் கட்டண வீதங்களை உயர்த்துமாறு மாநில அரசை, மத்திய திட்டக் குழுவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தவிர்க்க முடியாதது என்பதால், இதனை அரசு ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

தற்போது இம் மாநிலத்தில் மிகவும் இக்கட்டான உணவு நிலைமை உள்ளது. கடந்த இரண்டாண்டுகளாகத் தமிழகத்தில் தொடர்ந்து பருவ மழை தவறியதால் உணவு தானிய உற்பத்தி மிகவும் தாழ்ந்துள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். எடுத்துக்காட்டாக, 1982-ல் குறுவை சாகுபடிப் பரப்பளவு 20 சதவீதம் குறைந்து விட்டது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 'சம்பா' பயிர் சாகுபடியும் ஊக்கமளிப்பதாக இல்லை. எனவே, இம் மாநிலத்தில் நெல் உற்பத்தி இறங்கு முகத்தைக் காட்டுகிறது. பொதுப்பங்கீட்டு முறையின் கீழ் செலவாகும் அரிசியின் அளவு உயர்ந்துவிட்டதால், உணவுப் பிரச்சினை தீவிரமாகி விட்டது. 1982 ஏப்ரலில் இவ்வாறு செலவான அரிசி 36,000 டன் ஆகும். இந்த அளவு ஏறத்தாழ 86,000 டன் ஆகத் தற்போது உயர்ந்துள்ளது. பொதுப்பங்கீட்டு முறையின் மூலம் பயனீட்டாளர்கள் அரிசி பெறுவது இனி வரும் மாதங்களிலும் தொடர்ந்து அதிக அளவில் இருக்கும். அரிசி உற்பத்தி குறைந்துபோய், செலவாகும் அரிசியின் அளவு உயர்ந்துவிட்டதால், அரிசிக் கையிருப்பு அளவு மிகவும் குறைந்து விட்டது. நம்மிடம் ஒரு இலட்சம் டன் அரிசியும் இரண்டு இலட்சம் டன் நெல்லும் தற்போது இருப்பிலுள்ளன. தற்போது இருப்பிலுள்ள அரிசியும் நெல்லும் நீண்ட காலத்திற்கு வராது. இந்திய அரசுடன் இம் மாநில அரசும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும் அதிகாரிகள் நிலையிலும் அமைச்சர்கள் நிலையிலும் தொடர்ந்து அயராது முயற்சிகள் எடுத்துக் கொண்ட போதிலும், 1982-ம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து

இம் மாநிலத்திற்கு அரிசி ஒதுக்கீடு எதுவும் செய்யப் படவில்லை. இந்நிலையில், மேலும் காலதாமதம் செய்யாமல் உற்ற தருணத்தில் உறுதுணையாக உதவ மத்திய அரசு முன்வந்து உடனடியாகக் கணிசமான அளவு உணவு தானியங்களை ஒதுக்கும் என்று நம்புகிறோம். அதே சமயத்தில், உணவு நிலையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துவர மாநில அரசு முடிந்த அளவுக்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது என்று மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு உறுதிகூற விழைகிறேன்.

பருவ மழை பொய்த்துப்போனது, நிலக்கரி, சிமிட்டி முதலிய மூலப் பொருள்கள் கிடைக்காம லிருப்பது போன்ற இக்கட்டான நிலைமைகள் அரசுக்கு ஏற்பட்டிருந்தபோதிலும், வளர்ச்சிப் பணிகள், எவ்வித தங்கு தடையுமின்றி விரைவாக நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டில், ரூ. 711 கோடி திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளித்திருக்க, திட்ட சாதனை, திட்ட ஒதுக்கீட்டை விஞ்சக்கூடும். அண்மையில் மத்திய திட்டக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், 1983–84ஆம் ஆண்டுக்கான திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 845 கோடி என இறுதி செய்யப்பட்டுள்ளது. இது நடப்பாண்டு நிதி ஒதுக்கீட்டினைவிட 18.87 சதவீதம் அதிகமாகும். கடந்த சில ஆண்டுகளில் அனுமதித்த திட்ட ஒதுக்கீட்டைக்காட்டிலும் அதிக அளவில் சாதனை செய்துகாட்டிய தனிச் சிறப்பினை இம் மாநிலம் பெற்றுள்ளது. வரும் ஆண்டுகளிலும் இந்த நல்ல நிலைமை தொடர்ந்து இருக்குமெனத் தோன்றுகிறது.

இந்தியப் பிரதம மந்திரியின் '' புதிய 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்திற்கு '' இவ்வரசு முற்றிலும் ஆதரவளிக்கிறது. திட்டப் பணியில் ஏற்படும் முன்னேற்றத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே உன்னிப்பாகக் கண்காணித்து வருவதுடன், வளர்ச்சி வேகம் சற்றும் குறையாமலிருக்குமாறு முறையாக ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இம் மாநிலத்தின் பொருளாதார நடவடிக்கை யின் முக்கிய துறைகள் சிலவற்றை இப்போது நான் குறிப்பிட விழைகிறேன். இம் மாநிலத்தில் பெரும் பான்மையினருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிற வேளாண்மைத் துறையில் இவ்வரசு, தொடர்ந்து சிறப்பு நாட்டம் செலுத்தி வருகிறது. வேளாண்மையில் நல விரிவுத் திட்டத்தின் வளர்ச்சியை நோக்க மாகக் கொண்டுள்ள பயிற்சி-நேர் காணல் திட்டம், உலக வங்கி உதவி பெறும் திட்டமாகும். இத் திட்டம் 1982, ஜூலை முதல் மாநிலம் முழுவதற்கும் நீட்டிக் கப்பட்டுள்ளது. நல விரிவாக்கப் பணிக்கு ஏற்புடைய தொடர் நடவடிக்கையாக, ஒழுங்குமுறை அங்காடிகளில் கிராமக் கிடங்குகள் கட்டுவதன் மூலம் உழவர்களுக்கு விற்பனை வசதிகளை இம் மாநில அரசு செய்து கொடுத்துள்ளது. உழவர்கள் தங்களது விளை பொருள்களைக் கொண்டுவந்து, அவர்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வரையில் அவற்றை உரியவாறு சேமித்து வைக்க இத்திட்டம் பெரிதும் உதவும்.

'' இந்தியப் பால் பண்ணைக் கழகத்தின் '' நிதியுதவியைப் பெறுகின்றதும் தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்திடமிருந்து தொழில் நுட்ப வகையில் உதவியைப் பெறுகின்றதுமான '' பால் பெருக்க IIஆம் திட்டத்திற்கு '' இவ்வரசு ரூ. 44 கோடி ஒதுக்கியுள்ளது. இத் திட்டம் செயல்படுகின்ற செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, சேலம், பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை ஆகிய மாவட்டங்கள், 1984–85ஆம் ஆண்டிற்குள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 5,000ஐக் கொண்டிருக்கும். மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும் வறட்சிப்பாங்கான பகுதித் திட்டத் தின்கீழும் உதகமண்டலத்திலும் கிருஷ்ணகிரியிலும் மொத்தம் இரண்டு பால் பண்ணைகள் தொடங்கப்பட்டு வருகின்றன. தரமான விதைகள் வழங்கப்படும் அளவை உயர்த்துவதற்காக, ரூ. 80 இலட்சம் செலவில் விதைப் பண்ணைகள் இரண்டு தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் மேற் கொண்டும் விதை பதப்படுத்தும் பிரிவுகள் மூன்றினை ஏற்படுத்துமாறு அரசு ஆணையிட்டுள்ளது. பண்ணை மேம்பாட்டைப் பொறுத்தவரையில், கீழ் பவானித் திட்ட பாசனப் பகுதிக்கும், காவிரி பாசனப் பகுதிக்கும், பெரியாறு-வைகை பாசனப் பகுதிக்கும் இந்த மேம் பாட்டுப் பணிகள் நீட்டிக்கப்பட்டு வருகின்றன. தோட்டக் கலையும் மேம்படுத்தப்பட்டு வருகிறது; கோயம்புத்தூரிலும் திருச்சிராப்பள்ளியிலும் தோட்டப் பண்ணைகள் தொடங்கப்பட்டு வருகின்றன. இதனால், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாவட்டங்கள் ஒவ்வொன் றிலும் தோட்டப் பண்ணை ஒன்று அமைக்கப் பட்டிருக்கும்.

உழவர்களுக்கு உறுதுணையாக இவ்வரசு முற்போக்கான நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் பலவற்றைச் செயற்படுத்தும் பொறுப்பை ஏற்றுள்ளது. நிலச் சீர்திருத்தச் சட்டத்தைச் செயற்படுத்துவதை விரைவுபடுத்தும் பொருட்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323 (b) பிரிவின்படி மேல் முறையீட்டுத் தனி நடுவர் மன்றம் ஒன்றை அமைப்பதென அரசு முடிவெடுத்துள்ளது. நில நடுவர் மன்றம், நில ஆணை யாளர்கள், நில வாரியம் அளித்த தீர்ப்புகள்மீது செய்து கொள்ளும் மேல்முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரம் இந்த மேல் முறையீட்டு நடுவர் மன்றம் பெற்றுள்ளது. இது குறித்து, தேவையான சட்டம் விரைவிலேயே இயற்றப்படும்.

நாளது வரையில் திருத்தியமைக்கப்படுகிற நில விவரப் பதிவு முறைத் திட்டம் உழவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகக் காணப்படுகிறது. இத் திட்டம் அண்மையில் மறு நில அளவை செய்யப்பட்ட பகுதி கள், தீவிர நில உட்பிரிவுத் திட்டத்தின்கீழ் வரும் பகுதிகள் நீங்கலாக, இம் மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதற்காக, இப்போதுள்ள 28 பிரிவுகளை வலுப்படுத்துவதுடன், 80 புதிய பிரிவு களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கு ரூ. 5.17 கோடி செலவாகும்.






காடுகளை அழித்ததாலும், வரைமுறையின்றி மரங்களை வெட்டி வீழ்த்தியதாலும், உயிரினவாழ்க்கைச் சூழலில் ஏற்றத் தாழ்வும் விரும்பத்தகாத விளைவுகளும் ஏற்பட்டுள்ளன. மிகப் பரந்த அளவில் மரங்களை நடும் பணியை மேற்கொள்வதில் அரசு நாட்டம் செலுத்தி வருகிறது. தென் மேற்கு, வட கிழக்குப் பருவ மழை மிகமோசமாக இருப்பினும், 8.2 கோடி செடிகள் ஏற்கெனவே நடப்பட்டுள்ளன. 11 கோடி செடிகள் நடுவது என்னும் திட்ட இலக்கினை எய்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீனள மேம்பாட்டுக்கான பல்வேறு திட்டப் பணிகள் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டு, இவ்வரசு, ரூ. 67 இலட்சம் திட்டச் செலவில், தஞ்சாவூர் மாவட்டத்தில் பழையாறு என்னுமிடத்தில் மீன்களைக் கரைசேர்க்கும் தோணித்துறை அமைப்பதற்கு அனுமதிக்காக அனுப்பியிருந்த திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி கிடைத்துள்ளது. இப் பணி விரைவிலேயே தொடங்கப்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு நன்கு பரந்த அளவில் அமையப்பெற்ற சாலை வசதி ஏற்பாடு மிகவும் இன்றியமையாததாகும். சாலைகள் மேம்பாட்டுக்காக இவ்வரசு கணிசமான தொகையைச் செலவிட்டு வருகிறது. நடப்பு நிதி ஆண்டில், ரூ. 10 கோடி செலவில் 500 கிலோ மீட்டர் கிராமப் புறச் சாலைகள் மேம்படுத்தப்படும். இத்துடன் ஏறத்தாழ 18,927 கிலோ மீட்டர் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டு, தன்னிறைவுத் திட்டத் தின்கீழ் ரூ. 43 கோடி செலவில் மேம்படுத்தப் பட்டுள்ளன. இரு மாநிலங்களுக்கிடையிலான சாலை அமைப்பின் பொருளாதார முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, மத்திய அரசு கிழக் கடற்கரைச் சாலையில் சில பகுதிகளை மேம்படுத்த ரூ. 300 இலட்சம் செலவுள்ள திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இதில் 50 சதவீதச் செலவை மத்திய அரசு மாநில அரசுக்குக் கடனாகக் கொடுக்கும். எஞ்சிய பாதிச் செலவை மாநில அரசு தன் சொந்த நிதியிலிருந்து செய்யும்.

இம் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொழில் துறை வளர்ச்சி மிகவும் முக்கியமாகும். இம் மாநிலத்தில் மைய அரசின் முதலீடு சில ஆண்டுகளாகப் படிப்படியாகக் குறைந்து வருகிறது. இந்துஸ்தான் புகைப்படச் சுருள் நிறுவனத்தைச் சேர்ந்த கலர் பிலிம் தயாரிப்புப் பிரிவு உதகமண்டலத்தில் அமைக்கப்படும் என்று இம் மாநில அரசு நம்பியிருந்தது. ஆனால், இது வேறொரு மாநிலத்தில் அமைக்கப்படக்கூடும் என்பதை நாம் இப்போது அறிகிறோம். இந்திய நாட்டில் தயாராகும் திரைப் படங்களில் பாதிக்குமேல் தென் இந்தியாவில் தயாராகிறது. இப் பிரிவு இங்கு அமையுமானால், ஒருங்கிணைந்த உடனடி விற்பனை வசதியும் துணையான அடிப்படை வசதிகளையும் கொண்டு பல அநுகூலங்களைப் பெற்றிருக்கும் என்பது வல்லுநர் கருத்தாகும். இத்தகைய காரணங்களைக் கொண்டு, இம் மாநிலத்தில் இப் பிரிவையும் வேறு சில பிரிவுகளையும் போதுமான முதலீட்டுடன் அமைக்குமாறு இவ்வரசு மத்திய அரசை வலியுறுத்துகிறது.

இம் மாநிலத்தைத் தொழில் மயமாக்கும் பணியை விரைவுபடுத்துவதற்கான முயற்சிகளைத் தன்னால் இயன்ற வரையில் இவ்வரசு செய்து வருகிறது. மேலும், ஐந்து தொழிற்சாலைத் தொகுதிகளை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலைத் தொகுதிகளில் அமையவிருக்கும் தொழில்கள், பின் தங்கிய பகுதிகளில் அமையும் தொழில் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளைப் பெறத் தகுதியுண்டு. தொழில் தொடங்கியதிலிருந்து முதல் ஐந்து ஆண்டுக் கால அளவில் இத் தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டு இராது. இத் திட்டத்திற்குத் தொழில் முனைவர்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவு மிகவும் ஊக்கமளிப்பதாயுள்ளது. தொழிற்சாலைத் தொகுதிகள் விரைவிலேயே ஏற்படுத்தப்படுமென்று எதிர்பார்க்கிறோம்.

இம்மாநில அரசின் பரிந்துரைகளின் அடிப்படையில், மத்திய அரசு, 50,000 டன் உற்பத்தித் திறனளவுடன், ''லீனியர் ஆல்கைல் பென்ஸீன்'' உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை ஏறத்தாழ ரூ. 50 கோடி செலவில் நிறுவ 'டிட்கோ' நிறுவனத்திற்கு அனுமதிக் கடிதம் வழங்கியுள்ளது. எட்டையபுரம், தருமபுரி, புதுக்கோட்டை, தேனி ஆகிய இடங்களில் கூட்டுறவு நூற்பாலைகள் அமைக்கும் பணி திட்டமிட்டப்படி நடைபெற்று வருகிறது. ஆதி திராவிடர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க மேலும் ஒரு நூற்பாலை இராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் அமைக்கப்பட்டுள்ளது. அரசுத் துறை நிறுவனமாகிய தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம், ''அலுமினியம் எலக்ட்ரானிட்டிக் கபாசிட்டர்கள்'' தயாரிப்பதற்கான அனுமதிக் கடிதத்தைப் பெற்றுள்ளது. இச் செயல்திட்டத்திற்கு ஏறத்தாழ ரூ. 179 இலட்சம் செலவு ஆகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சோதனை அடிப்படையிலான உற்பத்தி தொடங்கி நடைபெறுகிறது. வணிக அளவிலான உற்பத்தி இவ்வாண்டு மார்ச்சு-ஏப்ரலில் தொடங்கக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இம் மாநிலத்தில் சர்க்கரை ஆலைகள் இரண்டினை அமைப்பதற்காகவும் அனுமதிக் கடிதங்களை இவ்வரசு பெற்றுள்ளது.

ஆதி திராவிடர்களின் முன்னேற்றத்திற்கான பல்முனைப் பணிகளின் அங்கமாகச் சிறப்புக் கூறுகள் திட்டமொன்றை அரசு செயற்படுத்தி வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் ஆதி திராவிடர் குடும்பத்தினரில் 50 சத வீதத்தினரை ஏழ்மைக் கோட்டைத் தாண்டச் செய்வது, ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை சாதனங்களுக்கு, வசதிகளுக்கு ஏற்பாடு செய்வது என்ற நோக்கத்தை 1980-81-லிருந்து அரசு பின்பற்றி வருகிறது. அரசின் எல்லா அமைப்புகளின் நிதி ஆதாரங்களும் முயற்சிகளும் இதற்கு உறுதுணையாக இருக்கின்றன. சிறப்புக் கூறுகள் திட்டத்தின் அளவு, நடப்பு நிதி ஆண்டில் ரூ. 104.84 கோடி இருக்குமென்றும், அடுத்த நிதியாண்டில் இது ரூ. 120 கோடியை எட்டுமென்றும்

எதிர்பார்க்கப்படுகிறது. ஆதி திராவிடர்கள் செய்யும் தொழில்களைப் பல்திறப்படுத்த சிறுதொழில்கள், தொகுதித் திட்டங்கள், குடும்ப அளவிலான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் முதலானவற்றுக்குத் தாராள நிதியுதவி அளிக்கப்பட்டு ஊக்கமளிக்கப்படுகிறது. மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியுடன் இப்பணி மேற்கொள்ளப்படுகிறது. நடப்பாண்டில், இந்த நிதியுதவி ரூ. 10·20 கோடியாகவும் அடுத்த நிதியாண்டில் ரூ. 11·20 கோடியாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆதி திராவிடர் குடியிருப்பின் அடிப்படைத் தேவைகளைக் கண்டறிய ஆய்வு நடத்தப்பட்டது. ஆறாவது திட்டக் கால இறுதிக்குள் இக் குடியிருப்புகளின் குறைந்த அளவுத் தேவைகளை நிறைவு செய்ய இந்த ஆய்வு உதவியாக இருக்கும். ஆதி திராவிடர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ள மனைகளில் வீடுகட்டவும் அவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

இதே போன்று, மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டமும் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளை மேம்படுத்த, பழங்குடி மக்களில் 4,200 குடும்பத்தினர் 1983-84-ல் ஏழ்மைக் கோட்டைத் தாண்டிவர அம் மக்களுக்கு உதவும் நோக்கத்தில், மலைவாழ் மக்கள் துணைத் திட்டம் செயற்படுத்தப்படும். இத் திட்டத்திற்கென, 1983–84-ல் ரூ. 6.50 கோடி செலவிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. மலைவாழ் மக்கள் அனைவருக்கும் இரண்டாண்டுகளுக்குள் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்படும். பின்தங்கிய வகுப்பினர் நலன் கருதி பல திட்டங்களை அரசு தொடர்ந்து செயற்படுத்தி வருகிறது. பின்தங்கிய வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டுக்காக, தமிழ்நாடு பின்தங்கிய வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் என்ற அமைப்பு தற்போது நிறுவப்பட்டுள்ளது. பின்தங்கிய வகுப்பினரின் தற்போதைய பட்டியல், அவர்களுக்கான ஒதுக்கீட்டுச் சதவீதம் ஆகியவற்றை மறுபரிசீலனை செய்ய பின்தங்கிய வகுப்பினர் நல ஆணையம் என்றோர் அமைப்பையும் அரசு நிறுவியுள்ளது.

நிதி வகையில் நலிந்துள்ள இஸ்லாமிய சமய-அற நிறுவனங்கள் ஏறத்தாழ 2,700 இருக்கின்றன. இந்த நிறுவனங்கள் தங்கள் மசூதி முதலிய சொத்துக்களைச் செப்பனிடவும் புதுப்பிக்கவும் இவற்றில் ஏறத்தாழ 650 நிறுவனங்களுக்கு மாநில அரசு பல காலமாக நிதி உதவி அளித்து வருகிறது. எஞ்சியுள்ள நிறுவனங்களுக்கு உதவி செய்யும் பொருட்டு, இரண்டாண்டுக் கால அளவில் ரூ. 1 கோடி அளவுக்கு மானியம் அளிக்கும் முனைப்புத் திட்டமொன்றை மேற்கொள்வதென அரசு முடிவு செய்துள்ளது.

சுற்றுலா வளர்ச்சியில் அரசு எப்போதும் தனி கவனம் செலுத்திவந்துள்ளது. மாமல்லபுரம், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், உதகமண்டலம் போன்ற பெரிய சுற்றுலா மையங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப் பெருந் திட்டங்களை அரசு வகுத்துள்ளது. இத் திட்டங்களுக்கு மொத்தம் சுமார் ரூ. 80 கோடி வேண்டியிருக்கலாம். இத் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசின் உதவி நாடப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதி உதவி கிடைக்கும் வரை, தனது அதிகார வரம்பிற்குட்பட்ட பல்வேறு துறைகளின் வரவு-செலவுத் திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ள பெருந் திட்டங்களில் இடம் பெற்றுள்ள திட்டப் பணிகளில் தன்னாலியன்ற திட்டப் பணிகளையெல்லாம் மேற்கொள்ள அரசு முயன்றுவருகிறது.

புதிய எரிசக்தி ஆதாரங்களையும் உறுதியாகக் கிடைக்குமென நம்பக்கூடிய எரிசக்தி ஆதாரங்களையும் கண்டறிய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்த வேண்டிய தேவையில்லை. தேவைக்கேற்ற மின்சக்தி கிடைக்காத பற்றாக்குறைநிலை நீடித்துக்கொண்டே போகிறது. இந்த நிலைமை சீரடைய எரிசக்தி உற்பத்திக்கான திட்டமிட வேண்டியிருக்கிறது. இதில் அரசு முக்கியமாக நாட்டம் செலுத்த வேண்டியதாகவும் இருக்கிறது. இம்மாநிலத்தில், குறிப்பாக, கிராமப் பகுதிகளின் வளர்ச்சிக்கு கிடைக்கின்ற நிதி ஆதாரங்களைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்றதொரு எரிசக்தி உற்பத்தி–தொழில் நுட்ப அமைப்பை நிறுவுவது மிகவும் அவசியமாகிறது. எரிசக்தி உற்பத்தியைப் பொறுத்தவரை, பல்வேறு தொழில் நுட்ப நிறுவனங்களில் பரிசோதனைகள், ஆராய்ச்சிகள் பல மேற்கொண்டுள்ளபோதிலும், அவற்றின் முடிவுகளை நடைமுறையில் செயற்படுத்துவதில் சிறிதளவே செய்ய முடிந்துள்ளது. மின்சக்தி உற்பத்தித் திட்டமொன்றை மேற்கொள்வது, இம்மாநிலம் முழுவதற்கும் எரிசக்தி வழங்கும் தனிப் பெரும் அமைப்பைத் தொடங்குவதற்கு வழிகோலும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையின் பேரில், அடுத்த நிதியாண்டில் குறிப்பிட்ட சில பகுதிகளில் இத்திட்டத்தை மேற்கொள்வதென அரசு முடிவு செய்துள்ளது.

நான் எனது உரையை முடிக்குமுன், அண்ணாவின் இருமொழிக் கொள்கையை இவ்வரசு செயற்படுத்தக் கடமைப்பட்டுள்ளது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். காலஞ்சென்ற பிரதமர் பண்டித நேரு அவர்களும் இந்நாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களும், இந்தி பேசாத மக்கள் மீது இந்தி மொழி திணிக்கப்பட மாட்டாது என்று வாக்குறுதிகள் அளித்திருந்தபோதிலும், இரயில்வே பணியாளர்கள் ஆண்டுச் சம்பள உயர்வு பெற இந்தித் தேர்வுகளில் தேறியாக வேண்டும் என்று இரயில்வே நிர்வாகத்தினர் வற்புறுத்துவதும் அகில இந்திய வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் இந்திக்கு அளிக்கும் முக்கியத்துவம் அதிகரித்து வருவதும் சில துறைகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்தியைத் திணிப்பதாக அமைவதுடன் மேற்படி வாக்குறுதிகளுக்கு முரணாகவும் இருக்கின்றன. ஏற்கெனவே கொடுத்துள்ள வாக்குறுதிகளின்படி நடப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை வலியுறுத்த இவ்வரசு விழைகிறது.

எனது உரையில், இவ்வரசு எய்தியுள்ள சாதனைகளையும், எதிர்நோக்கியுள்ள சிக்கல்களையும், வருங்காலத்திற்கென எண்ணியுள்ள திட்டங்களையும் நான் உங்கள்முன் வைத்துள்ளேன். தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு வகுத்துள்ள திட்டங்களையும், பணிகளையும் செயற்படுத்த, நீங்கள் அனைவரும் இணைந்து செயல்படுவீர்கள் என்று நம்புகிறேன்.

**வணக்கம்.**




# திருநெல்வேலி மாவட்டம் - ஒரு கண்ணோட்டம்

கோட்டங்கள் : 4

1. திருநெல்வேலி, 3. சேரன்மாதேவி,
2. கோவில்பட்டி, 4. தூத்துக்குடி

வட்டங்கள் : 16

1. திருநெல்வேலி, 9. ஸ்ரீவைகுண்டம்,
2. தென்காசி, 10. திருச்செந்தூர்,
3. செங்கோட்டை, 11. சாத்தான்குளம்,
4. சங்கரன்கோயில், 12. நாங்குனேரி,
5. கோவில்பட்டி, 13. அம்பாசமுத்திரம்,
6. விளாத்தி குளம், 14. ராதாபுரம்
7. ஒட்டப்பிடாரம் 15. பாளையங்கோட்டை,
8. தூத்துக்குடி, 16. சிவகிரி,

ஊராட்சி ஒன்றியங்கள்: 31

நகரியங்கள் : 2

நகரப் பஞ்சாயத்துகள் : 58

நகராட்சிகள்: 11

கிராமப் பஞ்சாயத்துகள் : 829

வருவாய்க் கிராமங்கள் : 1039

குக்கிராமங்கள் : 3900

மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு :
4407 சதுர மைல்கள்
10109 சதுர கிலோ மீட்டர்

முக்கியத் தொழில் : வேளாண்மை

முக்கிய ஆறுகள் : தாமிரபரணி, சிற்றாறு

விவசாயப் பரப்பு : 12,21,904 ஏக்கர்கள்

மக்கள் தொகை : (1981) 35,73,751

ஆடவர் : 17,48,321

பெண்டிர் : 18,25,430

**கல்வி கற்றோர் சதவிகிதம் :** 50.79%
**ஆடவர் :** 61.91%
**பெண்டிர் :** 40.14%
**தொடக்கப் பள்ளிகள்:** 2459
**நடுநிலைப் பள்ளிகள்:** 675
**உயர்நிலைப் பள்ளிகள்:** 118
**மேல்நிலைப் பள்ளிகள்:** 132
**கல்லூரிகள்:** 27
**ஆதிதிராவிடர் எண்ணிக்கை:** 5,89,468
**ஆண்:** 2,88,376
**பெண்:** 3,01,092

**மலை வாழுநர் எண்ணிக்கை:** 11,954
**ஆண்:** 5787
**பெண்:** 61167
**அரசினர் பொது மருத்துவமனைகள்:** 18
**அரசு கிராமப்புற மருத்துவமனைகள்:** 16
**நடமாடும் மருத்துவ ஊர்திகள்:** 3

1. அம்பாசமுத்திரம்
2. சங்கரன்கோயில்
3. ரெட்டியார்பட்டி

**தொழுநோய் மையங்கள்:** 4

1. சிறுதாராபுரம்
2. சிவகிரி
3. கோவில்பட்டி
4. அம்பாசமுத்திரம்

**ஆயுர்வேதிக் மருத்துவ மனை:** 1
(செங்கோட்டை)

**மருத்துவக் கல்லூரிகள் :** 2

1. அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, பாளையங்கோட்டை.
2. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை (அலோபதி), பாளையங்கோட்டை.

**பெருந்தொழில்கள் :** (சிமெண்ட், பிளாஸ்டிக் இண்டஸ்ட்டிரிஸ், உரம், கெமிக்கல் காஸ்டிக் சோடா தொழிற் கூடங்கள்)

**நடுத்தரத் தொழில்கள்:** 19
**குடிசை மற்றும் சிறு தொழில்கள்:** 1,051
**சட்டமன்றத் தொகுதிகள்:** 18
**நாடாளுமன்றத் தொகுதிகள்:** 4

## திரு நிர்மல்சிங்ஹீரா, இ.ஆ.ப.
### திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர்



நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்றிருப்பவர் திரு நிர்மல்சிங் ஹீரா, இ. ஆ. ப. அவர்கள்.

ஒவ்வொரு வாரமும், திங்கட்கிழமையன்று மாவட்ட ஆட்சித் தலைவரும் முக்கிய அதிகாரிகளும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயே மக்களைச் சந்தித்து அவரவர் குறைகளைக் கேட்டறிகிறார்கள்; தீர்க்க முடிந்த பிரச்சனைகள் அப்போதே தீர்த்து வைக்கப்படுகின்றன; சிக்கலானவை எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் பரிசீலிக்கப்படுகின்றன.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அவ்வப்போது மனுநீதிநாள் நடத்தப்படுகிறது. அப்படி மானூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தென்பத்து கிராமத்தில் நடந்த மனுநீதி நாளில் மாவட்ட ஆட்சித் தலைவரோடு நாமும் சென்றிருந்தோம். இரு நூறுக்கு மேல் மனுக்கள் குவிந்தன. அவ்வளவையும் படித்து, உடன் வந்த பல்வேறு துறை அதிகாரிகளோடு கலந்து பேசி, அவற்றில் சிக்கலற்ற முக்கால் பங்கு மனுப்பிரச்சனைகளை அங்கேயே தீர்த்து வைத்தார் அவர்.

பாளையங்கோட்டை சட்ட மன்ற உறுப்பினர் திரு கருப்பு சாமி பாண்டியன் அவர்கள் நன்றியுரையோடு, மக்கள் குறை நீக்கும் நாள் விழா முடிவுற்றது.

அலுவலகத்தில், பின்னர் நாம் மாவட்ட ஆட்சித் தலைவரைப் பேட்டி கண்டோம்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமாகட்டும், தன்னிறைவுத் திட்டமாகட்டும்-எல்லாவற்றையுமே குறிப்பிட்ட காலத்தில் நல்லபடி முடிந்திருப்பதாகப் பெருமையோடு சொன்னார் நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர். சாத்தான்குளம், விளாத்தி குளம், குருவிகுளம், கயத்தாறு, கோவில்பட்டி, புதூர், ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி, உடன்குடி, ஆகிய ஒன்பது கிராமங்களின் வறட்சி நிவாரணத்திற்காக இவர் கேட்ட ரூ. 3 கோடி நிதி ஒதுக்கீடு அரசின் ஒப்புதலுக்குச் சென்றிருப்பதாக அவர் கூறினார்.

''தீர்க்க முடியாத - அல்லது தீர்க்கத் திணறிய பிரச்சனைகள் ஏதேனும் நெல்லை மாவட்டத்தில் உங்களுக்கு ஏற்பட்டதுண்டா?'' என்ற நம் கேள்விக்குச் சிரிப்போடு இரு கரங்களையும் குவித்து- ''இன்று வரை இல்லை'' என்றார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு நிர்மல்சிங் ஹீரா அவர்கள்.

மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி திரு நடேசன், உதவி மக்கள் தொடர்பு அதிகாரிகள் திரு தீனதயாளன், திரு லாரன்ஸ் மூவரும் - 'பாரதி நூற்றாண்டு விழாவை எட்டயபுரத்தில் நாங்கள் சிறப்புற நடத்திட மூல காரணமே மாவட்ட ஆட்சித் தலைவரின் உற்சாகமான வழி காட்டுதலால்தான்' என்று மிகப் பெருமையோடு சொன்னார்கள்.




# ஒரு குடையின் கீழ் ஓங்கிடும் தொழில்கள்!

சமுதாயத்தில் பின் தங்கிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கும் நோக்குடனும், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி பொருள் உற்பத்தியைப் பெருக்கி புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும், கிராம மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் வழி வகுத்து தேசிய அளவில் தனி நபர் வருமானம் உயரவும், அதன் மூலம் மக்கள் வாழ்க்கைத் தரம் சிறக்கவும், ஏற்பாடுகள் செய்யும் முகமாக மாவட்டத் தொழில் மையங்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள், சிறுதொழில்கள் முதலானவற்றைத்தொடங்கி நடத்துவதற்கான எல்லா உதவிகளையும், ஒரே குடையின் கீழ் வழங்கும் அமைப்பாக மாவட்டத் தொழில் மையம் இயங்கி வருகின்றது.

### வழிகாட்டி

நெல்லை மாவட்டத்தில், தொழில் மையம் 1.7.78 முதல் செயல்பட்டு வருகிறது. தொழில்கள் தொடங்கி நடத்துவதற்குத் தேவைப்படும் எல்லா உதவிகளையும் செய்து சிறு தொழில் முனைவோருக்கு நண்பராக, வழிகாட்டியாக, ஆலோசகராக இருந்து முன்னேற்றப் பாதைக்கு வழி வகுத்து வருகிறது. அவை யாவன:

சிறு தொழில் பதிவுச் சான்றிதம் வழங்கல்.

பல்வேறு துறைகளில் இருந்து பல்வகை உரிமங்களையும் விரைவில் பெற்றுத் தருதல்.

இயந்திரம், நிலம், கட்டடம், நடைமுறை மூலதனம் ஆகிய வற்றிற்கு ஆகும் நிதி உதவிக்கு ஏற்பாடுகள் செய்தல்.

தொழில் நுட்ப ஆலோசனை வழங்குதல்,

மூலப் பொருட்கள் கிடைக்க வகை செய்தல்,

கிராமக் கைத் தொழில், சிறு வியாபாரம் ஆகியன தொடங்கி நடத்துவதற்கு உதவுதல்,

பொருளாதார அமைப்புக்களைக் கண்டறிந்து புதிய தொழில்களைத் தொடங்க தகுந்த இடங்கள் தேர்வு செய்தல்,

கிராமக் கைவினைஞர்களுக்குச் சிறு ரகத் தொழிற் கூடத்திற்கு ஏற்பாடுகள் செய்தல்,

நடைபெற்று வரும் தொழில்களை விரிவாக்க நிதி உதவிக்கு ஏற்பாடுகள் செய்தல்,

நலிவுற்ற தொழில்களைச் சீர்படுத்தி புத்துயிரூட்டல்,

தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்.

### வேலை வாய்ப்புகள்

இம்மாவட்டத்தில் தொழில் மையம் அமைத்த பின், 1440 நிரந்தரப் பதிவுச் சான்றிதழ்களும், 5218 தற்காலிகச் சான்றிதழ்களும், 1928 கைவினைஞர் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இத்தொழிலகங்கள் மூலம் சுமார் 13,650 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்துள்ளன.

தொழில் முனைவோரைக் கண்டறிந்து, புதிய தொழில்களைத் துவக்க வழி வகுக்கும் வகையில் இம்மாவட்டத்தில் 35 தொழில் ஊக்குவிப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 936 தொழில் முனைவோர் கண்டறியப்பட்டுள்ளனர்.

### பின் தங்கிய வட்டங்களில்

பின் தங்கிய வட்டங்களாகிய தென்காசி, சங்கரன்கோவில், செங்கோட்டை ஆகிய வட்டங்களில் தொழில் வளரும் நோக்குடன் தீவிர தொழில் ஊக்குவிப்பு முகாம் 22.10.82 அன்று குற்றாலம் நகரிய கலைவாணர் கலையரங்கில் தேசிய சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினரால், மாவட்டத் தொழில் மையத்தின் உதவியுடன் நடத்தப்பட்டது. இந்த ஊக்குவிப்பு முகாமிற்குத் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அருணாசலம் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் 150 தொழில் முனைவோர் கண்டறியப்பட்டதுடன், மாவட்டத் தொழில் மையம் மற்றும் தேசிய சிறு தொழில் நிறுவனங்களின் செயல்முறைகள் பற்றி தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. இக்கூட்டத்தில் 21சிறு தொழில் முனைவோர்களுக்கு ரூ 7,40,899 மதிப்புள்ள இயந்திரங்கள் வழங்குவதற்காக உள்ள உத்தரவுகள் வழங்கியதுடன். ஏழு நிறுவனங்களுக்கு முற்றுப் பொருகள் விற்பனை பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும் 16 தற்காலிகச் சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் புதிய தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

புதிதாகத் தொழில் துவங்குவோருக்குத் தேவைப்படும் உரிமங்களை எளிதில் பெற மாவட்ட ஆலோசனைக் குழுக் கூட்டம் 14 முறை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டுள்ளது. இக் கூட்டத்தின் வாயிலாக சுமார் 167 உரிமங்கள் பெறுதல் சம்பந்தமான பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

### தொழிற் பயிற்சித் திட்டம்

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுமார் 1131 பேர்களுக்கு உதவித் தொகையுடன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குடிசைத் தொழில், கிராமத் தொழில், சிறுதொழில் துவக்க வழி வகுக்கும் வகையில் பயிற்சி தேவைப்படுவோருக்குத் தகுந்த பயிற்சி அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் மானியத்துடன் கருவிகள் வழங் வழங்கும் திட்டமும் உள்ளது. இப்பயிற்சித் திட்டம் தற்சமயம் மாவட்ட ஊரக வளர்ச்சித்திட்ட அலுவலரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**மா. ரத்தினம்**
பொதுமேலாளர்,
மாவட்டத் தொழில் மையம்
திருநெல்வேலி.



தூத்துக்குடி ஆல்காலிக் கெமிக்கல்ஸ் உரத் தொழிற்சாலை தயாரிப்புகளை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பார்வை யிடுகிறார்.

**அரசு தொழிற் கடன்**

கிராமப் புறங்களில் தொழில் வளரும் நோக்கத்துடன் குறைந்த வட்டியில் (6 ) விதைப் பண மாக சிறு தொழில் நிறுவனங் களுக்கு ரூ.10,000 வரை வழங் கப்பட்டு வருகின்றது. இத்திட் டத்தின் கீழ் ஒவ்வோராண்டும் ரூ. 3 இலட்சம் வரை இம்மாவட்டத் தொழில் மையம் வழங்கிவரு கிறது. ரூ 11,28,000 கடன் வழங் கியுள்ளது. இவ்வாண்டு ஒதுக்கீடு ரூ 4 இலட்சமாக உயர்த்தப்பட் டுள்ளது.

சிறு தொழில் நிறுவனங்களுக்கு குக் கட்டடம் கட்டுவதற்கும், இயந்திரம் மற்றும் தளவாடங் கள் வாங்குவதற்கும் தேவை யான நீண்டகாலக் கடன்களை வங்கியிலிருந்து பெற இம்மாவட் டத் தொழில் மையம் ஆவன செய்து வருகின்றது. இப்பணிக் கென்றே ஒரு தனிப்பட்ட மேலா ளர் தேசியமயமாக்கப்பட்ட வங் கியிலிருந்து பெறப்பட்டு இவ் வலுவலகத்தில் பணிபுரிகிறார். இதுநாள் வரை சுமார் 2758 நிறுவனங்களுக்குச் சுமார் 193 இலட்ச ரூபாய் வங்கிக் கடன் பெற இம் மையம் வழி வகை செய்துள்ளது.

**தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

தொழில் ஆரம்பிப்பதற்கான பொருளாதாரம், மூலப் பொருள் விற்பனை வசதி, சாதுரியம், அனைத்தும் ஒரே இடத்தில் சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவின ரிடம் இருப்பது அரிது. அத்த கைய சூழ்நிலையில் தொழில் ஆரம்பிக்க சிறந்த இயக்கம் தொழிற் கூட்டுறவுச் சங்கமே யாகும். மொத்தம் 126 சங்கங் கள் இயங்கிவருகின்றன. இவற் றால் கிட்டத்தட்ட 30,000 பேர் களுக்கு நிரந்தரமான, இலாபகர மான வேலை வாய்ப்புக் கிடைத் துள்ளது. மேலும் எந்தெந்த இட களில், எந்தெந்தத் தொழில்கள் ஆரம்பிப்பதற்குச் சாத்தியக்கூறு இருக்கின்றனஎன்பதைஆராய்ந்து அந்தந்த இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கத் தக்க ஏற் பாடுகள் செய்யப்பட்டு வருகின் றன.

ஆதி திராவிட மக்களுக்குக் காக இம்மாவட்டத்தில் ஏர்வாடி மற்றும் கோவில்பட்டி ஆகிய இடங்களில் சிறு தீப்பெட்டி தயா ரிப்போர் சேவை தொழிற் கூட்டு றவுச் சங்கங்கள் பதியப்பட்டுத் தொடங்கப்பட்டுள்ளன. பங்கு மூலதனக் கடனாக ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த தொழில் முனைவோருக்கு ரூ 1,00,000 கொடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத் தொழில் மையம் தொழில் முனைவோருக்கும், தொழில் அதிபர்களுக்கும் உற்ற நண்பராகவும் வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும், விளங் குவதுடன், தொழில் துவக்க விழாவிலும் பங்கு பெற்று ஊக்கு வித்து வருகின்றது.

## மாவட்டத் தொழில் மையம் - சில

## புள்ளி விவரங்கள்

**1982** நவம்பர் திங்களில் 20 தொழில்கள் நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்டு, அதற்கான சிறு தொழில் சான்றுகள் வழங் கப்பட்டுள்ளன. இதன் மூலம் 120 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

42 சிறு தொழில்களுக்குப் புதிதாகத் தொழில் துவங்கும் பொருட்டு தற்காலிக சிறு தொழில் சான்றுகள் வழங்கப் பட்டுள்ளன.

27 சிறு தொழில்கள் மற்றும் கைவினைத் தொழில்களுக்கு ரூ. 2.23 இலட்சம் கடன தொகை வழங்க தேசியமய மாக்கப்பட்ட வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

30 சிறு தொழில் மற்றும் கைவினைத தொழில்களுக்குத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் ரூ. 1.07 இலட்சம் கடன் ஒப் பளித்துள்ளன.

1982-83 ஆம் ஆண்டுக்கு ஊரகத் தொழில்களுக்குத் தொழில் கடன் வழங்கும் திட் டத்தின் கீழ் ரூ. 4.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட் டத்தின் கீழ் இதுவரை ரூ. 95,500 கடன் ஒப்பளிக்கப்பட் டுள்ளது.

1982 நவம்பர் திங்களில் 49 கைவினைத் தொழில் பதிவு செய்யப்பட்டு சான்றுகள் வழங் கப்பட்டுள்ளன. இதன் மூலம் 95 ஆதிதிராவிடப் பெண் களுக்கு வேலை வாய்ப்பளிக்கப் பட்டுள்ளது.

உடன்குடி ஊராட்சியில் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், பனை நார்த்தொழில் மற் றும் வானொலிப் பெட்டி பழுது பார்த்தல் முதலானவற்றில் பயிற்சி பெற நபர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர்.





# எட்டயபுரம் மகளிர் பல்தொழில் பயிலகம்



**பெ**ண் அடிமை நீங்கவேண்டுமெனக் குரல் கொடுத்த மகாகவி பாரதி நினைவாக எட்டயபுரத்தில் 'பாரதியார் நூற்றாண்டு நினைவு அரசினர் மகளிர் பாலிடெக்னிக்' ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதற்கென ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஒண்ணேகால் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் முதல்வராகத் திரு. கு. வீரன் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிறார். 29-10-82 முதல் வகுப்புகள் தொடங்கப் பெற்ற இந்த மகளிர் பாலிடெக்னிக், எட்டயபுரம் ஜமீந்தார் சத்திரத்தில் தற்சமயம் நடக்கிறது.

எட்டயபுரம் - கோயில் பட்டி சாலையில் சுமார் 40 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு 75 இலட்சம் ரூபாய் செலவில் நிரந்தரக் கட்டடப் பணிகள் துவங்கியுள்ளன.

இப்போது இம் மகளிர் பாலிடெக்னிக்கில் மின்னணுவியலில் 40 பேரும், இயந்திரவியலில் 40 பேருமாக 80 மாணவிகள் படிக்கிறார்கள். அலங்கார ஆடை வடிவமைப்பு - ஆடை தயாரித்தல் பிரிவில் 42 மாணவிகள் படிக்கிறார்கள்.



இந்த 122 மாணவிகளும் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அல்ல; கன்னியாகுமரி, மதுரை, இராமநாதபுரம், தர்மபுரி ஆகிய பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் உள்ளனர்.

தொழிற் கல்விப் படிப்பின் கால அளவு மூன்றாண்டுகளாகும்.

முதல்வர் உட்பட 20 ஆசிரியர்கள் பணியாற்றும் இங்கே படிப்பு முடிந்து வெளியேறும் மாணவிகள் தமிழக அரசின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுடர் வீசும் எதிர்காலத்தைக் காண்பார்கள் என்பது உறுதி!

**— பி.எல்.ஆர்.**





# நீர் வளம்

—இல. இராசேந்திரன்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 'நீரின்றி அமையாது உலகு' என்ற சின்னத்தை அங்கிங்கெனாதபடி தமிழகமெங்கும் பார்க்கிறோம் நாம். அச்சின்னத்தின் கீழ் நடைபெறுகின்ற பணிகள் நெல்லைச் சீமையிலே நிறைய இருப்பதை நம்மால் காண முடிகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் 3420 கிராமங்கள் இருக்கின்றன என்றால், எல்லாக் கிராமங்களுக்குமே எவ்விதச் சங்கடமும் இன்றிப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட வேண்டுமென்ற கருத்தில் அவை ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில். முதல்-இரண்டாம் வகையினைச் சேர்ந்தவை குடிநீருக்கு வழி சிறிதும் அற்ற கிராமங்களாகும். அத்தகைய 246 கிராமங்களுக்கு 1978-79 ஆம் ஆண்டுகளில் ஏறத்தாழ ரூ. 152 இலட்சம் செலவில் குடிநீர் கிட்டச் செய்யும் பணி சிறப்புற நடைபெற்றுள்ளது. இத்திட்டத்தால் 1.37 இலட்சம் பேர் இம் மாவட்டத்தில் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

1980-81-ல், தன்னிகரற்ற தன்னிறைவுத் திட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்கென நெல்லை மாவட்டத்தில் ஐந்து கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அத்திட்டத்தின் மூலம் 61 லட்சம் ரூபாய் செலவில் 54 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள அத்திட்டங்களால் ஏறக்குறைய 25 ஆயிரம் மக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

1981-82 ஆம் ஆண்டுகளில் இரண்டாம் கட்டமாக நிறைவேற்றுவதற்கென நெல்லை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 ஊராட்சி ஒன்றியங்களில் 109 கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. ரூபாய் 107 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள இத்திட்டங்களாலே பயன்பெற்றிடும் மக்கள் தொகை சற்றேறக்குறைய 49,500 ஆகும்.

### பயன் பெறுவோர்

இவை தவிர—நடப்பு நிதியாண்டில், தன்னிறைவுத் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகளின் கீழ் 14 ஊராட்சி ஒன்றியங்களின் கிராம மக்கள் நலன் கருதி ரூ. 268 இலட்சம் குடிநீருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. 208 கிராமங்களில் நிறைவேற்றப்படவிருக்கும் குடிநீர்த் திட்டத்தால் இவ்வாண்டில் 1,47,000 பேர் பயன்பெற்றிடுவர்.

நெல்லை மாவட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் திட்டப்பணிகள் இவை மட்டுமா என்றால் அதுதான் இல்லை!

மேலும் 809 கிராமங்களில், மக்கள் விண்ணப்பங்களை ஏற்று தங்கு தடையின்றிக் குடிநீர் கிட்டச் செய்யும்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது இங்கே. இதனால் 11 இலட்சம் பேர் பயன் பெற உள்ளனர்.

மாவட்ட வளர்ச்சி நிதியிலேயிருந்து, நடப்பு ஆண்டில் பருவ மழை தவறியதால் தண்ணீர் தட்டுப்பாடு நேர்ந்துவிடலாகாது தண்ணீர் தண்ணீர்' என்ற தவிப்பேற்படக் கூடாது என்ற நற்கருத்தில் ரூ. 35 இலட்சம் செலவில் 138 கிராமங்களுக்கு ஆழ்குழாய்க் கிணறுகள் போடப்பட்டுள்ளன. சிறப்புத் திட்டமென வகுக்கப்பட்டு நூறு இலட்சம் ரூபாய் செலவில் 490 கிராமங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்திடும் பணி அல்லும் பகலும் நடைபெற்று வருகிறது.

கிராமப்புறக் குடிநீர்த்திட்டப் பணிகள் இப்படி 'கிறுகிறு'வென நடந்து வருகின்றன நெல்லை மாவட்டத்தில்.

### தூத்துக்குடி திட்டங்கள்

தேர்வுநிலை பெற்ற தூத்துக்குடி நகராட்சியின் மக்கள் தொகை 1,92,000 ஆகும்.

துறைமுக நகரான இங்குள்ள மக்கள் நலன் கருதி தமிழ்நாடு



குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பல்வேறு பணிகள் நிறை வேற்றப்பட்டுள்ளன.

20 மில்லியன் காலன் குடிநீர்த் திட்டம், 3 மில்லியன் காலன் குடிநீர்த் திட்டம், தூத்துக்குடி குடிநீர் வளர்ச்சித் திட்டம், காயல்பட்டினம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், காயல்பட்டினம் குடிநீர் வளர்ச்சித் திட்டம், ஆறுமுகநேரி பேரூராட்சிக் குடிநீர்த் திட்டம், காயல்பட்டினம் பேரூராட்சிக் குடிநீர்த் திட்டம், புன்னகாயல் குடிநீர்த்திட்டம், தூத்துக்குடி பாதாள சாக்கடைத் திட்டம்—எனப் பல திட்டங்கள் தூத்துக்குடியில் நிறைவேற்றப் பட்டு, மக்கள் பயன் பெற்று மகிழ்ந்து வருகின்றனர்.

**நகர்ப்புறத் திட்டம்**

திருநெல்வேலி நகர மக்களுக் குப் பயன்படும் விதத்தில் ரூ. 57.62 இலட்சம் செலவில் பல் வேறு பணிகள் நிறைவேறி வரு கின்றன.

பேட்டையில் 8 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உடைய தாகவும், பழைய பேட்டையில் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்டதாகவும், நெல்லைச் சந்திப்பில் ( Junction ) 8 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உடையதாகவும், கண்டியப்பேரி மருத்துவமனையருகே 10 லட்சம் லிட்டர் கொள்ளளவோடும் பிரம் மாண்டமான மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைக்கப் பட்டு வருகின்றன. மிக விரைவில் இவை முடிவுற்றுப் பயனுக்கு வரும்.

இன்னும் - பாளையங் கோட்டை, நாசரேத், கோபால புரம் குடிநீர்த் திட்டப் பணி களும், திருநெல்வேலி வடிகால் திட்டப் பணியும் மளமளவென நடை பெற்று வருகின்றன.

நகரில் இப்போதே சிறிதள வும் தண்ணீர்த் தட்டுப்பாடில் லாத அளவில் பலவகைப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ள போதி லும் மேற்காணும் திட்டங்கள் நிறைவேறி விரைவிலேயே நெஞ் சம் நிறைவுறுவர் நெல்லை நகர மக்கள் என்பது உறுதி!

# மஞ்சள்நீர்க்காயலில் மாபெரும் குடிநீர்த்திட்டம்



**த**மிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகளில், நெல்லை மாவட்டத்தில் உள்ள மஞ்சள்நீர்க் காயல் திட்டமொன்று குறிப்பிடத் தக்கதாக உள்ளது.

தூத்துக்குடியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் வழியில், 17வது கிலோமீட்டரில் உள்ள இந்தச் சிறு கிராமத்தின் மேற்கே ரூ 360 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதி யிலுள்ள இந்தக் குடிநீர்த்திட்டம் மிகப்பெரும் தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் வழங்குவதற் கென்றே 32 ஏக்கர் பரப்பளவில் உருவாகி யுள்ளது.

இந்தக் குடிநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தி லிருந்து—தூத்துக்குடியிலுள்ள 'ஸ்பிக்' தொழிற் சாலைக்கு 9 மில்லியன் காலனும், அனல் மின் நிலையத்திற்கு 1.33 மில்லியன் காலனும், தாரங்கதாரா கெமிக்கல்ஸ்சுக்கு 1.5 மில்லியன் காலனும், தூத்துக்குடி ஆல்காலிக் கெமிகல்ஸ் சுக்கு 2 காலன் மில்லியன் காலனும், மிகப் பெரும் நீர்த்திட்டமொன்றுக்கு 1.6 மில்லியன் காலனும் ஒவ்வொரு நாளும் தண்ணீர் வழங்கப் பட்டுவருகிறது.

தாமிரபரணியாற்றின் வடக்கு முக்கியக் கால்வாயிலிருந்தும், அங்கே நீர் குறையும் போது ஆறுமுகமங்கலம் குளத்திலிருந்தும் மஞ்சள் நீர்க்காயல் குடிநீர்ச் சுத்திகரிப்பு நிலை யத்திற்கு நீர் கொணரப்படுகிறது. மிகப்பெரும் அளவில் இங்கே அமைக்கப்பட்டுள்ள நீர்த் தொட்டியின் கொள்ளளவு 20 மில்லியன் காலன் ஆகும்.

இத்திட்டம் ஒழுங்குற இயங்க 125 பேர் பணிபுரிகின்றனர்.

இயற்கையன்னை கொலுவிலிருக்கும் மஞ்சள் நீர்க்காயல் கிராமம் இத்திட்டத்தின் மூலம் இன்னும் மேம்படவிருக்கிறது.



## ஜக்கம்மா திருவிழா



பாஞ்சைப் பஞ்தியில் வளர்ந்தோங்கும்—வீர
பாண்டியக் கட்டபொம் மேந்திரன் மேல்
வாஞ்சையாய்க் கும்மி தமிழ்பாட—திரு
வாக்கருள் செய்வாளே ஜக்கதேவி...

ஜக்கதேவி கோயில் ஆலயமாம்—நல்ல
சன்னதி வாசல் விலாசங்களாம்!
மிக்க நெடுங்தெரு வீதிகளாம்—ராசா
வீற்றிருக்கும் கொலு மண்டபமாம்!

ஆசார வாசல் அலங்காரம்—துரை
ராசர் கட்டபொம்மு சிங்காரம்
பூவாசம் வீசும் புகழ்வீசும்—எங்கும்
பொன்வாடை வீசும் அரண்மனையில்...

—ஆண்டுதோறும் சித்திரை கடைசி வெள்ளியில் நடக்கும் பாஞ்சாலக்குறிச்சி அருள்மிகு ஜக்கம்மா கோயில் திருவிழாவில் கும்மியடித்துப் பெண்கள் பாடும் பழம்பாடல் இது. தகவல்: அக்கோயிலின் ஒரே அறங்காவலர் வீமராசா என்ற ஜெகவீரபாண்டிய சுப்பிரமணிய கட்டபொம்மு (வீரபாண்டியக் கட்டபொம்முவின் வாரிசு)

## திருநெல்வேலிச் சத்துணவு !

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்கிறது புறநானூறு.

அந்த வகையில்,இந்த நாட்டு ஏழை எளிய மக்கள் வீட்டுச் சின்னஞ்சிறு அரும்புகளுக்குக் கல்விக் கண் திறப்பதே நோக்கமாக உருவாக்கப்பட்டதுதான் இலவசச் சத்துணவுத் திட்டம்.

அத்திட்டத்தை நன்முறையிலே செயல்படுத்துவதற்காகத் திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் 4,865 சத்துணவுத் திட்ட மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கல்வித் துறைமூலம் 3,303 சமூக நலத்துறை மூலம் 1,536, மாவட்டப் பிற்பட்டோர் நலத்துறை மூலம் 10, மாவட்ட ஆதி திராவிடர் நலத்துறை மூலம் 24, மாநகராட்சி மூலம் 262 அமைக்கப்பட்டுள்ள அந்தச் சத்துணவுத் திட்ட மையங்கள் மூலம் மொத்தத்தில், நெல்லை மாவட்டத்தில் 5,69,273 மாணவ மாணவிகள் சத்துணவு பெறுகின்றனர்.

ஒவ்வொரு துறை மூலமும் எவ்வளவு குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கப்படுகிறது, நெல்லை மாவட்டத்தில் என்ற விவரமும் கிடைத்திருக்கிறது. இதோ அது:

கல்வித்துறை உணவு மையங்கள் மூலம் 3,82,999 மாணவ, மாணவிகள், சமூக நலத்துறை மையங்கள் மூலம் 1,41,984 பேர், மாவட்ட பிற்பட்டோர் நலத்துறை மையங்கள் மூலம் 1,141 பேர் மாவட்ட ஆதி திராவிடர் நலத்துறை மையங்கள் மூலம் 2,896 பேர் நகராட்சி மையங்கள் மூலம் 40,253 மாணவ மாணவிகள் திருநெல்வேலி மாவட்டத்திலே தினசரி இலவசச் சத்துணவு பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்திற்குத் தேவைப்படுகின்ற உணவுப் பொருட்களை 16 இடங்களில் வைத்துப் பாதுகாத்து (Storage Points) விநியோகித்து வருகின்றனர்.

## சத்துணவுத் திட்டத்திற்குப் பட்ட மரங்கள்

சத்துணவு திட்டத்திற்குத் தேவையான விறகுகளுக்கு ஊராட்சிகளில் உள்ள புறம்போக்கு நிலம் மற்றும் சிறிய நீர்ப்பாசனக் கால்வாய் ஏரிகளில் உள்ள பட்டுப்போன, புயலில் வீழ்ந்த மரங்களைக் குறைந்த விலையில் எடுத்துக் கொள்ளலாம் என்று தமிழக அரசு ஏற்கெனவே ஆணையிட்டிருந்தது. அதுபோல, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான - நெடுஞ்சாலை ஓரங்களில் உள்ள சாலைப் புறம்போக்கு நிலங்களிலுள்ள பட்டுப்போன-புயலால் வீழ்ந்த மரங்களையும் குறைந்த விலையில் சத்துணவுத் திட்டத்திற்காக அடுப்பு எரிக்கக் கொடுக்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

# நெல்லைக்கு வாரீர்

—புலவர் ச. கண்ணபிரான்

திருஞான சம்பந்தர் எங்கள் சீமை
திக்கெல்லாம் புகழுவதாம் என்று ரைத்தார்!
அருமைமிகு செந்தமிழின் சிறப்புக் காத்த
அகத்தியனார் தமிழ்வளர்த்த தெங்கள் மண்ணில்!
பெருமைமிகு தமிழுக்குப் புகழைச் சேர்த்த
புலவர்பலர் வாழ்ந்தபூமி திருநெல்வேலி!
உருக்குவெள்ளி போல்வீழும் குற்றா லத்தில்
உவக்காத நெஞ்சும்ஒரு நெஞ்சா சொல்வீர்!

முற்றியசெங் கரும்பொக்கும் தமிழால் செய்த
முக்கூடற் பள்ளு! படிப்போரை ஈர்க்கும்
குற்றாலக் குறவஞ்சி! சிறுக தையில்
குன்றனைய புகழ்குவித்த புதுமைப் பித்தன்;
பற்றற்றோர் பற்றுவைக்கும் நெல்லை நாதர்;
பாங்குறவே இந்தியாவில் விடுத லைத்தீ
பற்றவைத்த பாரதியார் போன்ற பல்லோர்
பிறந்தஇடம் வாழ்ந்தஇடம் எங்கள் மண்ணே!

தஞ்சையென்ன, நெல்லையிலே பச்சைப் பட்டைத்
தரையெல்லாம் விரித்ததுபோல் விளங்கச் செய்யும்
விஞ்சுபுகழ் பொருநைநதிக் கீடொன் றுண்டா?
வேல்முருகன் திருச்செந்தூர்க் கடலோ ரத்தில்
கொஞ்சிவிளை யாடுகின்ற அலைகள்; பாவக்
கறைநீக்கும் பாவநாசம்; கிறிஸ்த வர்க்கும்
குஞ்சம்வைத்த குல்லாய்கொள் முஸ்லீம் கட்கும்
கொஞ்சமாஇங்கே தலங்கள்? காண வாரீர்!





# குற்றாலம்

திருநெல்வேலியிலிருந்து 56 கி. மீ. தூரத்தில் உள்ளது, திருக்குற்றாலம். இத்தலத்தில் குறும்பலா மரம் மிக்க சிறப்புடையது.

திருக்குற்றாலநாதர் திருக்கோயில், மலை அடிவாரத்தில் சங்கு வடிவத்தில் இருக்கின்றது. இந்தக் கோயிலில், சோழர், பாண்டியர் காலக் கல்வெட்டுகள் நிறைய உள்ளன. கோயிலுக்குப் பக்கத்தில் மலையினின்றும் அழகிய பெரிய அருவி விழுகின்றது. பருவ காலத்தில் (ஜூன்-செப்டம்பர்) இந்தியாவின் பலபகுதிகளிலும் இருந்து எண்ணற்றவர்கள் இங்கு வந்து தங்கி மகிழ்வர். 1300 ஆண்டுகளுக்கு முன்னர் திருஞானசம்பந்தர் "கூதல் மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம்" என்று பாடியுள்ளார்.

இத்தலம், பஞ்ச சபைகளில் ஒன்றாகிய சித்திர சபையை உடையது. திருக்குற்றாலத்திற்குத் திரிகூடராசப்பக் கவிராயர் என்ற பெரும் புலவர், புராணம், குறவஞ்சி இயற்றியுள்ளார். இது மொத்தம் ஒன்பது அருவிகளை உடையது. இதில் பேரருவிதான் முக்கிய அருவி, இவையன்றி சிற்றருவி, செண்பகஅடவி அருவி, தேனருவி, ஐந்தருவி, புலியருவி, பழைய குற்றாலம் அருவி, புது அருவி, பழத்தோட்ட அருவி என பல அருவிகள் பார்ப்போரைப் பரவசப்படுத்தும்.

மலைமீதுள்ள அரிய மூலிகைகளைத் தழுவிக் கொண்டு அருவி வருவதால், இதில் நீராடுவது உடல் நலத்துக்கு உகந்தது என்று கூறுவர். குற்றாலத்துக்குச் சற்று தொலைவில் இலஞ்சி என்ற முருகன் தலமும், சுமார் 8 மைலில் திருமலை என்னும் மலைமீதுள்ள முருகன் தலமும் இருக்கின்றன.

# முன்னேறும் பட்டுத் தொழில்

**கே. இராசப்பா**
**உதவி இயக்குனர்**
**பட்டு வளர்ச்சித் துறை**
**தென்காசி.**

சீன நாட்டு இளவரசி நந்தவனத்தில் அமர்ந்து தேனீர் அருந்திக் கொண்டிருந்தாள். அது சமயம் தேனீர் கோப்பைக்குள் வெண்மையான ஒரு பொருள் வந்து விழுந்தது. அதனை ஒரு குச்சி கொண்டு அப்புறப்படுத்தவும், அப்பொருளினின்றும் மெல்லிய இழைகள் குச்சியில் ஒட்டிக் கொண்டு நீளமாக வெளி வந்தன. அப்பொருளைப் பணியாட்களை அழைத்து அப்புறப்படுத்தச் சொன்னாள் இளவரசி.

பணியாட்கள் வியப்புடன் ஆராய்ந்து கொண்டிருக்கும் பொழுது அவர்களுள் ஒருத்தி அம்மாதிரி பொருட்களை அதிகமாக நந்தவன மரங்களில் பார்த்திருப்பதாகக் கூறினாள். அவள் கூறியபடி நந்தவன மரங்களில் அம்மாதிரி பொருட்களைக் கண்டனர். இறுதியில் அது ஒரு பூச்சியின் கூடு என்றும், காற்றின் அசைவின்போது மரக்கிளையிலிருந்து தவறி அந்தச் சூடான பானத்தில் விழுந்து விட்டது என்றும், சூடான பானத்தில் விழுந்ததால் மெல்லிழைகள் பிரிந்து குச்சியில் ஒட்டிக்கொண்டன என்றும் அறிந்தனர்.

அற்புதமான கூட்டை உருவாக்கியது பட்டுப்பூச்சி என்றும், அப்பூச்சி கட்டிய கூடு பட்டுக்கூடு என்றும், அதனின்றும் வெளிப்பட்ட மெல்லிழைகள்தான் பட்டு என்றும் பின்னர் அவர்களால் உணர முடிந்தது. சுமார் 3000 ஆண்டுகள் வரை பட்டுத்தொழில் சீனாவில் மிக இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு வளர்ந்து வந்தது. பின்னர் நாளடைவில் வணிகப் போக்குவரத்தின் காரணமாக இந்தப் பரம இரகசியம் நாடெங்கிலும் பரவி விட்டது.

பட்டின் பிறப்பிடம் சீனாவாக இருந்த போதிலும், இன்று உலக நாடுகள் பலவற்றிலும் பட்டுத் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கி. மு. 140 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவில் பட்டுத் தொழில் நடைபெற்று வருகிறது.

இயற்கைப் பட்டு நான்கு வகைப்படும். அவை மல்பரி, ஈரி, மூகா, டசார் எனப்படும். மல்பரி என்பது முசுக்கொட்டைச் செடியினைக் குறிக்கும் ஆங்கிலச் சொல். முசுக்கொட்டைச் செடி இலைகளை உண்டு, பட்டு நூலினை உற்பத்தி செய்யும் பட்டுப் பூச்சி இனம் தரும் பட்டு மல்பரி பட்டு.

மலைப்பாங்கான இடமும் குளிர்ச்சியான சீதோஷ்ண நிலையுமே முசுக்கொட்டைச் செடி பயிரிடவும், பட்டுப்புழு வளர்க்கவும் உகந்த நிலை என்ற பழைமையை மாற்றி, மிகக் குறைந்த மழையும் வெப்ப நிலையும் கொண்ட தமிழகப் பட்டிதொட்டிகள் முழுவதும் முசுக்கொட்டைச் செடி சாகுபடியும், பட்டுப்புழு வளர்ப்பும் பெருகி வருகிறது என்றால் அது நவீன அறிவியலின் சாதனை என்றே ஒப்புக் கொள்ள வேண்டும்.

பட்டுத் தொழில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட குடிசைத் தொழில் ஆகும்.

ஒரு ஏக்கர் முசுக்கொட்டைச் செடி பயிரிடுவதால் ஆண்டு முழுவதும் 5 ஆட்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது.

முசுக்கொட்டைச் செடி பயிரிட்டுப் பட்டுப்புழு வளர்க்கும் விவசாயிக்கு மாதந்தோறும் வருமானம் கிடைக்கிறது.

மருந்துக் கொல்லிகள் உபயோகிக்க வேண்டிய தொல்லை இல்லை.

திருட்டுப் பயம் இல்லை.

அதிக நீர் தேவையில்லை.

திருநெல்வேலி மாவட்டத்தில் பட்டுத் தொழிலை அறிமுகப் படுத்தும் முகாமாகத் தென்காசி-குற்றாலம் சாலையில் உள்ள நன்னகரம், குடியிருப்பு, செங்கோட்டை ஆகிய இடங்களில் அரசு சார்பில் பட்டுப் பண்ணைகள் துவக்கப்பட்டன.

அந்நாள் முதல் பட்டுத் தொழில் ஆங்காங்கே தனிப்பட்ட விவசாயப் பெருமக்களால் நடத்தப்பட்டு வந்தாலும், 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதியில் அரசு மேற்கொண்ட தீவிரப் பட்டு வளர்ச்சித் திட்டத்தின் பயனாகப் பட்டுத் தொழில் பெரிதும் வளர்ச்சியுற்றது. இதன் முன்னேற்றத்தைக் கண்ட அரசும் 1979-ஆம் ஆண்டில் இதற்கென தனித் துறையை சேலத்தில் துவங்கியது.

தனித்துறையின் தனிக் கவனத்தில் கிராமங்கள் முழுவதும் பட்டுத் தொழில் பரவி கிராம மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது.






பூக்களல்ல.... புழுக்கள்தாம்!

திருநெல்வேலி மாவட்டத்தில் 1000 ஏக்கரில் முசுக்கொட்டைச் செடி பயிரிடப்பட்டு வருகிறது. ஏறக்குறைய 1200 குடும்பங்கள் பட்டுத் தொழிலில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

மாநிலத் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு முசுக்கொட்டை செடி விதைக்குச்சிகள் இலவசமாக வழங்குதல், தரமான பட்டு முட்டைகள் வழங்குதல், தொழிலில் ஈடுபடுவோர்க்குப் பயிற்சி அளித்துத் தொழில்நுட்ப விவரங்கள் அறிவித்தல், பட்டுப்புழு வளர்ச்சிச் சாதனங்கள் வாங்க மற்றும் பட்டுப் புழு வளர்க்கக் கொட்டகைகள் அமைக்க மானியம் வழங்குதல் போன்ற பணிகளைச் செய்து, பட்டுத் தொழில் திருநெல்வேலி மாவட்டத்தில் செழித்து வளர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



இளைஞர் கையில் இருப்பவை இளம் புழுக்கள்

**பட்டுத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மானியங்கள்**

வீரிய ரக முசுக்கொட்டை செடி பயிரிட மானியம் ஒரு ஏக்கருக்கு ரூ. 250. பட்டு விவசாயப் பயிற்சிக் காலமானியம் (ஒரு மாதத்திற்கு ரூ. 150 வீதம் 3 மாத காலங்களுக்கு). ரூ. 450. ரூ. 300 பெருமான பயிற்சிக் கருவிகள் 50 சத வீத மானியத்தில் ரூ. 150. பட்டுப்புழு வளர்ப்பு உபகரணங்கள் மானியம் ரூ. 500. பட்டுப்புழு வளர்ப்புக் குடில் அமைக்க மானியம் ரூ. 750.

நடப்பு நிதியாண்டில் புதிதாக 500 ஏக்கரில் முசுக்கொட்டைச் செடி சாகுபடியின் கீழ் கொண்டு வரத் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இதற்கென அரசும் 6.21 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

**அரசினர் பட்டுப் பண்ணைகள்**

செங்கோட்டையில் உள்ள அரசு பட்டுப் பண்ணை 42 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வருகிறது. இப்பண்ணையின் புனரமைப்புக்காக அரசு முதற் கட்டமாக ரூ. 7.44 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பண்ணை விவசாயிகளுக்கு முசுக்கொட்டை விதைக்குச்சிகளை வழங்குவதோடு குற்றாலத்தில் உள்ள அரசு பட்டு முட்டை வித்தகத்திற்கு விதைக்கூடுகளை வழங்குகிறது.

புனரமைப்புத் திட்டத்தின் பயனாக 36 இலட்சம் வெளிநாட்டின் விதைக்கூடுகள் மற்றும் 20 லாரி சுமை விதைக்குச்சிகள் உற்பத்தியாகக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அருகில் உள்ள கிராமங்களில் 50-க்கும் மேற்பட்ட குடும்பங்களில் இப்பண்ணையை நம்பி வாழ்க்கையை நடத்துகின்றனர்.

புதிதாகப் பட்டுத் தொழிலில் ஈடுபடுவோர்க்குச் செயல் விளக்

# முத்துசாமி தீட்சிதர் ஆராதனை மண்டபம்



**கர்நாடக சங்கீத மேதை முத்துசாமி தீட்சிதரின் ஆராதனை மண்டபம், எட்டயபுரத்தில் பாரதியார் பேருந்து நிலையத்திற்குப் பக்கத்தில் அழகுற அமைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளை இவ்விடம் வெகுவாகக் கவர்ந்துள்ளது.**

கத்திற்காகவும், சிறந்த பயிற்சியினை வழங்குவதற்காகவும் செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் ஒன்றினைத் திருநெல்வேலியில் நிறுவிட அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. அதற்கென ரூ. 9.46 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இம்மையத்திற்கென நிலத் தேர்வு துரிதமாக நடைபெற்று வருகின்றன.

பட்டுத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்குத் தேவையான தொழில் நுட்பங்கள் எடுத்துரைத்தல் மற்றும் பட்டு முட்டைகள் வழங்குதல் ஆகிய பணிகளுக்காகச் சரக விரிவாக்க மையங்கள் அடைக்கலப்பட்டிணம், கடையநல்லூர், கடையம் களக்காடு, எட்டையபுரம், சங்கரன் கோவில், சாத்தான் குளம், ஆகிய இடங்களில், சிறப்பாக, செயல்பட்டு வருகின்றன.

விவசாயிகளுக்கு ஏற்படும் சந்தேகங்களைப் போக்குவதற்கும் புதிய தொழில் நுட்பங்களை எடுத்துரைப்பதற்கும் அதனைக் கடைப் பிடிக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், மண் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கும் உரமிடுதலின் அவசியத்தை எடுத்துரைப்பதற்கும் புழு வளர்ப்பு மனைகளில் புழு வளர்ப்பு முடிந்த பின் விசைத் தெளிப்பான் கொண்டு பார்மலின் என்னும் கிருமிநாசினி தெளிப்பதற்கும் பிரத்யேகமாகத் தொழில் நுட்பச் சேவை நிலையம் சங்கரன்கோவிலில் செயல்பட்டு வருகிறது.

இதன் பயனை உணர்ந்து அரசு நடப்பு ஆண்டில் இம்மாதிரி இரு நிலையங்கள் இம்மாவட்டத்தில் செயல்பட அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையங்கள் திருநெல்வேலி மற்றும் கடையத்தில் துவங்கப்பட்டுள்ளன.

நெல்லை மாவட்டத்திற்குத் தேவையான பட்டு முட்டைகள் ஒசூர், சேலம், மற்றும் கோயம்புத்தூரில் உள்ள அரசு பட்டு முட்டை வித்தகங்களில் இருந்து பெறப்பட்டு வந்தது. தொலை தூரங்களில் இருந்து முட்டைகளைக் கொண்டு வருவதன் சிரமத்தைத் தவிர்க்கவும் இதனால் ஏற்படும் பாதிப்பினைத் தவிர்க்கவும், காலத்தே முட்டைகளை வழங்கும் நோக்கோடும், அரசு கலப்பினப் பட்டு முட்டை வித்தகம் ஒன்றினைக் குற்றாலத்தில் ரூ. 4.5 இலட்சம் செலவில் கடந்த ஆண்டில் நிறுவியுள்ளது.

இவ்வித்தகம் இம்மாவட்டம் முழுமைக்குமான பட்டு முட்டை தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது. தரமான முட்டைகளைக் காலத்தேவிவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. நடப்பு ஆண்டில் 5 இலட்சம் பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

'விளையும் பயிர் முளையிலே' என்றாற் போல் பட்டுத் தொழிலின் வெற்றி சிறு புழு வளர்ப்பில் தனிக் கவனம் செலுத்துவதில் உள்ளது.

மையங்கள் அடைக்கலப்பட்டினம், இடைகால், வடநத்தம் பட்டி, குருவிகுளம்புதூர், சாத்தான் குளம், நாகலாபுரம், சேரகுளம், மூலக்கரைப்பட்டி ஆகிய எட்டு இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளைக் கொள்முதல் செய்வதற்காக அரசு பட்டுக்கூடு அங்காடிகள் தென்காசி (நன்னகரம்) சங்கரன் கோவில், சாத்தான்குளம், ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. கூடுகளின் தரத்திற்கேற்ற நியாயமான விலை நிர்ணயிக்கப்பட்டு அதற்கான தொகை உடனுக்குடன் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டில் 17,000 கிலோ பட்டுக் கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 85,000 கிலோ பட்டுக் கூடுகள் கொள்முதல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் பட்டுக்கூடுகளிலிருந்து பட்டு நூலினைப் பிரிப்பதற்கு அரசு பட்டு நூற்பகங்கள் தென்காசி, சங்கரன்கோவில் சாத்தான் குளம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு இம்மாவட்டத்தில் 1480 கிலோ பட்டு நூல் உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் 5000 கிலோ பட்டு நூல் உற்பத்தி செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நடப்பு ஆண்டில் மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 403 மிகச் சிறு விவசாயிகள் புதிதாகப் பட்டுத் தொழிலில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக ரூ. 10.3 இலட்சம் மானிய ஒதுக்கீடும் பெறப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில், பட்டுப்புழு வளர்ப்பு, பட்டு நூற்பு ஆகியவைகளில் 290 கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி வழங்கப் பட்டு வருகின்றன. இதற்காக ரூ. 3.05 இலட்சம் ஒதுக்கீடும் பெறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் சேரகுளத்தில் குடியமர்த்தப்பட்ட 30 குடும்பங்கள் பட்டுத் தொழிலில் ஈடுபட ரூ. 36,250 மானியமாக வழங்கப்பட்டது. உறுதியான-நிலையான மாத வருமானம் கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டிலும் இடைகால் அருகே குடியமர்த்தப்பட இருக்கும் 35 குடும்பங்களுக்கு உதவத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய பணிகளினால் கிராமப்புற மக்களுக்குச் சுய வேலைவாய்ப்பிற்கு வழிகோலுவதோடு, பட்டுத் தொழிலில் ஈடுபடும் விவசாயிக்கு மாத வருமானமும் கிடைக்கிறது. மேலும் பட்டு நெசவுக்குத் தேவையான கச்சாப் பட்டினை உற்பத்தி செய்வதன் மூலம் பட்டு நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பினையும் அளிக்கிறது.

## நெல்லை மாவட்டத்தில்...

# நூலக இயக்கம்

இந்தியாவிலேயே முதன் முதல் பொது நூலகச் சட்டத்தை 1948ல் இயற்றி, 1950-ல் அமுலாக்கிய பெருமை தமிழ் நாட்டையே சாரும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நூலகப் பணியின் முதல் கட்டமாக மாவட்ட மைய நூலகம் 5.2.1952ல் பாளையங்கோட்டையில்தான் துவக்கப்பட்டது. 22.3.1954 அன்று நான்குனேரியில் முதல் கிளை நூலகம் செயல்படத் தொடங்கியது. கடந்த முப்பது ஆண்டுக் காலத்தில் 128 கிளை நூலகங்கள் திறக்கப்பட்டு நன்கு பணியாற்றிவருகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பெரும்பான்மையான ஊர்களில் நூலகங்கள் செயல்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பள்ளி ஆசிரியர்கள் உதவியுடன் 18 பகுதி நேர நூலகங்கள் இம்மாவட்டத்தில் செயல்படுகின்றன. மாவட்ட மைய நூலகத்தில் சுற்றுப்புறங்களில் இயங்கு ஊர்தி (Jeep van) மூலம் இயங்கும் நூலகம் பணியாற்றி வருகிறது.

''வீதிகள் தோறும் நூலகம் வேண்டும்'' என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். ஒவ்வொரு வீடும் ஒரு பல்கலைக் கழகமாக வேண்டும் என்ற கருத்தில் வீட்டிற்கு ஒரு நூலகம் வேண்டும் என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இவ்வாறான அறிஞர் பெருமக்களின் பொன்மொழிகளைச் செயல்படுத்த, நூலகம் இல்லாத ஊரே இருக்கக் கூடாது என்ற நோக்கோடு நம் அரசு கிராமங்கள் தோறும் நூலகங்கள் திறந்து வருகிறது. நெல்லை மாவட்டத்தில் 1982-83ஆம் ஆண்டு 127வது கிளை நூலகம் சிவந்திபுரத்திலும் 128வது கிளை நூலகம் பழவூரிலும் திறக்கப்பட்டுள்ளன. பாளையங்கோட்டையில் சிறுவர் சிறுமியர்க்கெனத் தனி நூலகமும், பெருமாள்புரத்தில் பெண்களுக்கென ஒரு தனிக் கிளை நூலகமும் நடைபெறுகின்றன.

**திருநெல்வேலி மாவட்டத்தில் நூலகப் பணி வளர்ச்சி பற்றிய முழு விவரம் பின்வருமாறு**

நூல்கள் இருப்பு 6,27,762. உறுப்பினர்கள் 70,442. ஒரு ஆண்டிற்கு வாசகர்கள் 25,07,492. ஒரு ஆண்டிற்கு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட நூல்கள் 5,50,726. ஒரு ஆண்டிற்கு ஆலோசனைக்கு வழங்கப்பட்ட நூல்கள் 3,50,372. நூல்கள் பயன்பாடு (ஒரு ஆண்டிற்கு) 9,01,098. நன்கொடை மூலம் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்ட ஏழை மாணவர்கள்420. நிலைய உறுப்பினர் திட்டம் மூலம் காவல்துறையின் 6 பிரிவுகள் நூல்கள் மூலம் பயனடைகின்றன.

ஒவ்வொரு நூலகத்திற்கும் நூலக வளர்ச்சிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. நு,லக வளர்ச்சிக்குழு நூலக வளர்ச்சிக்கு பொது மக்கள் ஒத்துழைப்புடன் பல பணிகளைச் செய்து வருகிறது.

ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ. 21,02,000 நூலகத் துறைக்கென நெல்லை மாவட்டத்தில் செலவாகிறது.

நூலகப்பணி, மக்கள் பணி. மக்கள் அதன் பயனை முழுமையாகத் துய்க்க வேண்டும். எனவே, நூலகப் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்ய, மாதந்தோறும் புத்தகக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. மேலும் மாதந்தோறும் இலக்கிய அறிவியல் சொற்பொழிவுகள், பாளையங்கோட்டை மைய நூலகம், திருநெல்வேலி நகர், திருச்செந்தூர், தென்காசி, சங்கரன்கோவில் கிளை நூலகங்களில் நடைபெறுகின்றன.

கடையத்தில், பாரதியார் பாடியதுபோல் காணி நிலத்தில் பாரதியார் நினைவு நூலகக் கட்டடம் கட்ட அரசு ரூ. 50,000 அனுமதித்துள்ளது. இதற்கான கட்டடப் பணி விரைவில் தொடங்கவிருக்கிறது. இதுதவிர, எட்டையபுரத்தில் உமறுப்புலவர் நினைவு நூலகக் கட்டடம் கட்ட என அரசு ரூ.3.5 லட்சம் அனுமதித்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் நூலக வளர்ச்சி மாநாடு நடத்தத் திட்டமிடப்பட்டு, நூலக வளர்ச்சிக் குழுக்களும் ஆக்கப்பணிகளைத் தொடங்கியுள்ளன. நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் பெற-அல்லது கட்டடம் கட்ட மனை பெற நூலகத்திற்குத் தேவையான நூல்கள், தளவாடச் சாமான்களை நன்கொடையாகப் பெற எனப் பல்வேறு முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

**தொ. சி. குப்புசாமி**
**மாவட்ட நூலக அலுவலர்,**
**திருநெல்வேலி.**





# கூட்டுறவு தரும் கோடி நன்மை

**சிவ கிருஷ்ணன்**
தனி அலுவலர்,
திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம்

**பா**பநாசம் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் 'காணிகள்' என்றழைக்கப்படுகின்றனர். எத்தனையோ ஆண்டுகளாகக் கொத்தடிமைகளாக வாழ்ந்து, தனிப்பட்ட 'காண்ட்ராக்டர்' களிடம் சிக்கித்தவித்த இந்த மலை வாழ் மக்களின் இருண்ட வாழ்வில் ஒளி பிறந்தது! ஆம் அன்றுதான் கூட்டுறவுச் சங்கம் மலைவாழ் மக்களுக்காக நெல்லையில் துவக்கப்பட்டது. கொத்தடிமைகளாக வேலை பார்த்து, ஊதியம் காலா காலத்தில் பெறப்படாத அவர்கள் வாழ்வில், இயற்கை அன்னை தந்துள்ள வனப் பொருட்கள் சேகரித்திடும் குத்தகை. அரசின் வனத் துறை மூலம் இந்தக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அளிக்கப்பட்டு முண்டந்துறைவனவிலங்குச் சரணாலயம் பகுதி முழுவதும் வனப் பொருட்கள் சங்க மலை வாழ் மக்களால் சேகரிக்கப்படுகிறது. சமூக நலத்துறை கீழ்க்கண்ட சலுகைகளை இந்தச் சங்கத்திற்கு 8.7.81 அன்று வழங்கியுள்ளது.

(1) வட்டியில்லாத பங்குத் தொகைக் கடன் ரூ.20,000 (2) குத்தகை எடுத்துத் தொழில் நடத்த வட்டியில்லாத மூலதனக் கடன் ரூ. 35,000 (3) மானியம் ரூ. 10,000

மேலும் ரூ 2 இலட்சம் நடைமுறை மூலதனக்கடன் தர அரசு ஆலோசித்து வருகிறது. 1981 செப்டம்பர் திங்கள் முதல் வனப் பொருட்கள் சேகரிக்கும் பணி இந்தச் சங்கத்தில் துவங்கியது.

500 மலை வாழ் மக்கள் வசித்துவரும் பாபநாசம்மேல் அணைக்கட்டுப்பகுதி, காணிக் குடியிருப்பு, இஞ்சிக்குழி, சேர்வலார், கீழ் அணை ஆகிய பகுதிகளில் 200 மலை வாழ் மக்கள் உறுப்பினர் ஆகியுள்ளனர். அவர்கள் விலைமதிப்பற்ற பொருட்களைச் சேகரித்துத் தருகின்றனர். அவை:

கடுக்காய் ஏலக்காய் கொடம்புளி நான்கு முத்து பளிங்குக்காய் குந்திரிக்கம்.

அவர்களது உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலை பெற்றுத்தர கூட்டுறவுத்துறை தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. கொத்தடிமைகளாக வாழ்ந்த மலைவாழ் மக்கள் இன்று உல்லாசப்பறவைகளாக வாழ்கின்றனர். போதிய வருவாய் பெறுகின்றனர். பொருளாதார ரீதியாக மறுமலர்ச்சி கண்டு ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி வெற்றி நடைபோட்டுக்கொண்டிருக்கின்றனர்.



## மணப்பாடு பெண்கள் பனை ஓலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம்

*1980-81* ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற சங்கங்களில் ஒன்று எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் பாராட்டுக் கேடயம் பெற்றது, திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் அருகில் உள்ள மணப்பாடு பெண்கள் பனை ஓலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.

பனை ஓலை இங்கு எவ்வாறெல்லாம் கண்கவர் பொருளாக மாற்றப்பட்டு, மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்பதை ஒவ்வொருவரும் நேரில் பார்த்துப் பெருமைப்பட வேண்டும். ஏற்றுமதியினால் இப்பகுதியில் உள்ள மக்களுக்குப் பெருமளவு வேலை வாய்ப்பு பெருகியுள்ளது.

சாதாரண ஒரு சங்கமாகச் செயல்பட்டு வந்த இது, இன்று வளர்ந்து அந்தப் பகுதி வாழ் மக்களுக்கு வளமான வாழ்வுக்குத் துணை நிற்கிறது.

## செங்கோட்டை விசுவநாதபுரம் பிரம்பு, மூங்கில் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

நெல்லை மாவட்டத்தில் கிராமத் தொழில் துறையின் கீழ் செயல்பட்டு வரும் சங்கம் செங்கோட்டை விசுவநாதபுரம் பிரம்பு மூங்கில் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கமாகும். பொதிகைத் தென்றல் தினம் வீசி பல புதுமைகள் செய்கின்ற பொதிகை மலை அடிவாரத்தில், திருக்குற்றாலத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இந்தச் சங்கம்.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் 100 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தரப்பட்டுள்ளது. கொத்தடிமைகளாக வாழ்ந்து தனிப்பட்டவரிடம் பிரம்பு, மூங்கில் தொழில் செய்தவர்கள், இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம், தொழில் பெற்று வளமோடு வாழ்கிறார்கள்.

சிறிய அளவில் செயல்பட்ட இந்தச் சங்கம் *1977-78* ஆம் ஆண்டில் ரூ 3 இலட்சத்துக்கு விற்பனை செய்தது. இன்று பெருமளவு உற்பத்தி விற்பனை இந்தச் சங்கத்தின் மூலம் நடைபெற்று ரூ. 23000 நிகர இலாபம் பெற்றுள்ளது.

## ஓட்டப்பிடாரத்தில் வ.உ.சி. நினைவு நிலையம்

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த வீட்டில், மாவட்ட நூலக ஆணைக் குழுவின் நூலகம் உள்ளது. இதில் 4056 நூல்கள் இடம் பெற்றுள்ளன. இவையன்றி பல்வேறு இதழ்களும் இங்கு உள்ளன.

வ. உ. சிதம்பரனாரின் வரலாறு, தமிழ்த்தொண்டு ஆகியவை நன்கு தொகுக்கப் பெற்றுக் காட்சிக்கு வைக்கப் பெற்றுள்ளன.




இந்தச் சங்கத்தினுடைய பணிக்கூடத்திற்குத் தமிழக அரசு *3.3.1982* அன்று, *60,000* ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது. இதில் ரூ. *30,000* மானியமாகும்.

அரசின் உதவிகளால் கடந்த 3 ஆண்டுகளாக இந்தச் சங்கத்தின் மூலம் இங்கு பணிபுரியும் தொழிலாளர்களில் பலர் மாதம் ஒன்றுக்கு *900* ரூபாய் வரை ஊதியம் பெறுகின்றனர்.

கண்கவர் பிரம்பு நாற்காலிகள் *60* வடிவமைப்பிலும் நாற்பு ஆலைகளுக்குத் தேவையான கூடைகள் *15* வடிவமைப்பிலும், மற்றும் பிரம்பு சோபாக்களும் இவர்களால் தயாரிக்கப்படுகின்றன.

## ஆறுமுகநேரி உப்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

இராமேசுவரம் - கன்னியாகுமரி கடற்கரைச் சாலையில் தூத்துக்குடியிலிருந்து 24 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது தான் இந்தச் கூட்டுறவுச் சங்கம்.

இந்தப்பகுதியில் உப்புத் தொழிலை நம்பி வாழும் குடும்பங்கள் நூற்றுக்கணக்கில் உள்ளன. அவர்கள் போதிய வருவாய் பெற இந்தக் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்தச் சங்கத்தின் மூலம் உற்பத்தி ஆகும் ''லேபர்சால்ட்'' தமிழகத்தில் மட்டுமல்லாது கேரளா, ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம் ஒரிஸ்ஸா, கோவா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் அதிக அளவு விற்பனை செய்யப்படுகின்றது. *347* தொழிலாளர்கள் இந்தச் சங்கத்தின் மூலம் பயன் பெறுகின்றனர். இத் தொழிலாளர்களுக்குக் குடியிருக்க வீடுகள் கட்டித்தர தமிழக அரசு உதவியிருப்பது சிறப்புத் தன்மையாகும்.

*1976*ஆம் ஆண்டு இந்தச் சங்கம் மூலம் *396* தொழிலாளர்களுக்குத் தரப்பட்ட கூலி ரூ. *2.09* இலட்சம். சங்கம் *1977*க்குப் பின் வளர்ந்து *1980*ஆம் ஆண்டில் *347* தொழிலாளர்களுக்கு ரூ. *5.27* இலட்சம் கூலியாகத் தந்துள்ளது.

## தேன் பொத்தை மண் பாண்ட உற்பத்தியினர் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

திருக்குற்றாலத்துக்கு அருகில் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இந்தக் கூட்டுறவுச் சங்கம். கண்கவர் பொம்மைகள், ஜாடிகள், மண் பாண்டங்கள் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. தனிப்பட்டவர்களுக்குக் குறைந்த விலைக்கு உற்பத்தியை விற்று அடிமைகளாக வாழ்ந்த மண் பாண்டத் தொழிலாளர்கள், இந்தக் கூட்டுறவுச் சங்கம் மூலம் பொருளாதார மறுமலர்ச்சி கண்டுள்ளனர்.

## பாரதி சிறு தொழில் தீப்பெட்டிக் கூட்டுறவுச் சங்கம்

எட்டயபுரம் - கோவில்பட்டிப் பகுதியில் *1978*-ஆம் ஆண்டுக்குப் பின் தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏராளமாகத் துவங்கப்பட்டுள்ளன. அந்த வகையில் சிறப்புத் தன்மை பெற்று விளங்குவது எட்டயபுரம் பாரதி, சிறு தொழில் தீப்பெட்டிக் கூட்டுறவுச் சங்கமாகும். ஜமீன் ஒழிப்பினால் பாதிக்கப்பட்டு தனிப்பட்ட தீப்பெட்டி முதலாளிகளிடம்

சிக்கித் தவித்து, மாதம் 100 ரூபாய் வருவாய் பெற்று தீப் பெட்டித் தொழிலில் ஈடு பட்ட தொழிலாளர்கள் இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ந்து மாத வருவாய் 500 ரூபாயிலிருந்து ரூ. 600 வரை பெறுகிறார்கள்.

வட இந்தியா முழுவதும் இந்தத் தீப்பெட்டி அதிகமாக விற்பனையாகிறது. நெல்லை மாவட்டத்தின் வடபகுதியில் அதிகமாக நடைபெறும் தொழில்களில் தீப்பெட்டித் தொழிலும் ஒன்று. இதன் மூலம் ஆயிரக் கணக்கான பேர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

2595 கூட்டுறவுச் சங் கங்கள் நெல்லை மாவட்டத் தில் செயல்பட்டு வருகின்றன. 9.66 இலட்சம் மக்கள் உறுப் பினர்களாக உள்ளனர்.

கூட்டுறவுகள் மூலம் வழங் கப்பட்ட கடன் ரூ. 17.46 கோடி.

கூட்டுறவு விற்பனைச் சங் கங்கள் மூலம் விவசாயிகளின் விளை பொருட்கள் ரூ. 2.69 கோடிக்கு விற்பனை செய்யப் பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு விற் பனை இணைய நெல்லைக் கிளை ரூ. 2.65 கோடி மதிப் புள்ள 10912 டன் உரம் விநி யோகம் செய்துள்ளன.

கூட்டுறவுப் பண்டக சாலை கள் மூலமாக ரூ. 20.83 கோடிக்கு நுகர் பொருட்களை உபயோகித்துள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 3520 டன் சிமெண்ட் விநியோகிக்கப்பட்டுள்ளது.

மாணவர் கூட்டுறவுப் பண் டக சாலைகள் ரூ. 86 இலட்சம் மதிப்புள்ள மலிவு விலை நோட்டுப் புத்தகங்கள், பாட நூல்கள் வழங்கியுள்ளன.

விவசாயிகள் விளைபொருட் களைச் சேமித்திட 285 கிட் டங்கிகள், கூட்டுறவுச் சங்கங் களால் பராமரிக்கப்பட்டு வரு கின்றன.

2 கூட்டுறவு நூற்பாலைகள் ரூ.17 கோடி மதிப்புள்ள 5,625 டன் நூல் உற்பத்தி செய் துள்ளன.

621 பால் கூட்டுறவுச் சங் கங்கள் ரூ. 6.13 கோடி மதிப் புள்ள பால் விநியோகம் செய் துள்ளன.

505 கதர் கிராமத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 83 இலட்சம் மதிப்புள்ள பொருட் களை உற்பத்தி செய்துள்ளன.

128 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.3.15 கோடி மதிப் புள்ள பொருட்களை உற்பத்தி செய்துள்ளன.

49 மீனவர்கூட்டுறவுச் சங் கங்கள் ரூ.6 இலட்சம் கடன், உபகரணங்கள்வழங்கியுள்ளன.

103 வீட்டுவசதிச் சங்கங்கள் ரூ. 2 கோடி கடன் வழங்கி கட் டப்பட்ட வீடுகளின் எண் ணிக்கை 9,357.

102 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 1.78 கோடி மதிப்புள்ள ரூ.35.87 இலட்சம் மீட்டர் கைத்தறித் துணியை உற்பத்தி செய்துள்ளன.



மரத்திலிருந்து குங்குலியம் எடுத்தல்

## பழமையான நகராட்சி

திருநெல்வேலி நகராட்சி மிகவும் பழமை வாய்ந்தது. இது 1.1.1886 முதல் செயல்பட்டு வருகிறது. இது தேர்வு நிலை நகராட்சியாக ஆக்கப்பட்டுள்ளது.



நகராட்சியின் சார்பில் 1 நடுத்தரப் பள்ளி, 2 உயர்நிலைப்பள்ளி 3 மேல்நிலைப்பள்ளிகள் உள. இதன் மூலம் 4700 மாணவர்கள் கல்வி கற் கிறார்கள். 18 துவக்கப்பள்ளிகள் மூலம் 5300 மாணவர்கள் பயனடைகிறார்கள்.

மருத்துவ நிலையங்கள்—அலோபதி 5, சித்தா 2, குடும்ப நல மையம் 1, மகப்பேறு மையங்கள் 7, மகப்பேறு நிலையங்கள் 4 இவை யன்றி, 85.377 கி.மீ தூரத்துக்குச் சாலைகள் போடப்பட்டுள்ளன. தெரு விளக்குகளின் எண்ணிக்கை 1750.

நகராட்சி சார்பில் படிப்பகங்கள், ஓய்வு இல்லம், திருமண மண்டபம், அங்காடிகள், பேருந்து நிலையம், பங்க்குகள், கட்டணக் கழிப்பிடங்கள், பொதுக் குடிநீர்க் குழாய்கள் உள்ளன. இவையன்றி வீடுகளுக்கும் குடிநீர்க் குழாய்கள் போடப்பட்டுள்ளன. இதன் மூலம் ஆண்டுக்கு ரூ. 5.5 இலட்சம் வருமானம் கிடைக்கிறது.

# கடமை தவறாத காவல் துறை



காவல்துறை கண்காணிப்பாளர், கூடுதல் கண்காணிப்பாளர், உதவி கண்காணிப்பாளர், துணைக் கண்காணிப்பாளர், வட்ட ஆய்வாளர், உதவி ஆய்வாளர், ஆயுதப் படை ஆய்வாளர், ஆயுதப்படை உதவி ஆய்வாளர், ஆயுதப்படை இளம் உதவி ஆய்வாளர், தலைமைக் காவலர்கள், முதனிலைக் காவலர்கள், பெண் உதவி ஆய்வாளர்கள், பெண் தலைமைக் காவலர்கள், பெண் முதனிலைக் காவலர்கள் என நெல்லை மாவட்டத் டக் காவல்துறையில் மொத்தம் 3362 பேர் பணியாற்றுகின்றனர்.

இவர்கள், கடமையே கண்ணாகப் பணியாற்றிடவென 85 காவல் நிலையங்கள் இங்குள்ளன.



புறக்காவல் நிலையங்களோ 25 உள்ளன.

வீட்டுநலம் கருதாமல் நாட்டு நலம் காப்போரானாலும் காவல் துறையினர் குடியிருக்க வீடு வேண்டாமா? அவர்கள் குடும்ப நலனில் பெரும் அக்கறை கொண்ட தமிழக அரசு, நெல்லை மாவட்டக் காவல் துறையினருக் கெனக் கட்டித் தந்துள்ள வீடுகளின் எண்ணிக்கை 1702 ஆகும். இவை தவிர மேலும் 235 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. 310 வீடுகள் கட்டப்பட உள்ளன.

தமிழக அரசு, காவல்துறையினருக்கென அண்மைக் காலத்தில் வழங்கிய பொதுச் சலுகைகளான உயிர்ப்பாதுகாப்புப் படி, மலிவு விலையில் உணவுப்பொருள் போன்ற யாவும் இம் மாவட்டக் காவல் துறையினருக்கும் பயனளித்து வருகின்றன.

இந்த மாவட்டத்தில் பெண் போலீசாருக்கெனத் தனிக்காவல் நிலையம் ஏதுமில்லை எனினும், 'ஜங்ஷன்' காவல் நிலையத்தை யொட்டி புதியதோர் தனிக் கட்டடம் கட்டித்தரப்பட்டுள்ளது.

சிறந்து முறையில் பணிபுரிந்ததற்கெனவும், வீரதீரச் செயல் புரிந்தமைக்கெனவும் வழங்கப்படும் 'முதலமைச்சர் விருது' நெல்லை மாவட்டக் காவல் துறையைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் திரு. தங்கராஜ், திரு. முத்தையா இருவருக்கும் கிடைத்திருப்பதைப் பெருமையோடு தெரிவித்தார்கள் டி.ஐ.ஜி. திரு ராஜ்மோகன், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. ஆர்.வி.கோபாலன் ஆகியோர்.

'முதலமைச்சர் விருது' பெற்ற இருவரில் ஒருவரான திரு. (மூக்கத் தேவர்) முத்தையா — 1980ல் திருநெல்வேலி மாவட்டம் குரிஞ்சக்குளத்தில், விவசாயிகள் போராட்டம் என்ற பெயரில் அராஜகங்கள் கடைவிரிக்கப்பட்டபோது, உயிரைத் துச்சமென மதித்துக் கடமையாற்றி அங்கே அமைதி நிலவச் செய்தவர். முப்பத்திரண்டு காலக் காவல்துறைப் பணியில் அப்பழுக்கற்ற கடமை வீரராகத் திகழ்ந்திருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் சொல்லுவதானால்- திருநெல்வேலி மாவட்டக் காவல் துறையினர் அனைவருமே கடமை வீரர்களாக விளங்கி வருகின்றனர்.

# கால்நடை பராமரிப்பு

கால்நடைகள் நாட்டிற்கு நிறைந்த பயனளிக்கக்கூடியவை இவை வேளாண் மக்களின் முதுகெலும்பாகத் திகழ்கின்றன. நாட்டின் பொருளாதாரம் இவற்றால் முன்னேற்றம் அடைகிறது. இவற்றால் கிடைக்கும் இறைச்சி, பால், முட்டையால் மக்களுக்குத் தேவையான புரதச்சத்து கிடைக்கின்றது. மேலும் இவற்றினின்று கிடைக்கும் துணைப் பொருட்களின் ஏற்றுமதியால் அந்நியச் செலாவணி ஏற்றம் பெறுகிறது. இவ்வாறு நல்ல பயன்கள் அளிக்கும் கால்நடைகளின் ஏற்றத்திற்காகக் கால்நடைப்பராமரிப்புத் துறை ஆற்றிவரும் பணிகள் ஏராளம்.





நெல்லை மாவட்டத்தில் இத்துறை ஆற்றிவரும் பணிகள் பல தரப்பட்டவைகளாகும். வேளாண் மக்கள் - குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழைகளின் தரம் உயரப்பல திட்டங்கள் தீட்டப்பட்டு அவை சிறப்பாக நடந்து வருகின்றன இங்கே.

### மேற்குத் தொடர்ச்சி மலை கன்றுகள் வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளான தென்காசி, செங்கோட்டை, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, சிவகிரி, சங்கரன்கோவில் வட்டங்களில் கலப்பினக்கிடேரிக் கன்றுகள் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட எருமைக் கிடேரிக் கன்றுகளுக்குத் தீவனம் மானிய விலையில் ஏழை வேளாண்குடி மக்களுக்கு அளிக்கப்படுகிறது. தீவன விலையில் மானியமாக விவசாயக் கூலிகளுக்கு 50 சதவீதம் 66 1/3 சதவீதம் சிறுவிவசாயிகள் மற்றும் குறு விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் தரும் தீவனம் நவீன முறையில் தயாரிக்கப்பட்ட கலப்புத் தீவனமாகும். கன்றுக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் இத் தீவனத்தில் கலந்துள்ளன. இதனால் இதை உண்ணும் கன்றுகள் உடல் வளர்ச்சி பெற்று விரைவில் சினைக்கு வரும் பருவம் பெறுகின்றன.

இவை பசுக்களாகும்போது பால் அதிக அளவில் கொடுக்க வாய்ப்புண்டு. கன்றுகள் 4-வது மாத முதல் 28 மாதம் முடிய தீவனம் பெறுகின்றன.

இத்திட்டத்தால் நெல்லை மாவட்டத்தில் 450 கன்றுகள் பயன்பெறுகின்றன. இதற்கான நிதி ஒதுக்கீடு தொகை ரூபாய் 4,66,833 ஆகும்.

### கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம்

இத்திட்டத்தினால் இம் மாவட்டத்திலுள்ள நாட்டு மாடுகளின் தரம் உயர்த்தப்படுகிறது. கலப்பினக் கன்றுகள் பெருக்கப்படுகின்றன. இதனால் இம் மாவட்டத்தின் பால் உற்பத்தியில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மாடுகளுக்குப் பச்சைத் தீவனம் அளிக்க, தீவனப்புல் வளர்ப்புப் பணிகள் செய்யப்படுகின்றன; இதனால் மாடுகள் விரைவில் சினைப்பிடிக்கவும்பால் உற்பத்தி பெருகவும் வழிகோலப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் கால்நடைகளுக்கு வரும் கொடிய தொற்று நோய்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டு நோய்வராது தடுக்கப்படுகிறது. தேவையற்ற நாட்டுக் காளைகளால் ஏற்படும் தீமைகளை நீக்க அவைகள் காயடிக்கப்படுகின்றன.

கரும்பும் கொடுத்து அதைத் தின்னக்கூலியும் கொடுப்பது போல் நல்ல கலப்பினக் கன்றுகள் பெறுவதற்கு மேலை இனக்காளைகளின் விந்தினைச் செயற்கை முறையில் பசுக்களுக்குக் கருத்தரிப்புச் செய்வதோடு அவற்றினின்று பெறும் கிடேரிக்கன்றுகளைச் சரியாக வளர்ப்பதற்குக் ''கன்று மானியமும்'' அளிக்கப்படுகிறது. கன்றுகளின் 6 மாத வயதிலிருந்து சுமார் 30 மாதங்களுக்கு ரூ. 15 மாதத்திற்கு மானியமாக வழங்கப்படுகிறது. முதலில் ரூபாய் பத்து மட்டும் வழங்கப்பட்டு, பின் அக்கன்று பசுவாகி ஈன்றபின் மீதமுள்ள ரூபாய் 5 மொத்தமாகத் தரப்படுகிறது. கன்றுகள் வளர்ப்பில் விவசாயிகளுக்கு நல்ல ஊக்கம் அளிக்க இது உதவி புரிகின்றது.

### திரவ நைட்ரஜன் தயாரிப்பு-உறைவிந்து தயாரிக்கும் நிலையம்

இம்மாவட்டத்தில் இதுவரை திரவ விந்து மூலமாகவே மாடுகளுக்குச் செயற்கை முறைக் கருத்தரிப்புப் பணி நடைபெற்று வருகிறது. உறைவிந்து மூலம் கருத்தரிப்புச் செய்திட முனைப்பான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

உறைவிந்து பயன்படுத்துவதால் பல நன்மைகள் உள்ளன. திரவ விந்து பயன்படுத்துவதால் ஏற்படும் பல தடைகள் இதனால் உடைக்கப்பட்டு உயர்வுக்கு இது வழிவகுக்கிறது.

காளையின் விந்து திடப்பொருளாய் உறையச் செய்யப்பட்டு நீண்ட காலத்திற்குப் பயன்படுத்தவும் நீண்ட தொலைவுகளுக்கு எளிதில் எடுத்துச் செல்லவும் இதனால் எளிதாகிறது. இது இருபது ஆண்டுகள் வரை கெடாது பாதுகாப்பாக வைக்க வசதியுடையது என நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த உறை நிலை விந்தினைப் பாதுகாத்து வைப்பதற்குத் திரவ நைட்ரஜன் மிகவும் தேவை. இத் திரவ நைட்ரஜன் தயாரிக்க இந் நிலையம் நெல்லைக்கு அருகிலுள்ள அபிசேகப்பட்டியில் நிறுவப்பட்டு வருகிறது. ரூ. 19.22 இலட்சம் செலவில் இத்திட்டம் விரைவில் செயலாக்கப்படவிருக்கிறது.

**டாக்டர்**
**பி. என். பாலகோபால்,**
**கால்நடை பராமரிப்பு இணை இயக்குநர்,**
**திருநெல்வேலி.**

## எட்டயபுரத்தில் உமறுப்புலவர் தர்கா

எட்டயபுரத்தில் சீறாப்புராணம் தந்த உமறுப்புலவர் தர்கா உள்ளது. 1904-ஆம் ஆண்டு தை மாதம் 12-ந்தேதி கட்டப்பட்டது இது.



## உறைவிந்து பயிற்சி நிலையத் திட்டம்

இத்திட்டத்தால் செயற்கை முறைக் கருத்தரிப்புப் பணியிலுள்ள கால்நடை ஆய்வாளர்களுக்கு, உறைவிந்தினைப் பயன்படுத்தி எவ்வாறு கருத்தரிப்புப் பணி மேற்கொள்வது என்பது பற்றி சிறப்பான பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆண்டுக்கு 240 கால்நடை ஆய்வாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1981 டிசம்பரில் இப்பயிற்சி துவங்கப்பட்டு இதுவரை 376 கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளார்கள். இத்திட்டம் அபிசேகப்பட்டி மாவட்டக் கால்நடைப் பண்ணையில் செயல்பட்டு வருகிறது.

கால்நடைகளுக்கு உண்டாகும் நோய்களைத் தவிர்த்திட நோய்ப் புலனாய்வுத் திட்டம் என்றஒன்று சரியான முறையில் செயலாக்கப்பட்டு விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ள திட்டமாய் விளங்கி வருகிறது.

## சிறப்புக் கால்நடைத் திட்டம்

இது மத்திய அரசோடு இணைந்த மாநிலத்திட்டமான சிறப்புக் கால் நடைத்திட்டம். திருநெல்வேலி மாவட்டத்தில் 1976 லிருந்து செயல்பட்டு வருகிறது. இது ஆடுவளர்ப்புக்கு ஊக்கம் அளிக்கிறது. இதனால் சிறிய மற்றும் குறு விவசாயிகளோடு விவசாயக்கூலிகளும் பெரிதும் பயன்படுகின்றனர். இவ்வாறான சுமார் 5000 குடும்பங்கள் இத்திட்டத்தால் நன்மை பெறுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் ஆடு வளர்க்கும் விவசாயிகளுக்கு 20 செம்மறி ஆடுகளும், ஒரு செம்மறி ஆட்டுக்கிடாவும் வாங்கிட ரூ. 3500 வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. இக்கடன் தொகையில் மானியமாகச் சிறிய விவசாயிகளுக்கு 25 சதவீதம் குறு விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகளுக்கு 33 1/3 சதவீதம் என அளிக்கப்படுகிறது.

ஆடுவளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு அதன் அங்கத்தினர்களுக்குத் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. இதனால் ஆடுவளர்ப்போர் பெரிதும் பயனடைந்து வருகின்றனர். ஆடுகளின் உற்பத்தி நெல்லை மாவட்டத்தில் பெருகி வருகிறது. மேலும், ஆடுகளின் நல்வாழ்வுக்கு நோய்த்தடுப்பு மற்றும் குடல் புழு நீக்கப்பணி இத்திட்டத்தின் கீழ் பணிபுரிபவர்களால் அவ்வப்போது செய்யப்படுகின்றன.

## கேந்திர கிராமத் திட்டம்

கேந்திர கிராமத் திட்டத்தில் 10 கேந்திர கிராமக் கிளை நிலையங்கள் நிறுவப்பட்டு ஒவ்வொன்றுக்கும் 10 கிளைநிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கலப்பின இனவிருத்தி மூலமோ அல்லது தரம் உயர்த்தப்படுவது மூலமோ நம் மாவட்டத்திலுள்ள நாட்டு மாடுகளின் தரத்தினை உயர்த்தி பால் பெருக்கம் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். செயற்கை முறைக் கருத்தரிப்புப்பணி கிராமங்களில் செய்யப்படுகிறது. இத்திட்டத்திலும் கருத்தரிப்பில் பிறந்த சிறந்த கன்றுகளுக்கு மானியம் அளிக்கப்படுகிறது.

## நடமாடும் கால்நடை மருத்துவக் குழு

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இம் மாவட்டத்தில் எண்ணிறைந்த பசு, எருமை, ஆடுகள், கோழிகள், வாத்துக்கள் பல்வேறு கிராமங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றிற்கான நல்வாழ்வுப்பணி காலநடைப பராமரிப்புத் துறையினரால் செய்யப்பட்டுவருகிறது. ஆனாலும் கிராமங்களுக்கு முறையான காலத்தில் சென்று தேவையான உதவிகள் புரிய நடமாடும் மருத்துவக்குழு ஒன்று 9.9.82ல் திருநெல்வேலி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் உதவியோடு இம்மாவட்டத்தில் நிறுவப்பட்டது.

இக்குழுவிற்கு நடமாடும் ஊர்தி ஒன்று தரப்பட்டுள்ளது. இதன் மூலம் இக்குழுவினர் கிராமங்களுக்குச் சென்று பராமரிப்புப் பணிகளை ஆற்றி வருகின்றனர்.

## ஆட்டு இறைச்சி அதிகரிப்புத் திட்டம்

பல்வேறு திட்டங்களின் மூலம் செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை இம்மாவட்டத்தில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இறைச்சிக்காகவே பொதுவாக இங்கு ஆடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. ஆடுகளின் உடல் எடை அதிகரிக்க அவற்றின் குடல்புழுக்கள் நீக்கப்படவேண்டும். சென்ற ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் இம்மாவட்டத்திலுள்ள செம்மறி ஆடுகளுக்கு இருமுறை குடல் புழு நீக்கம் செய்யப்பட்டது. குடல் புழுநீக்கம் செய்யும் முன்பும் பின்பும் அதன் எடை நிறுக்கப்பட்டு கணக்கிடப்பட்டது. சாதாரணமாக ஏற்படும் எடை அதிகரிப்பைக் காட்டிலும் இக்குடற் புழு நீக்கப்பணியின் பின்பு அதிக எடை அதிகரிப்பு ஏற்பட்டது.

இவ்வாறான பல்வேறு திட்டங்கள் சிறப்பான முறையில் திருநெல்வேலி மாவட்டத்தில் கால்நடைபராமரிப்புப்புத் துறையினரால் செயலாக்கப்படுகின்றன.

## மாவட்ட கால்நடைப் பண்ணை

இத்தோடு இம்மாவட்டத்தில் அபிசேகப்பட்டியில் ஒரு மாவட்

டக் கால் நடை பண்ணை அமைந்திருப்பது இம்மாவட்டத்திற்கே ஒரு தலையாய சிறப்பாகும்.

சிறந்த கால்நடைகளை வளர்த்து விவசாயிகளுக்கு ஒரு மாதிரிப் பண்ணை போன்றும் தகுந்த சமயத்தில் அவர்களுக்கு அவற்றினை வழங்கவும் இப் பண்ணை பெரிதும் உதவுகிறது.

இப்பண்ணை 1946.14 ஏக்கர் நிலத்தில் செயல்பட்டுவருகிறது. கலப்பினப்பசுக்கள் தரமான எருமைகள் உயரின ஆடுகள் யார்க்சயர் சீமைப் பன்றிகள் உயரினக்கோழிகள் இங்கு வளர்க்கப்பட்டு வருகின்றன.

**பசுமடம்– ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.**

பசுக்களை பொது நிலையங்களில் சிறந்த முறையில் பராமரிக்க ஊக்கம் கொடுக்கும் பொருட்டு பசு மடத்திட்டம் தமிழக அரசால் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இம் மாவட்ட குற்றாலம் ஸ்ரீபராசக்தி மகளிர் கலைக் கல்லூரியில் ஒரு பசுமடம் நிறுவப்பட்டுள்ளது. இதுவரை 15 பசுக்கள் அரசால் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. கல்லூரி நிர்வாகம் 15 மாடுகள் வாங்கியுள்ளது. பசுவுக்குப் பராமரிக்கப்படும் செலவு ஆண்டுக்கு ரூ.800-ம் கன்றுகள் பராமரிப்புக்கு ரூ 600ம் அளிக்கப்படுகிறது. இப்பசுமடம் ஒரு மாதிரிப் பண்ணையாய்த் திகழ்கிறது. கன்றுகள், சுற்றியுள்ள விவசாயிகளுக்கு விற்கப்பட்டுள்ளன. இப்பசுமடத்திலுள்ள மாடுகளுக்குஎல்லா விதக் கால்நடை உதவிகளும் துறையைச் சார்ந்த அலுவலர்களால் அவ்வப்போது அளிக்கப்பட்டு வருகின்றன.

இங்கு நோயுள்ள கால்நடைகளுக்கான சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோய்த் தடுப்புப்பணி, செயற்கைமுறைக் கருத்தரிப்புப் பணி, காயடித்தல் போன்ற பல பணிகளும் செய்யப்படுகின்றன.

மேலும் இம்மாவட்டத்தில் வெக்கைநோய் என்ற கொடுமையான தொற்றுநோய் மாடு ஆடுகளைத் தாக்கா வண்ணம் தடுப்பு நடவடிக்கை எடுத்திட இரண்டு வெக்கை நோய்த் தடுப்புப் பணி திட்டப்பிரிவுகள் இயங்கி வருகின்றன.

இம்மாவட்டத்தில் கால்நடை பெரு மருத்துவமனைகள் - 6ம், தலைமை மருத்துவரின்கீழ் உள்ள பெரு மருத்துவமனைகள் -2ம், கால்நடை மருத்துவமனைகள் -49ம், கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் -150ம், கோழிப்பண்ணைகள் -3ம், சிறப்புறச் செயலாற்றி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



# திருநெல்வேலி மாவட்டத்தில் கதர் திட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் 6 கதிர் இராட்டைகள் கொண்ட 49 கிராமிய நூற்பு நிலையங்களும் 12 கதிர் இராட்டைகள் கொண்ட 4 கிராமிய நூற்பு நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கிராமிய நூற்பு நிலையத்திலும் 30 மகளிர் நூற்போர்கள் பயன் அடைகின்றனர். மொத்தம் 1,590 நூற்போர்கள் பயன் அடைகின்றனர். இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 4 முதல் ரூ. 6 வரை கூலி வழங்கப்படுகிறது.

**நூல் உற்பத்தி**

| ஆண்டு | நூற்போர் | உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1979-80 | 775 | 23.37 |
| 1780-81 | 888 | 28.00 |
| 1781-82 | 915 | 35.71 |
| 1982-83 (நவம்பர் முடிய) | 1590 | 22.30 |

மேற்படி நூற்பு நிலையங்களுக்குத் தேவையான பஞ்சுப் பட்டை தயாரிக்க வள்ளியூரில் கார்டிங் யூனிட் ஒன்று ஐந்து கார்டுகளுடன் நிறுவப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 11 கதர் துணைக் கிளைகள் இயங்கி வருகின்றன. அவைகளில் 25 நெசவாளர்கள் கதர் நெசவு செய்து வருகிறார்கள். ஒவ்வொரு நெசவாளர்களுக்கும் வாரத்திற்கு ரூ. 100 வீதம் கூலி வழங்கப்படுகிறது.

**கதர் உற்பத்தி**

| ஆண்டு | உற்பத்தி மீட்டர் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1979-80 | 2.58 | 15.60 |
| 1980-81 | 3.60 | 25.20 |
| 1981-82 | 5.52 | 44.06 |
| 1882-83 (நவம்பர் முடிய) | 3.24 | 27.90 |

இம்மாவட்டத்தில் 11 காதி கிராப்ட் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. 1981-82ம் ஆண்டில் ரூ. 43 இலட்சம் மதிப்புள்ள கதர் ரகங்கள் விற்பனை ஆகியுள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் 1981ஆம் ஆண்டு அதிகப்படியாகக் கதர் விற்பனை செய்த பின்வரும் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. திருச்செந்தூர், சங்கரன்கோவில், செங்கோட்டை, தென்காசி.

கடந்த ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திற்கு 41 இலட்சம் இலக்கு என நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால், 43 இலட்சம் மதிப்புள்ள கதர் ரகங்கள் விற்பனை செய்யப்பட்டு இக்குறியீட்டையும் விஞ்சியது. இந்த ஆண்டு 45 இலட்சம் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி குறியீடும் அடையப்பட்டது.

தூத்துக்குடியில் 'ஸ்பெஷல் காம்பொனெண்ட்' திட்டத்தின் கீழ் நேபால் தறி நெசவுக்கூடம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அதனால் 39 பெண் நெசவாளர்கள் பயன் பெறுவார்கள். ஒவ்வொரு நெசவாளர்களும் தினம் ஒன்றுக்கு ரூ. 6 முதல் ரூ. 8வரை. கூலி பெற வாய்ப்பு உள்ளது இது போன்று ஆதி திராவிடப் பெண்களுக்கு, புளியங்குடியில் 12 கதிர் இராட்டை அலகு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.




தமிழகத்தின் தென் பகுதியில் உள்ள நெல்லை மாவட்டத்தில் பாளையங்கோட்டையில் இயங்கி வரும் அரசு சித்த மருத்துவக் கல்லூரி, இந்தியாவிலேயே, ஏன் உலகத்திலேயே சித்த மருத்துவத்தைப் போதிக்கும் ஒரே கல்லூரி என்னும் சிறப்புடன் இயங்கி வருகிறது. அரசினர் இந்திய முறை மருத்துவக்கல்லூரி என முன்பு அழைக்கப்பட்டு வந்த இக் கல்லூரி, சித்த மருத்துவ மேம்பாட்டுக் குழுவின் வேண்டுகோளின் படி, தற்பொழுது 'அரசு சித்த மருத்துவக் கல்லூரி' என்ற பெயருடன் சிறந்து விளங்குகிறது.

1980 ஆம் ஆண்டு முதல் எழுபத்து ஐந்து மாணவர்கள் தேர்வு செய்து பி.ஐ.எம் பயிற்சிக்குச் சேர்க்கப்படுகிறார்கள். முதலில் பி.ஐ.எம். பயிற்சிக் காலம் நான்கு ஆண்டு படிப்பும், ஒரு ஆண்டுக் காலம் பயிற்சி மருத்துவர் பணியும் அடங்கியதாகும். இக் கல்லூரி தற்பொழுது மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ளது. 1977-78ஆம் ஆண்டு முதல் பி.ஐ.எம் பட்டப் படிப்பை பி.எஸ்.எம்.எஸ் என்று மாற்றி படிப்புக் காலத்தை ஐந்து ஆண்டுப்படிப்பும், ஆறு மாத காலம் பயிற்சி மருத்துவர் பணியும் என்று பாடத்திட்டத்தை மாற்றி அமைக்கப்பட்டது. இது நாள் வரை, 401 பி.ஐ.எம் பி.எஸ்.எம்.எஸ். பட்டதாரிகள் வெளி வந்து மாநிலத்திலுள்ள பல்வேறு மாவட்ட, வட்ட மருத்துவமனை, சித்த மருத்துவப்பிரிவுகளிலும், ஆரம்பச் சுகாதார நிலையத்திலும் பணி புரிந்து வருகின்றனர். பி.எஸ்.எம்.எஸ். பயிற்சிக்கான கல்வித் தகுதி மாற்றப்பட்டதனால் முன்னர், அதற்கான நுழைவுத் தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் பி. எஸ். எம். எஸ். பயிற்சியில் சேரத் தகுதியுடையவர்களாகக் கொண்டுவர அவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டி, தமிழகஅரசுஇக் கல்லூரியில் 1981 82-ஆம் ஆண்டில் புகுமுக சித்தா (Pre - Sidha) என்ற பயிற்சியை 14.12.81 அன்று தொடங்கியது. இருபத்து ஐந்து மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கான பயிற்சி நடந்து வருகின்றது. இவர்களுக்கு மாதம் ரூ.75வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. பி.எஸ்.எம்,எஸ். பட்டப் படிப்பு மாணவர்களுக்கு மாதம் ரூ.75 உதவித் தொகையும், பயிற்சி மருத்துவர்களுக்கு ரூ 175 உதவித் தொகையும் அளித்து வருகின்றது. 20.1.75 முதல் இக் கல்லூரி 10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

**முதுநிலைப் பட்டப்படிப்புத் துறை**

1972 ஆம் ஆண்டு முதல் இக் கல்லூரியில் மேற்பட்டபடிப்பு எம்.டி. (சித்தா) பயிற்சி மத்திய அரசின் நிதி உதவியுடன் தொடங்கியுள்ளது எம்.டி. (சித்தா) பட்டப் படிப்பில் மருத்துவப் பிரிவு, குணப்பாடப் பிரிவு என்று இரு பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவிற்கும் முறையே பத்து மாணவர்கள் வீதம் தேர்வு செய்து பயிற்சி அளித்து வருகின்றது. மேற்பட்ட படிப்பின் பயிற்சிக் காலம் மூன்று ஆண்டுகளாகும். அவர்கள் மூன்று ஆண்டுகளும் பல்கலைக்கழகத் தேர்வுகள் எழுதுவதோடு இறுதியாண்டில் நோய்கள், மருந்துகள் பற்றிய விவரங்களைத் தீவிரமாக ஆராய்ச்சி செய்து, இறுதியாண்டில் ஆய்வுக் கட்டுரை (dissertations) வழங்குவார்கள். எம்.டி.(சித்தா) பட்டப்படிப்பு மாணவர்களுக்கு ஆங்கில மருத்துவத் தத்துவங்களையும், தெரிந்து கொள்வதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் ஏதுவாக ஆங்கில மருத்துவ முறையில் பட்டம் பெற்ற மருத்துவர்கள், நியமிக்கப்பட்டுள்ளனர். மேற்பட்டப்படிப்பு மாணவர்கள் அவர்கள் கல்வி போதனைகளை மனத்திற் கொண்டு ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றார்கள். மேற்பட்ட படிப்புப் பயிற்சி தொடங்கிய நாள் முதல் இது நாள் வரை நாற்பத்து ஒன்று மேல் படிப்புப் பட்டதாரிகள் வெளி வந்துள்ளார்கள். அவர்களில் இருபத்து நான்கு பட்டதாரிகள் நோய்கள் பற்றிய ஆராய்ச்சியிலும், பதினேழு பட்டதாரிகள் மருந்துகள் பற்றிய ஆராய்ச்சியிலும் தேர்ச்சி பெற்று வெளி வந்துள்ளார்கள்.

இன்று குமரி முதல் டெல்லி வரை இங்கு பயின்று வெளிச்சென்றவர்கள் தங்களுடைய சீரிய கல்வியின் திறத்தால் சித்த மருத்துவத்தை வளர்த்து வளப்படுத்தி வருகின்றார்கள். மேற்பட்ட படிப்பு மாணவர்கள் ஒவ்வொரு மாதமும் ரூ.375 வீதம் உதவித் தொகைபெற்று கல்வி பயின்று வருகின்றார்கள். 1981-82-ஆம் ஆண்டு முதல் பணியினின்று ஐந்து ஆண்டு பூர்த்தியாகி படிக்க வரும் பீ. ஐ.எம். மருத்துவர்களுக்கு சில தனிச் சலுகைகளைத் தமிழக அரசு அளித்து மாதம் ரூ.650 உதவித் தொகையும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அவர்கள் படிக்கும் காலத்தைப் படிப்பு விடுப்பு என்று அளித்து ஆங்கில முறைக் கல்விக்கு ஏற்ப தமிழக அரசு விரிவாக்கியுள்ளது.

**மேல் பட்டப் படிப்புத் துறையின் ஆராய்ச்சிச் சாதனைகள்**

உயிர் வேதியியல் ( Bio Chemistry Department ) துறையில் சீரிய ஆராய்ச்சிகள் நடைபெற்றன. சுமார் முப்பது ஆராய்ச்சிக் குறிப்புகள் இந்திய முறை மருத்துவ இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளன.

**மருந்தியல் துறை (Pharmacology)**

இத்துறை இக் கல்லூரியை அகில இந்திய அளவில் உயர்த்

**டாக்டர் வி. சுப்பிரமணியம்,**
முதல்வர்
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி
பாளையங்கோட்டை

தியது என்று கூறினால் மிகையாகாது. அயராத உழைப்பின் பயனாக இத்துறை இதுவரை சுமார் அறுபது ஆராய்ச்சிக் கட்டுரைகளைஇந்திய மருத்துவத்துறை இயக்குநருக்கு வழங்கியுள்ளது. ஒரு கட்டுரை பிரான்சு நாட்டில் 1980ல் நடந்த அகில உலக மருத்துவ ஆராய்ச்சி மாநாட்டில் படிக்கப்பட்டது. பல கட்டுரைகள் தலை சிறந்த ஆராய்ச்சி ஏடுகளிலும் வெளியாகி உள்ளன. தேசிய விருதுகள் 1978ஆம் ஆண்டு அகில இந்திய அளவில் இந்திய முறை மருத்துவத்துறை ஆராய்ச்சிக்காக ஸ்ரீஹரி ஓம் ஆசிரம தங்கப்பதக்கம் நிறுவப்பட்டது. அந்த ஆண்டு இந்திய மருத்துவத்தில் அனுபானத்தில் விஞ்ஞான அடிப்படை' என்ற ஆராய்ச்சியின் படைப்பிற்காகஜே.ஜோசப்தாஸ் அவர்களுக்கு இந்தியாவின் முதல் தங்கப்பதக்கம் கிடைத்தது. இப்பதக்கத்தைப் பெற்ற முதல் தமிழன் மட்டுமல்ல; முதல் இந்தியரும் இவரே!

அடுத்த ஆண்டு (1979) இந்திய மருத்துவத்தில் ''பத்தியம், அபத்தியம் ஆகியவற்றின் விஞ்ஞான அடிப்படை'' என்ற மற்றொரு ஆராய்ச்சிக் கட்டுரைக்கு அந்த ஆண்டில் தங்கப்பதக்கம் ஸ்ரீ ஹரி ஓம் ஆசிரமத்தினரால் வழங்கப்பட்டது.

1980-ஆம் ஆண்டு ''மருந்துகளின் செயலெதிர் செயல்தான் (Drug inter action) அனுபானம், பத்தியம் ஆகியவற்றின் விஞ்ஞான அடிப்படை'' என்ற கட்டுரை அந்த ஆண்டின் தங்கப்பதக்கத்தை அன்னாருக்குத் தந்தது. அதே 1980ஆம் ஆண்டு போட்டிக்கு மதுரை காமராசர் உயிர் வேதியியல் துறை ஆராய்ச்சியாளர்களுடன் கூட்டு முயற்சியில் ''அமுக்கரா கிழங்கு'' பற்றி ஆராய்ச்சி முடிவுகள் கட்டுரை வடிவில் வழங்கப்பட்டன. அக்கட்டுரையும் அந்த ஆண்டு மற்றுமொரு தங்கப்பதக்கத்தையும் பெற்றது.

**இரண்டு ஆண்டு மருந்தாளுநர் பயிற்சி**

இக் கல்லூரியில் முதலில் ஓராண்டு மருந்தாளுநர் பயிற்சி தொடங்கி அதை இரு ஆண்டு பயிற்சியாக 1974-75 முதல் விரிவாக்கப்பட்டுள்ளது: முதலில் எட்டு மாணவர்கள் சேர்க்கப்பட்டு, பின்பு இருபத்து ஐந்து மாணவர்கள் என விரிவாக்கப்பட்டு மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். இது நாள் வரை அறுபத்து நான்கு மாணவர்கள் தேர்ச்சி பெற்று வெளி வந்து இம் மாநிலத்திலுள்ள பல்வேறு மருத்துவ நிலையங்களில் பணியாற்றி வருகின்றார்கள்.

8.20 இலட்ச ரூபாய் செலவில் 108 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைக்கட்டடம் முதல்கட்டமாகத் தமிழக அரசால் அனுமதி அளித்து கட்டப்பட்டு 21-1-75 முதல் செயல்பட்டு வருவதுடன் 5.95 இலட்ச ரூபாய் செலவில் 100 படுக்கைகள் கொண்ட மற்றுமொரு கட்டடமும், எழுப்பி, செப்டம்பர் 77 முதல் செயல்பட்டு வருகின்றது. தற்சமயம் இருநூற்று எட்டு படுக்கைகள் மருத்துவமனையில் உள்ளன. 3.32 இலட்ச ரூபாய் செலவில் இருபத்து நான்கு படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பகுதி கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன. தினமும் சுமார் அறுநூற்று ஐம்பது நோயாளிகள் வெளி நோயாளர் பகுதியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். புதிய வெளி நோயாளிகள் பகுதி கட்டப்பட்டு ஏப்ரல் 1978 முதல் செயல்பட்டு வருகின்றது.

மருத்துவமனையில் பின்வரும் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன. 1.ஆண்கள் மருத்துவப் பகுதி, 2.பெண்கள் மருத்துவப் பகுதி, 3.ஆண்கள் அறுவை மருத்துவப் பகுதி, 4. பெண்கள் அறுவை மருத்துவப் பகுதி, 5. மகப்பேறு, மகளிர் நோய்ப் பிரிவு, 6.தொக்கணம், 7.குழந்தைகள் பிரிவு, 8. வர்மம், 9. பட்ட மேற்படிப்பு மருத்துவப் பிரிவு.

மருத்துவமனையில் உள் நோயாளிகள் சராசரியாக இருநூறுக்கு மேல் தங்கிச் சிகிச்சை பெறுகின்றனர். மூட்டுவாதம் பக்கவாதம், வர்மம், காமாலை, குன்மம், பாண்டு இரைப்பு, இளம் பிள்ளை வாதம், கழிச்சல், தோல் நோய்கள், மேக நோய்கள் போன்ற நோய்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு குணப்படுத்தப்பட்டு வருகின்றது. இம் மருத்துவமனையில் பல்வேறு ஊர்களினின்றும் நோயாளிகள் வருகை தந்து சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

நிலக்கரிக்குப் பதில் எண்ணெய்

தூத்துக்குடி அனல் மின்சார நிலையத்தில் நிலக்கரிக்குப் பதிலாக அதிவேக கந்தக எண்ணெயையும் உபயோகப்படுத்தலாம் என்ற தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

99,000 ரூபாய் செலவில் பசுமை இல்லம் தமிழக அரசால் நியமிக்கப்பட்டு செயல்படும் நிலையில் உள்ளது. இதில் கிடைத்தற்கரிய மூலிகைகள் பயிரிட்டு ஆராய்ச்சி செய்யப்படும்.

மூலிகை ஆய்வுத் திட்டம் (சித்தா) ஆயுர்வேதா சித்தா மத்திய ஆராய்ச்சிக் கழகம் புது டெல்லியின் தமிழ்நாட்டுக் கிளையாகப் பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியினுள் அமைந்து 1971-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது.

தமிழ்நாட்டின் மூலிகை வளங்களைக் கண்டறிவதுடன் அவைகளின் மாதிரிகள் ஹெர்போரியம் முறையில் பக்குவப்படுத்தி பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**மருத்துவ ஆராய்ச்சி நிலையம்**

இக்கல்லூரியின் வளைவிற்குள் (சித்த) மருத்துவ ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஆயுர்வேத, சித்த மத்திய ஆராய்ச்சிக் கழகம் புது டெல்லியின் நிர்வாகத்தின் கீழ் 1980 முதல் செயல்பட்டு வருகின்றது. இதன் ஆராய்ச்சிக்காகப் பத்து படுக்கைகள் ஒதுக்கி, பாண்டு, காக்காய் வலிப்பு, கழிச்சல் போன்ற நோய்களுக்குப் பரிகாரத்திற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. இந்த நிலையத்திற்குக் கல்லூரி முதல்வர் கவுரவ திட்ட அலுவலராகப் பணி புரிந்து வருகின்றார்.

இக்கல்லூரியில் 3.4 இலட்ச ரூபாய் செலவில் உடற்கூறு கட்டடம் அமைந்துள்ளது. மேலும் அதற்கு வேண்டிய தளவாடங்கள் ரூ. 99,200க்கு வாங்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

30.90 இலட்சம் ரூபாய்க்கு 204 மாணவர்கள் தங்குவதற்கு வசதியாகப் புதிய ஆண்கள் விடுதி வண்ணார்ப் பேட்டையில் கட்ட தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. அந்தக் கட்டடப் பணி முடிவுறும் தறுவாயில் உள்ளது.

இக்கல்லூரி வளைவிற்குள் ஐம்பத்து நான்கு மாணவிகள் தங்குவதற்கு வசதியாக ஆறு இலட்ச ரூபாய் செலவில் கட்டடம் கட்ட தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. கட்டடப் பணி முடிவுறும் நிலையிலுள்ளது. நான்கு இலட்ச ரூபாய் செலவில் மருத்துவமனைக் கட்டடத்தின் இரண்டாவது அடுக்காகப் பயிற்சி மருத்துவர் விடுதி கட்ட தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. கட்டடப் பணி முடிவுறும் தருணத்தில் உள்ளது.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

**1—1—83**

சேலம் மாவட்டத்தில் ஆனைமடுவு நீர்த்தேக்கத் திட்டத்திற்கும் கரியகோயில் நீர்த்தேக்கத் திட்டத்திற்கும், நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு கா. இராஜாமுகமது அடிக்கல் நாட்டினார். இத் திட்டங்கள் 11 கோடி செலவில் நிறைவேற்றப்படும்.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடியைச் சமாளிக்க வழிவகைகள் காணுவது பற்றி ஆராய 45 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு இருப்பதாக மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

'தமிழ்மாநில பெண்கள் வேலைவாய்ப்புக் கழகம்' என்ற அமைப்பு ரூ. 208 இலட்சம் செலவில் விரைவில் தொடங்கப்பட இருப்பதாக மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் அறிவித்தார்.

**2—1—83**

தமிழக அரசின் பத்திரிகைச் சட்டம் தற்காப்பு ஆயுதந்தான், அது தாக்கும் ஆயுதம் அல்ல என்று மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

கிராமப்புறங்களில் வீட்டுவசதி வாரியத்தின் சார்பில், தவணை முறையில் வீடு கட்டித் தரும் திட்டத்தைச் சேலம் மாவட்டம் பள்ளிப்பாளையம் அருகே ஆயக்காடு கிராமத்தில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**3—1—83**

இலட்சோப லட்சம் குழந்தைகள் பட்டினி கிடக்க விடமாட்டோம்; எந்த நிலையிலும் சத்துணவுத் திட்டத்தைக் கைவிட மாட்டோம் என்றும் சத்துணவு திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்றும் மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்தார்.

'ரிசர்வ் வங்கி'யின் அதிகப்பற்று இன்றியே தமிழக அரசின் நிதிநிலைமை சிறப்பாக உள்ளது என்று மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர்இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாட்டிலுள்ள இஸ்லாமியப் பெருமக்களுக்குத் தமிழக அரசு, பல்வேறு சலுகைகள் அளித்து வருகிறது என்று மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு கா. இராஜாமுகமது அவர்கள் அறிவித்தார்.

ஒரே வீட்டில் பல குடும்பங்கள் வசித்தால், அந்த வீடுகளுக்கு மின்சார வெட்டிலிருந்து சலுகை அளிப்பதுபற்றி அரசு ஆலோசித்து வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்.

**4—1—83**

தமிழ்நாட்டில் 79-80-ஆம் ஆண்டில் சிறப்பான முறையில் சிறுசேமிப்பு சாதனைகளைப் புரிந்த 137 உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு பரிசுக் கோப்பைகள் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

நெல்லை மாவட்டத்தில் மேலும் 4 இடங்களில் மணிக்கூண்டுகள் கட்டுவதற்குத் தமிழக அரசு அனுமதித்துள்ளது.

**5—1—83**

தமிழகத்தில் பால் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு தமிழக அரசு நடப்பு (1982-83) ஆண்டில் 52 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கியிருக்கிறது என்று மாண்புமிகு ஆதிதிராவிடநலத்துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்கள் அறிவித்தார்.

**6—1—83**

'முதலமைச்சர்குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காக' தனி லாட்டரி குலுக்கல் நடத்துவது பற்றி அரசு பரிசிலீத்து வருகிறது என்று மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்.

தமிழக அரசு, உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திலும், சுயதொழில் தொடங்கும் வகையில் 21 லட்ச ரூபாய் ஒதுக்கியுள்ளது என்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் அறிவித்தார்.

தமிழகம் முழுவதிலும், கிராம அதிகாரிகள் இல்லாமலேயே 'கெடுபிடி' இல்லாமலேயே 25 கோடி ரூபாய் வசூலாகியுள்ளது என்று மாண்புமிகு வருவாய்த்துறைஅமைச்சர்திரு எஸ்.டி.சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்.

திருச்சி, நெல்லை, சேலம் ஆகிய மூன்று நகரசபைகள் விரைவில் மாநகராட்சிகளாக மாற்றப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்.

**7—1—83**

இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூர்த் தொகுதியில் வத்தியிராயிருப்பையும், அர்ஜுனாபுரத்தையும் இணைத்து, 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட இருக்கும் பாலத்திற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

பதிப்பகங்கள் வெளியிடுகிற புத்தகங்களை இனி மாவட்ட நூலகங்களே வாங்கிக் கொள்ளும்; ஆனால், புத்தகங்களைச் சென்னையிலுள்ள மத்திய நூலகமே தேர்வு செய்யும் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்.

**8—1—83**

தஞ்சை மாவட்டத்தில் தொழில் வளர, இம்மாவட்டத்தைத் தொழிலில் பின்தங்கிய மாவட்டமாக அறிவித்துத் தொழில் தொடங்க தமிழக அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்.

தமிழக அரசு சீட்டுக் கம்பெனி (சிட்பண்ட்) விரைவில் தொடங்கப்படும் என்றும், இதற்கென பத்திரப் பதிவுத் துறையின் மூலம் ரூபாய் 1 கோடி ஒதுக்கப்பட்டு அந்தப் பணிகள் முடிந்து விட்டன என்றும் மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அறிவித்தார்.

சீனப்பட்டையும் காஞ்சிபுரம் பட்டையும் இணைத்துத் தயாரிக்கப்படும் 'காஞ்சீனா' ரகப்பட்டுப் புடவைகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது என்று மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அறிவித்தார்.

குடும்பக் கார்டு வைத்திருப்பவர்களுக்கு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 1983 ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரண்டு மாதமும் 5 கிலோ சர்க்கரை கூடுதலாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**10—1—83**

தமிழ்நாட்டில் மின்சார உற்பத்தி அதிகரித்ததைத் தொடர்ந்து, விவசாயத்திற்குக் கூடுதல் மின்சாரம் வழங்கப்படும். அத்துடன், நகரங்களில் மின்சார விநியோகக் கட்டுப்பாடுகளும் ரத்து செய்யப்படும் என்று மாண்புமிகு மின்சார அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன் அறிவித்தார்.

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் 60,000 ஊழியர்களுக்கு ஊக்கபோனசாக தலா ரூ. 300 வழங்க அரசு முடிவெடுத்துள்ளது என்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அறிவித்தார்.

—**சாமி** பழனியப்பன்—

# பெருமைக்குரிய பொருனை நதி!

**வே**றொரு மாநிலத்திலே பிறந்து நம்முடைய மாநிலத்திலே தவழும் காவிரியால் ஏற்பட்டுவரும் பிரச்னைகள் நமக்குத் தெரியும். காவிரிமட்டும் நமது மாநிலத்திலேயே பிறந்திருக்குமானால் இந்தச் சிக்கலுக்கு இடமிருக்குமா?

இந்த வகையில், திருநெல்வேலி மாவட்டத்திலே தவழும் தாமிரபரணிக்குத் தனிச் சிறப்புண்டு.

மயிலாறு, பாம்பாறு, பாணதீர்த்தம், காரியாறு, கௌதலாறு, பேயாறு போன்ற சிறு சிறு நதிகளெல்லாம் இணைந்து பெருகித் தாமிரபரணியாகும் பொருநை நதி அகத்திய மலைச் சாரலில் பிறக்கிறது. 75 மைல் தூரம் அழகு நடை பயின்று இதே திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புன்னைக்காயல் என்ற இடத்தில் கடலில் கலக்கிறது! வற்றாத ஜீவ நதி இது!

அகத்திய மலை என்றதும் சிந்திக்கிறீர்களா?

ஆமாம், திரிகூடமலை எனப்படும் குற்றால மலையில் இருந்துதான் அகத்திய மாமுனிவர் அழகு தமிழ் வளர்த்தாராம்.

# இரண்டே பெறுக! இனிதே வாழ்க!

குடும்பநலத்தின் முக்கிய அங்கமாகத் திகழ்வது தாய்நலமும் சேய்நலமுமாகும்.

குடும்பநலத் திட்டம் கருவுற்ற தாய்மார்களைப் பேணிக் கவனிப்பதிலிருந்தே தொடங்கிவிடுகிறது. கருவுற்ற தாய்மார்களுக்கு இரத்த சோகையைப் போக்க இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

கருவுற்ற தாய்மார்களுக்கு இசிவு நோய் வராவண்ணம் தடுக்க தடுப்பூசிகள் ஏழாவது மாதத்திலிருந்து ஒன்பதாவது மாதத்திற்குள் ஒரு மாத இடைவெளியில் இருமுறை போடப்படுகின்றன. அரசு மருத்துவமனைகளிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் மகப்பேறு நிலையங்களிலும் குழந்தைப் பேறு பார்க்கப்படுகின்றது.

குக்கிராமங்களில் பயிற்சி பெற்ற தாதியர்களால் பிரசவம் பார்க்கப்படுகின்றது. குழந்தை பிறந்த மூன்றாவது மாதத்திலிருந்து ஒரு மாத இடைவெளியில் மூன்று முறை முத்தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. இத்தடுப்பூசி கக்குவான், தொண்டை அடைப்பான், வில்வாத ஜன்னி ஆகியவை வராவண்ணம் குழந்தைகளைக் காக்கிறது. சிறுவர்களின் கண்ணொளியை நன்கு காத்திட வைட்டமின் 'அ' திரவம் சிறார்களுக்கு அளிக்கப்படுகிறது.

நெல்லை மாவட்டத்தில் தாய்சேய் நலத்திட்டத்தில் 30-11-82 முடிய பயனடைந்தவர்கள் விவரம் :

முந்நோய் தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள் — 31,088, இருநோய் தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள், 25,890, இசிவுநோய் தடுப்பூசி போடப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் —2,194.

இரும்புச்சத்து மாத்திரைகள் அளிக்கப்பட்ட தாய்மார்கள், —30,384.

இரும்புச்சத்து மாத்திரைகள் அளிக்கப்பட்ட சிறார்கள்,29,476.

வைட்டமின் 'அ' திரவம் அளிக்கப்பட்ட சிறார்கள் 92,601.

### குடும்பநல விளம்பரப் பணிகள்

குடும்பநலம் பற்றியும், கல்வியும், விளம்பரப் பணிகளும் இம் மாவட்டத்தில் பெருவாரியாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மக்கள் பெருக்கத்தின் தீமையும் சிறு குடும்ப நெறியின் அவசியம் மாவட்டத்தின் மூலைமுடுக்குகள் எல்லாம் முழங்கப்பட்டு வருகின்றன.

துன்பம் வந்தபின் தவிப்பதை விட வருமுன் காப்பது அறிவுடைமை. எனவே, வருமுன்னர்க் காக்க தடுப்பூசி போடுதல், மகப்பேறு மற்றும் குழந்தைநலம் சுற்றுப்புறச் சுகாதாரம் மக்கள் தொகைக் கல்வி, தாமதித்து திருமணம் செய்வதால் ஏற்படும் நன்மைகள் சிறு குடும்ப நெறியின் அவசியம், குடும்பநல தற்காலிக முறைகள், நிரந்தர முறைகள், சுற்றுப்புறச் - சுகாதாரம் ஆகியவை பற்றி குழுவிவாதம் மூலமாகவும் குழுக் கூட்டங்கள் மூலமாகவும் கிராமப்புற மக்களுக்கு குடும்பநலக் கல்வி எடுத்துச் சொல்லப்படுகின்றது. சுவரொட்டிகள், மூலமாகவும், துண்டு வெளியீடுகள் மூலமாகவும் திரைப்படங்கள் மூலமாகவும் கிராமப் புறங்களில் குடும்பநலத் திட்டம் பற்றிய கல்வி புகட்டப்படுகிறது. இவ்வாண்டு இம் மாவட்டத்தில் 125 கிராமங்களில் கிராமத் தலைவர்களுக்கான குடும்பநலப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

கீழப்பாவூர், அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, களக்காடு, பாளையங்கோட்டை, நாங்குநேரி, திருச்செந்தூர், ஆழ்வார்திருநகரி, கருங்குளம் ஸ்ரீவைகுண்டம், தூத்துகுடி, ஒட்டப்பிடாரம், ஆகிய 8 ஊர்களில் 'திருவிழா' என்னும் குடும்பநலப் பிரச்சார நாடகங்கள் நடத்தப்பட்டன. மாவட்ட அளவில் கிராமத் தலைவர்களுக்கான பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது.

இன்றைய இளந்தலைமுறையினரே நாளைய பாரதத்தின் சிற்பிகள். அவர்களிடையே மக்கள் தொகைப் பெருக்கக் கல்வி பரவிட பள்ளி மாணவர்களுக்குத் தனியாகவும் கல்லூரி மாணவர்களுக்குத் தனியாகவும் இளைஞர் மன்றங்கள் மாதர் சங்கங்கள் முறைசாரா மற்றும் முதியோர் கல்வி நிலையங்கள், பயிற்சி நிலையங்கள் போன்றவற்றிற்குத் தனியாகவும் மும்மூன்று கட்டுரைப்போட்டி, பேச்சுப் போட்டி, நாட்டுப் பாடல் போட்டி ஆகியன நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன. குடும்பநலக் கண்காட்சி பெரிய அளவில் 2ம் சிறிய அளவில் 2ம் இம்மாவட்டத்தில் போடப்பட்டது. மேலும் 8 குடும்பநல மன்றங்களும், நடத்தப்பட்டு வருகின்றன.

### குடும்பநலத் திட்டத்தில் நவீன முறைகள்

குடும்பநல நவீனமுறை அறுவைச்சிகிச்சை எனும் ''லேப்ப



ராஸ்கோப்'' அறுவைச் சிகிச்சை முகாம் இம்மாவட்டத்தில் 3.9.82 முதல் 6.9.82 வரை திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்றது. மூன்று நாள் முகாமில் 300 பேருக்கே அறுவைச்சிகிச்சை செய்ய முடியும் என்ற நிலையில் ஏறக்குறைய 822 தாய்மார்கள் ஆர்வத்தோடு இச்சிகிச்சையைச் செய்து கொள்ள முன்வந்து விட்டனர். முகாம் குறுகிய காலமாக இருந்தால் 272 தாய்மார்களுக்கு மட்டுமே நவீன முறை சிகிச்சை அளிக்க முடிந்தது. ''மினி லேட்ராடமி'' ( Mini Latrotomy ) எனப்படும் புதிய முறையையும் கடைப்பிடித்து முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இதுவரை இம்மாவட்டத்தில் 23 தனியார் மருத்துவ மனைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவை குடும்ப நலத் திட்டத்திற்கு உறுதுணை புரிந்து வருகின்றன. இம்மாவட்டத்திலுள்ள இந்திய மருத்துவக் கழகக் கிளைகளோடு இணைத்து 17.12.82 அன்று தனியார் மருத்துவர்களுக்குக் குடும்பநலத் திட்டத்தில் நவீன முறைகளும் தனியார் மருத்துவர்களின் பங்கும் என்ற தலைப்பில் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு என்.எஸ். ஹூரா தலைமையில் நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்ட தனியார் மருத்துவர்கள் இத்திட்டம் மேலும் சிறந்து செயற்பட பெரிதும் துணை புரிய உறுதியளித்தனர். குடும்ப நலத் திட்டத்தில் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் வருமாறு: அறுவை சிகிச்சைகள்..4,800;கருத்தடை வளையம் பொருத்தியவர்கள் 1,201; வழங்கப்பட்டுள்ள ஆணுறைகள் 3,03,662.

திருநெல்வேலி மாவட்டத்தில் கணிசமாக கிருத்துவர்களும் முஸ்லிம் மக்களும் உள்ளனர். ஆழ்ந்த சமயக் கொள்கையோடும் பாரம்பரிய நம்பிக்கைகளிலும் மூழ்கியிருந்தவர்களும் கூட குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை உணர்ந்து பின்பற்றி வருகின்றனர். சாதி, மத வேறுபாடின்றி எல்லா இனத்தவரும் எல்லா மதத்தவரும் இம்மாவட்டத்தில் குடும்பநலத்திட்டத்தை ஏற்று வருகின்றனர். இந்து சமயப் பெரியவர்கள் தலைமையிலும் கிருத்துவப் பாதிரிமார்கள் தலைமையிலும், முஸ்லிம் ஆலிம்கள் தலைமையிலும் குடும்நலப் புத்தறிவுப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தில் இத்திட்டம் ஒரு மக்கள் இயக்கமாக வெகுவிரைவில் மாறும் என்பதில் எத்துணையும் ஐயமில்லை!



## தொழில் வளம்

பல்வகைத் தொழில் வளங்களும் நெல்லைச் சீமையில் நிறைந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத் தக்க சில பின்வருமாறு:

| | |
|---|---|
| இந்தியா சிமிண்ட்ஸ் | —சங்கர் நகர் |
| தரங்கதாரா கெமிகல்ஸ் | —சாகுபுரம் |
| சன் பேப்பர் மில்ஸ் | —சேரன்மாதேவி |
| கணபதி மில்ஸ் | —தாழையூத்து |
| நெல்லை காட்டன் மில்ஸ் | —தாழையூத்து |
| தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பாலை | —பேட்டை |
| லட்சுமி மில்ஸ் | —கோவில்பட்டி |
| லாயல் மில்ஸ் | —கோவில்பட்டி |
| மதுரை கோட்ஸ் | —விக்கிரமசிங்கபுரம் |
| கோமதி மில்ஸ் | —வீரவநல்லூர் |
| பலராமவர்மா மில்ஸ் | —செங்கோட்டை |
| கூட்டுறவு நூற்பாலை | —நாசரேத் |
| கீதாஞ்சலி | —சங்கரன்கோயில் |
| பெல் மேன்யூபாக்சரிங் அன்கோ | —பாளையங் கோட்டை |
| பெல் பிராடக்ட்ஸ் அல்கோ | —பாளையங் கோட்டை |
| நூற்பாலை | —தூத்துக்குடி |
| துறைமுகத் திட்டம் | —தூத்துக்குடி |
| தூத்துக்குடி அல்காலிக் கெமிகல்ஸ் (டி.ஏ.சி.) | —தூத்துக்குடி |
| மதுரை கோட்ஸ் | —தூத்துக்குடி |
| ஸ்பிக் | —தூத்துக்குடி |
| சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் | —நாங்குனேரி |
| பம்பாய் பர்மா தேயிலைத் தோட்டம் | —மாஞ்சோலை |

### மாஞ்சோலை தேயிலைத் தோட்டம்

மாஞ்சோலையில் தேயிலைத் தோட்டமா? என்று மலைக்க வேண்டாம். மணிமுத்தாறு நகரியத்தைச் சேர்ந்த மலைப் பகுதிகளில் உள்ள ஒரு இடம்தான் மாஞ்சோலை! இது பூமியிலிருந்து 4350 அடி உயரத்தில் உள்ளது. இங்கு ஏராளமான அளவில் தேயிலை பயிராகின்றன. மாஞ்சோலையிலும, நாலுமுக்கு என்னுமிடத்திலும் தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. சுமார் 4000 பேர் இதில் பணி புரிகிறார்கள். தேயிலை தவிர காபி, ஏலமும் இங்குப் பயிராகின்றன. இதை ஒரு குளிர் பிரதேசம் என்று கூறலாம். ஜூன் முதல் ஆகஸ்டு வரை இங்கு சாரல் மழை பெய்கிறது.

# கல்வி சிறந்த மாவட்டம்



நெல்லை மாவட்டத்தில் 2459 துவக்கப் பள்ளிகளும், 875 நடுநிலைப் பள்ளிகளும், 118 உயர்நிலைப் பள்ளிகளும், 132 மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன.

தமிழ்நாட்டில் மேல்நிலைக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து இம்மாவட்டம் 45 அரசு பள்ளிகளிலும், 81 உதவி பெறும் பள்ளிகளிலும், 3 நகர் மன்ற பள்ளிகளிலும், ஒரு அரிசன நலத்துறைப் பள்ளியிலும், இரண்டு உதவி பெறாத பள்ளிகளிலும் மேல்நிலைக் கல்வியை அமல்படுத்தியுள்ளது.

இம்மாவட்டத்தில் மொத்தம் 24073 ஆசிரியர்கள் பணி புரிகின்றனர். 4,33,070 மாணவர்களும், 3,43,154 மாணவிகளும் கற்பிக்கப்படுகின்றனர்.

மேல்நிலைக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து தனியார் பள்ளிகளில் இடவசதியை அதிகரிக்கவும், விரிவான ஆய்வுக் கூடங்கள் அமைத்தலுக்கும் அரசு ரூ. 2,77,500 மான்யமாக வழங்கியுள்ளது.

25 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 1979-80-ல் தலா ரூ. 1.5 இலட்சம் மதிப்புள்ள விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

1980-81-ல் தலா 2.3 இலட்சம் மதிப்புள்ள 5 விஞ்ஞான ஆய்வுக் கூடங்களும் 1981-82-ல் தலா 2.5 இலட்சம் மதிப்புள்ள 3 விஞ்ஞான ஆய்வுக் கூடங்களும், அரசு பள்ளிகளுக்காக அமைக்கப்பட்டுள்ளன.

விஞ்ஞான அறிவை மாணவர்களுக்கு அதிகரிக்கும் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ. 3 இலட்சம் மதிப்பில் அரசுப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

1981-82-ல் ரூ. 2,54,000 செலவில் மூன்று அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் இடவசதி செய்யப்பட்டுள்ளது.

1980-81 மற்றும் 81-82-ஆம் ஆண்டில் ரூ. 27 இலட்சம் செலவில் 12 விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டன.

இவ்வாண்டில் ரூ. 3,66,000 மதிப்புள்ள ஐந்து அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 35 அரசு பள்ளிகளுக்குக் கழிவறைகள்


**சிவதாணுப்பிள்ளை**
**முதன்மைக் கல்வி அலுவலர்**
**திருநெல்வேலி.**


கட்டுவதற்காக அரசு ரூ. 4,50,000 நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இம்மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் கல்வித் துறையில் 3033 சத்துணவு மையங்கள் செயல்படுகின்றன. இவற்றில் 3,82,999 மாணவர்கள் சத்துணவு அருந்துகின்றனர். இத்திட்டத்தின் பயனாக இம்மாவட்டத்தில் 19,300 மாணவர்கள் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டில் குழந்தைகள் தினவிழாவையொட்டி, எட்டு மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கண்காட்சி நடத்தப்பட்டது. பெற்றோர்-ஆசிரியர் சங்கத்திலிருந்து இதற்காக ரூ. 4000 செலவு செய்யப்பட்டது.

இம்மாவட்டத்திலுள்ள 36 சரகங்களிலும், கண்காட்சிகள் நடத்தப்பட்டன. இதற்கு, பெற்றோர் - ஆசிரியர் சங்க நிதியிலிருந்து ரூ. 3600 வழங்கப்பட்டது. இக்கண்காட்சிகளில் முழுவதும் மாணவர்களாலேயே செய்யப்பட்ட பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன. இம்முயற்சியில் மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இம்மாவட்டத்தில் தமிழகத்திலேயே பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று இரண்டு மாணவர்கள் வெற்றி பெற்றது பாராட்டுக்குரியது. இம்மாவட்டத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் அமைக்கப்பட்டுள்ள கல்விக்குழு, விளையாட்டுக்குழு, கலைக்குழு, இலக்கியக் குழு ஆகியவை மிகச் சிறந்த சேவை செய்கின்றன.

சாரண சாரணீய இயக்கம் தற்பொழுது புதுப்பொலிவுடன் இம்மாவட்டத்தில் இயங்குவது மிகச் சிறப்பானதாகும். இம் மாவட்டத்தில் 4872 சாரணர்களும், 2907 சாரணியர்களும் தற்பொழுது உள்ளனர்.

இம்மாவட்டத்தில் மாணவர்கள் உடல் நலம் பரிசோதிக்கவும், தக்க மருத்துவ ஆலோசனைகள் கூறவும், நான்கு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நெல்லை மாவட்டத்திலுள்ள 4 கல்வி மாவட்டங்களிலும் மருத்துவ உதவிக்குழு அமைக்கப்பட்டு இதற்கென ஊர்தி வசதியும் செய்யப்பட்டுள்ளது.

துவக்கப்பள்ளி மாணவர்களும் விஞ்ஞான அறிவு பெறும் முகத்தான் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் நடமாடும் ஆய்வுக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற அலுவலர் இந்த



ஆய்வுக் கூடப் பணிகளைச் செய்கிறார்.

கல்வியறிவு பெருகி மாணவர்கள் சிறந்த குடிமகனாகத் திகழ பல்வேறு வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன.

இம்மாவட்டம், வரும் காலங்களிலும் கல்வியில் சிறந்த மாவட்டமாகத் திகழும் என்பதில் சந்தேகமில்லை.

# பிற்பட்டோர் நலம் பெற...

வி. ஆதிமூலம்,
மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர்,

திருநெல்வேலி மாவட்டத்தில் பிற்பட்டோர் நல முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்கள் அமலாக்கப்பட்டு வருகின்றன.

பின் வரும் இடங்களில் ஆதாரப்பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

1. அருகன்குளம், 2. செண்பகபுரம், 3.அரியூர், 4. நொச்சிகுளம், 5. தெற்கு சுப்பையாபுரம், 6. பனைவடலிசத்திரம், 7.வடக்குபுளியம்பட்டி, 8.தெற்கு அச்சம்பட்டி, 9. வெள்ளப்பனேரி, 10.சங்கரப்பேரி.

குறைந்த வருவாயுடைய பெற்றோர்களின் குழந்தைகள் தங்கி கல்வி பயிலுவதற்கு வசதியாக, இத்துறையினரால் 27 ஊர்களில் மாணவர் விடுதிகள் நடத்தப்பட்டுவருகின்றன. இதே போல, பின்வரும் இடங்களில் பள்ளிகளில் பயிலும் மாணவியருக்காகத் தனி விடுதிகள் நடத்தப்படுகின்றன: 1. பாளையங்கோட்டை, 2. சங்கரன்கோவில், 3. தூத்துக்குடி, 4. புதூர், 5. நாங்குனேரி, 6. பணிக்கநாடார் குடியிருப்பு, 7. கருங்குளம் 8. சங்கர்நகர், 9. கூட்டப்புளி,

கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர் தங்கிப் பயிலுவதற்கு வசதியாக இல்லங்களும் நடத்தப்படுகின்றன. அவை கல்லூரி மாணவர் இல்லம் பேட்டை, கல்லூரி மாணவியர் இல்லம் பாளையங்கோட்டை, கல்லூரி மாணவர் இல்லம் தூத்துக்குடி.

இவை தவிர மீனவர்களின் குழந்தைகளுக்காகத் தனியே ஒரு விடுதி தூத்துக்குடியில் நடத்தப்பட்டுவருகின்றது. ஆக, மேற்கண்ட 40 விடுதிகளிலும் 723 மாணவர்களும், 433 மாணவியரும் தங்கி கல்விபயில வசதி செய்யப்பட்டுள்ளது.

இத்துறையினரால் நடத்தப்படும் 10 ஆதாரப் பள்ளிகளிலும் முதல்வரின் குழந்தைகள் இலவசச் சத்துணவுத் திட்டம் நல்லமுறையில் அமல் நடத்தப்பட்டு வருகிறது.

உயர்நிலைப்பள்ளியில் 9,10 வகுப்புப் படிக்கும், பிற்பட்ட வகுப்பு ஏழை மாணவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.5000-க்கு மிகையின்றி இருந்தால், இம் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகிறது. 82-83ல் 209 உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கும் 5042 மாணவ, மாணவியருக்கு ரூ.68004.65 மதிப்புள்ள இலவச பாடபுத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வாறே விமுக்த சாதி ஏழை மாணவ, மாணவியருக்கு அவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.5000-க்கு மிகையின்றி இருந்தால் 4ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. 34800 மாணவ, மாணவிகளுக்கு ரூ.3,26,027.05 மதிப்புள்ள இலவசப்பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வாறே மாணவர், மாணவியர் உயர்நிலைப்பள்ளிக்குச் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணத்தையும் இந்தத் துறை மூலம், பள்ளிக்குச் செலுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம், ஆண்டு சுமார் 7500 மாணவ, மாணவியர்கள் பயன் பெறுகிறார்கள்.

11,12ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கும் மற்றும் கல்லூரியில், தொழிற்பள்ளி தையல், தட்டெழுத்து முதலான சான்றிதழ் படிப்பு, இவைகளில் படிக்கும் மாணவர்களுக்கு ரொக்கமாக உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டு முதல் பள்ளிப்படிப்பு நீங்கலாக மற்றும் உள்ள படிப்பு மாணவ, மாணவியருக்குத் தாமதமின்றி உபகாரச்சம்பளம் கிடைத்திடும் பொருட்டு கல்வி நிலையத் தலைவர்களுக்கு (முதல்வர், தலைமை ஆசிரியர்) அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 5012 மாணவ மாணவியர்களுக்கு ரூ. 15,92,750 உபகாரச்சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது. இதுவரைக்கும் ரூ.20,92,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 31.3.82க்குள் மீதம் உள்ள பணமும், மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவிடும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் கீழ்க்கண்ட நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் சலவையாளர்களின் உபயோகத்திற்காகப் பாதி கடன், பாதி மானியம் என்ற அடிப்படையில் அரசாங்க நிதி உதவி பெற்று சலவைத்துறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

1.வடகரைகீழ்பிடாகை பேரூராட்சி, 2.தூத்துக்குடி நகராட்சி, 3.மணிமுத்தாறு நகரியம், 4. ஸ்ரீ வைகுண்டம் பேரூராட்சி 5.வண்ணார்பேட்டை, திருநெல்வேலி நகராட்சி, 6. நாங்குனேரி பேரூராட்சி, 7.நாரணம்மாள்புரம் பேரூராட்சி.

சங்கரன்கோவில் நகராட்சி, கீழ்ப்பாவூர் பேரூராட்சி ஆகிய இடங்களில் சலவைத்துறை கட்டப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளன.

தூத்துக்குடி நகராட்சி (மாப்பிள்ளையூரணி) கழுகுமலை பேரூராட்சி, கயத்தாறு பேரூராட்சி, காயல்பட்டணம் பேரூராட்சி ஆகிய இடங்களில் சலவைத்துறை கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட மறவர் இனத்தைக் சேர்ந்தவர்களுக்கு, விவசாயத்திற்குக் கிணறு வெட்டுவதற்காகத் தகுதி வாய்ந்த ஒவ்வொருவருக்கும் ரூ. 2500 மானியமாக் வழங்கப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டிற்கு ரூ.50,000 ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது. இதுவரையிலும் ரூ.25,750-வழங்கப்பட்டுள்ளது. இதுவரையிலும் இத்திட்டத்தின் கீழ் 285 நபர்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் நரிக்குறவர்கள், ஒட்டர்கள், சலவையாளர்கள், சவரத் தொழிலாளர்கள் ஆகிய நான்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு-சொந்த வீடுகள் இல்லாத குறைந்த வருவாய் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா மூன்று செண்டு வீதம் தனியார் நிலங்களைக் கையகம் செய்து வீட்டுமனை வழங்கு திட்டம் செயல்பட்டு வருகிறது.

மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த சலவைத் தொழிலாளர்கள், சவரத்தொழிலாளர்கள் தங்கள் பணியினைச் செவ்வனே செய்வதற்கு வசதியாக அவர்களுக்குத் தொழிற் கருவிகள் இனாமாக வழங்கப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின் கீழ் சலவைத் தொழிலாளர்களுக்கு நடப்பு ஆண்டில் 400 தேய்ப்புப் பெட்டிகளும், சவரத் தொழிலாளர்களுக்கு 500 தொழிற் கருவிகள் அடங்கிய பெட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

# நெஞ்சம் கவர் நெல்லை!

நெல்லை மாவட்டத்தில், சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க கண்கவர் இடங்கள் பல உள்ளன. அவை கண்ணுக்கு மட்டுமல்ல, கருத்துக்கும் விருந்தூட்டுவனவாக அமைந்துள்ளன. தாமிரபரணி தவழ்ந்து செல்லும் இத்திரு மண்ணில் எத்தனை எத்தனைக் காட்சிகள் நம் எண்ணத்தை ஈர்க்கின்றன!

**திருக்குற்றாலம் :** அழகிய ஐந்தருவிகளைக் கொண்டது. இனிய சுற்றுலாத் தலமாக மட்டுமல்ல, இலக்கியச் சிறப்பும் உடையது, இது. அருள்மிகு திருக்குற்றாலநாதர் ஆலயமும், சித்திர சபையும் இங்குள்ளது.

**பாஞ்சாலங்குறிச்சி :** வெள்ளையரை எதிர்த்து, உரிமைக்குரல் எழுப்பிய வீரபாண்டியக்கட்டபொம்மன் நினைவுக்கோட்டை உள்ள இடம்.

**எட்டயபுரம் :** பாட்டுக்கொரு புலவன் பாரதி பிறந்த இடம். இங்கே பாரதியின் மணிமண்டபமும் உள்ளது.

**பாபநாசம், பணிமுத்தாறு :** இரண்டும் அழகிய அணைக்கட்டுகள். சுற்றுலா வருவோரை மட்டும் அல்ல, சுற்றியுள்ளோரையும் கவர்ந்திடும் இடங்கள். பூங்காவும், நீச்சல் குளமும், தேயிலைத் தோட்டமும் உள்ள எழிலார்ந்த இடம்.

இவையன்றி, திரும்பும் திசையெல்லாம் திருக்கோயில்களும் காட்சி தருகின்றன அவை:

**சங்கரன் கோயில் :** அருள்மிகு சங்கர நாராயணசாமி திருக்கோயில்.

**திருச்செந்தூர் :** அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்.

**ஆழ்வார் திருநகரி :** அருள்மிகு மகர நெடுங்குழைக்காதன் திருக்கோயில்.

**செண்பகராமன் நல்லூர் :** நுண்ணிய வேலைப்பாடமைந்த சிற்பங்கள் உள்ள அருள்மிகு ஜகந்நாதப் பெருமாள் திருக்கோயில்.

**திருக்குறுங்குடி :** அருள்மிகு மலை நம்பி திருக்கோயில்.

**கிருஷ்ணாபுரம் ;** அருள்மிகு விஷ்ணு திருக்கோயில்.

**திருநெல்வேலி :** அருள்மிகு நெல்லையப்பர்—காந்திமதி அம்மன் திருக்கோயில்.

**கழுகுமலை:** மலைக் குகைக்கோயில்கள். ஜைனர்களின் முக்கியத் தலம். அருள்மிகு கழுகாசலமூர்த்தி திருக்கோயில் இங்கு உள்ளது.

**வீரசிகாமணி :** அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில். பல்லவர் காலத்துச் சிற்பங்கள்; குகைக்கோயில் காணத்தக்கவை.

**தூத்துக்குடி :** வரலாற்றுப் புகழ்மிக்க துறைமுகம், முத்துக்குளிக்குமிடம்; சிறந்த தொழில் நகரம்.

**பத்தமடை :** புகழ் பெற்ற அழகிய கோரைப் பாய்கள் தயாரிக்கும் சிற்றூர்.

**தென்காசி :** இதைத் தென்னாட்டுக் காசி (வாரணாசி) எனவும் வழங்குவர். 400 ஆண்டுகளுக்கு முந்திய கலையழகு மிக்கக் கோயில்கள் உள்ள திருவிடம். காசி விசுவநாதர் திருக்கோயில் இங்கு உள்ளது.

**ஒட்டப்பிடாரம் :** கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் பிறந்த ஊர்.

**காணவேண்டிய வனவிலங்கு உய்விடங்கள்**

1. முண்டந்துறை :—புலிகள் உய்விடம்.
2. களக்காடு : சிங்கவால் குரங்குகள் உய்விடம்.
3. மூன்றடைப்பு, கூந்தங்குளம் : பறவைகள் உய்விடம்.

**தொகுப்பு : பி. வி. ஜி.**



'வானம் பொழியுது பூமி விளையுது; உனக்கேன் கப்பம்?' என உரத்த குரல் கொடுத்த வீரபாண்டியக் கட்டபொம்மன்...

வெள்ளை ஆதிக்கத்தின் வணிக நரம்பறுக்கக் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி...

'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என நம் எல்லோரையும் சிந்தித்துச் செயல்படத் தூண்டிய நூற்றாண்டு விழாக் கவிஞன் சுப்பிரமணிய பாரதி...



ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்று இந்நாட்டாரின் எதிர்ப்பு வேகத்தை ஆங்கில ஏகாதிபத்தியத்துக்குணர்த்திய வாஞ்சிநாதன் போன்ற விடுதலை விரும்பிகளையெல்லாம் ஈன்று பெருமை கொண்டது திருநெல்வேலி மாவட்டம்.

# வேளாண்மையில் வேகமான முன்னேற்றம்

வரகு முதல் வாழை வரை சோளம் முதல் சூரியகாந்தி வரை கம்பு முதல் கரும்பு வரை தினை முதல் தித்திக்கும் திராட்சை வரை அரிய பயிர்கள் அனைத்தும் பயிராகும் மாவட்டம் நெல்லை மாவட்டம்.

வற்றாத ஆறு தாமிரபரணி வளஞ்செய்யும் நெல் விளையும் பகுதிகளையும் வான்மழைக்குத் தவங்கிடக்கும் மானாவாரி கரிசல் மற்றும் செவ்வல் நிலப்பகுதிகளையும் தன்னகத்தே கொண்டு, வடகிழக்குப் பருவமழையையே பெரிதும் நம்பி இருக்கிற இம்மாவட்டத்தில், பல்வேறு பயிர்களும் பாங்குடன் பயிரிடப்படுவது, பார்த்து மகிழ்ந்து பாராட்டத் தக்கது. இதற்குக் காரணம் இங்குள்ள உழவர் பெரு மக்களின் மன வளமும் உழைக்கும் திறனும் அறிவியல் வேளாண்மையில்அவர்கள் காட்டுகின்ற ஆர்வமும் இவற்றை ஏற்றவண்ணம் பயன்படுத்திக்கொண்டு சாதனைகளுக்கு வழிவகுக்கும் வேளாண்மைத்துறையின் சீர்மிகு பணியுமாகும்.

அரிசி உற்பத்தியில் சராசரி ஏக்கர் விளைச்சலில் எக்டேருக்கு 2,690 கிலோ விளைவித்து, தமிழகத்திலேயே நெல்லை மாவட்டம் முதலிடம் பெற்றுளதே இதற்குச் சான்றாகும்.

உயர்வள ரகங்கள் பயிரிடும் திட்டம், தீவிர விவசாயப் பகுதித் திட்டம், மானாவாரி நில வளர்ச்சித் திட்டம், பருத்தி பயிரிடும் திட்டம், பயறு வகைப் பெருக்குத் திட்டம், பலப்பயிர்ச் சாகுபடித் திட்டம், எண்ணெய் வித்துப் பெருக்குத் திட்டம் போன்ற பல்வேறு வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களையும், ஒப்பற்ற முறையில் செயல்படுத்தி, உன்னத சாதனைகளை நிலைநிறுத்தி, அனைவரது சருத்தையும் ஈர்க்கின்ற சிறப்பைநெல்லை மாவட்டம் பெற்றுள்ளது.

## உயர் வள ரகம் பயிரிடும் திட்டம்

முன்கார் மற்றும் கார் பருவங்களில் ஏறத்தாழ ஒரு இலட்சம் ஏக்கர்களிலும் பிசானப் பருவத்தில் ஏறத்தாழ 2.57 இலட்சம் ஏக்கர்களிலும் நெல்லை மாவட்டத்தில் நெல் பயிரிடப்படுகின்றது. நெல் உற்பத்தியை உயர்த்த வல்ல வழிமுறைகளில், உகந்த உயர்வள ரகம் முதன்மையானது. முன்கார் மற்றும் கார் பருவங்களில் பலன் குறைந்த பயிர் ரகங்களுக்குப் பதிலாக மிகு விளைச்சல் தரும் மேன்மையான ரகங்களான ஆடுதுறை 31, கண்ணகி மற்றும் டிகேஎம் 9 ரகங்களை அறிமுகப்படுத்தி, உழவர் பெருமக்களை விரும்பிப் பயிரிட உற்சாகப்படுத்தியதன் காரணமாக ஏக்கருக்கு ஒரு மேனிக்கும் (1620 கிலோ) குறைவாக இருந்த முன்கார் மற்றும் கார் விளைச்சல் இன்று 1 மேனியிலிருந்து 2 மேனியாக (2400 கிலோ முதல் 3200 கிலோ வரை) உயர்ந்துள்ளது. பிசானப் பருவத்தில் பயிராகிவந்த பலன் குறைந்த உள்ளூர் ரகங்களை அகற்றிவிட்டு அமோகவிளைச்சல் தரவல்ல ஐ. ஆர் 20, பொன்னி ஆகிய ரகங்களைப் பயிரிடவகை செய்ததன் வாயிலாக பிசான நெல் விளைச்சல் பெரிதும் உயர்ந்துள்ளது. இதனால் நெல் பயிரிடும் பரப்பு மிகுதியாக அதிகரித்திடாத சூழ்நிலையிலும் அரிசி உற்பத்தி மட்டும் கடந்த 10 ஆண்டுகளில், 3.95 இலட்சம் டன்னிலிருந்து 5.08 இலட்சம் டன்னாக இம்மாவட்டத்தில் உயர்ந்துள்ளது. சராசரி எக்டேர் விளைச்சல் 2625 கிலோவிலிருந்து 2922 கிலோவாகக் கூடியுள்ளது.

## சிறு தானிய உற்பத்தியிலும் சிறப்பான சாதனை

சிறு தானியங்கள் பயிரிடும் பரப்பு 2.75 இலட்சம் ஏக்கராக நிலைத்து நின்ற போதிலும், உற்பத்தி குவிக்கும் உயர்வள ரகங்களை அறிமுகப்படுத்தியதாலும், உகந்த உழவியல் நுட்பங்களை உழவர் பெருமக்கள் கடைப்பிடிக்க வகை செய்ததாலும் சிறுதானிய விளைச்சல் 1.19 இலட்சம் டன்னிலிருந்து 1.33 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. சராசரி எக்டேர் விளைச்சல் 1086 கிலோவிலிருந்து 1280 கிலோவாகக் கூடியுள்ளது குறிப்பிடத்தக்கது.


**சே. ஹாஜா ஷெரீப்,**
துணை வேளாண்மை இயக்குநர்
உழவியல்
திருநெல்வேலி.


விளைச்சல் குறைந்த உள்ளூர் உளுந்து, பாசிப்பயறு, தட்டைப் பயறு, துவரை ஆகிய வகை வித்துக்களுக்குப் பதிலாக, குறுகிய காலத்தில் நிறைபலன் தரவல்ல, உயர்வள ரகங்களான, கே. எம். 1, கே. எம். 2, ஏ. டி. டி. 1, ஏடி. டி. 2, கோ. 3 ஆகியவற்றை உளுந்திலும் கே.எம். 1. கே.எம். 2, கோ. 3 பிஎல் 7, ஏ. டி. டி. 1, ஏ. டி. டி. 2 ரகங்களைப் பாசிப் பயறிலும் சி. 152, கே. எம். 1 ரகங்களை தட்டைப் பயறிலும் எஸ். ஏ. 1, கோ. 3 ரகங்களை துவரையிலும் அறிமுகப்படுத்தியதுடன், மானாவாரியிலும் இறவையிலும், தஞ்சைத் தரிசிலும், தனிப் பயிராகவும் பருத்தி மற்றும் இதர பயிர்களுடன் ஊடு



பயிராகவும் பயிர் செய்ய வகை செய்ததாலும், டை-அமோனியம் பாஸ்பேட்டை இலை மேல் தெளித்தல், பயிர் பாதுகாப்புச் செய்தல் போன்ற புதிய நுட்பங்களைக் கடைப்பிடிக்கச் செய்ததாலும் பயறு வகைப் பயிர்கள் பயிரிடும் பரப்பும் மகசூலும் மிகுதியாக உயர்ந்துள்ளன. சராசரி எக்டேர் விளைச்ச



லும் 350 கிலோவிலிருந்து 425 கிலோவாக உயர்ந்துள்ளது. மேலும் சிறப்பான உற்பத்தியை நிலைநாட்ட பயறு பயிரிடும் விவசாயிகளுக்கு மானிய உதவியுடன் 4 கட்டங்களில் முறையான செயல் முறைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**உரங்களைப்பயன்படுத்த ஊக்குவித்தல்**

இரசாயன உரங்களை வாங்கிப் பயன்படுத்த அஞ்சிய நிலையிலிருந்த வேளாண் பெருமக்களை, இரசாயன உரங்களில் நேரடி உரங்கள், கலப்பு உரங்கள் கட்டு உரங்கள் மற்றும் இணைப்பு உரங்களைப் பயன்படுத்தும் நிலைக்கும், சிறப்புமிகு யூரியா, மற்றும் - டை - அமோனியம் பாஸ்பேட் உரங்களை மிளகாய் மற்றும் பயறு வகைப் பயிர்களுக்கு இலைமூலம் தெளிக்கும் நிலைக்கும் வேளாண்மை விரிவினைப் பணியாளர்கள் அழைத்துச் சென்று முன்னேற்றி இருக்கின்றார்கள். இரசாயன உரங்களைப் பயன்படுத்தும் அளவு நெல்லை மாவட்டத்தில் மூன்று மடங்குக்கும் மேலாகக் கடந்த 10 ஆண்டுகளில் உயர்ந்துள்ளது. உர உபயோகம் 1981-82ஆம் ஆண்டில் தழைச்சத்து 25,000 டன் மணிச்சத்து 7305 டன், சாம்பல் சத்து 2350 டன்னாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் அங்கக உரம், பசுந்தாள் உரம், இரசாயன உரம்,



இவற்றைக் கடந்து, விண்ணிலுள்ள தழைச்சத்தை மண்ணில் நிலைநிறுத்திப் பலன் காணும் வகையில் நுண்ணுயிர் உரமிடல், நீலப்பச்சைப் பாசி இடல், அஸோஸ்பைரில்லத்தைப் பயன்படுத்துதல், நுண்ணூட்டச் சத்துக்களை இடுதல் ஆகிய புதிய நுட்பங்களிலும் முன்னேற்றம் போற்றத்தக்க வகையில் ஏற்பட்டுள்ளது.

**மானாவாரி வேளாண்மையிலும் மலர்ச்சி**

வான் மழைக்குத் தவங்கிடக்கும் வறட்சி மிகுந்த மிகுதியான பரப்பினைக் கொண்ட மானாவாரி கரிசல் நிலங்களிலும் செவ்வல் நிலங்களிலும். வேளாண்மையை இலாபகரமானதாக ஆக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வறட்சி தாங்காத, வயது மிகுந்த, விளைச்சல் குறைந்த சிறு தானிய ரகங்களை இதர பயிர்களை அகற்றி விட்டு பயிர் மாற்றத் திட்டத்தின் மூலம் வறட்சியை வென்று விளைச்சல் குவிக்கும் வீரியச் சோளம் கோவில்பட்டி நெட்டை சி. எஸ். எச். 6 மற்றும் உயர் வள ரகம் கோ. 23 கோ. 24 ஆகியவை களைப் பயிரிட ஆவன செய்யப்பட்டுள்ளன. கம்பு வித்துக்களில் கே. எம். 2, கே. 2, கே. 4 எச்.பி போன்ற ரகங்கள் உகந்தவையாக அமைந்துள்ளன. அமோக விளைச்சல் தரும் ஏற்றமிகு எண்ணெய் வித்து சூரியகாந்தி தனிப் பயிராகவும், ஊடுபயிராகவும், ஓரப் பயிராகவும், இடம் பிடித்து மிகுந்த பரப்பில் தனது சாம்ராஜ்யத்தை விரிவு செய்து கொண்டு வருகின்றது. பயறு வகைப் பயிர்களுக்கு மானாவாரியில் பாங்கான இடம் அளிக்கப்பட்டு, பருத்தி, சிறு தானியம் போன்ற அனைத்துப் பயிர்களிலும் ஊடுபயிராகவும், ஓரப்பயிராகவும் பயிரிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சின்னஞ்சிறிய தானியங்களான சாமை, வரகு, பனிவரகு, குதிரைவாலி போன்றவற்றிற்கும் கொத்தமல்லி, கொண்டைக் கடலை ஆகியவற்றிற்கும் புதிய உயர்வள ரகங்கள் வழங்கப்பட்டுள்ளன. மானாவாரி வேளாண்மை வெற்றி பெற புதிய உழவியல் நுட்பங்கள் புகுத்தப்பட்டுள்ளன. மழை நீரைச் சேமித்து, மண் வளம் காத்து பயிர் வளம் பெருக்கிட வகை செய்திட கோடையில் நிலத்தை உழவு செய்து வைத்தும், அகன்ற வரப்பும் ஆழக் கால்களும் அமைத்தும், அங்கக உரங்களை இட்டும், உயர்வள



ரகப் பயிர்களை கொருக்கலப்பை கொண்டு வரிசையில் சீராக விதைக்கச் செய்தும், இடையுழவு கருவிகள் மூலம் பின் செய் நேர்த்திகளைச் செய்திட வழி காட்டியும், இலை மூலம் உர மூட்டியும், பக்குவமாகப் பயிர் பாதுகாப்புச் செய்தும், பயிர் வளம் பெருக்கி விளைநலன் உயர்ந்திட வகை செய்யப்பட்

**பரிசுச்சீட்டு**

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒவ்வொரு குலுக்கலுக்கும் வரிசைக்கு 75 ஆயிரம் பரிசுச் சீட்டு வீதம் 2 வரிசை நெல்லை மாவட்டத்திற்கு ஒதுக்கப்படுகிறது. சிறப்புக் குலுக்கலுக்கு 75 ஆயிரம் பரிசுச் சீட்டு வீதம் 4 வரிசைகள் ஆக மொத்தம் 3,00,000 ஒதுக்கப்பட்டு சார் நிலைக் கருவூலம் மூலம் இங்கே சீட்டுக்கள் விற்பனையாகின்றன.

# நெல்லைச் சீமையில் ஐவகை மண்வளம்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பழந்தமிழர் நில அமைப்பினை ஐந்து வகையாகப் பிரித்தனர். இந்த ஐவகை நில அமைப்பும் கொண்ட ஓரே மாவட்டமாகத் திகழ்கிறது திருநெல்வேலி மாவட்டம்.

**குறிஞ்சி:** மலையும், மலை சார்ந்த இடமும் இது. இதற்கு எடுத்துக்காட்டு குற்றாலம்.

**முல்லை:** காடும், காடு சார்ந்த பகுதியுமாகும் இது. பாபநாசம் பகுதியிலுள்ள காடுகள் இதற்குச் சான்று.

**மருதம்:** வயலும், வயல் சார்ந்த பகுதியும் இது. நெல்லுக்கு வேலி காத்தாராம் நெல்லையப்பர், இதனாலேயே இம்மாவட்டம், திருநெல்வேலி' என்று பெயர் பெற்றதென்பர். நெல்லை, அம்பாசமுத்திரம்; திருச்செந்தூர் (வடக்கு) ஆகிய பகுதிகள் நெல்லும் கரும்பும் செழித்து வளரும் பகுதிகள்.

**நெய்தல்:** 'முத்துக் குளிப்பதொரு தென் கடலிலே' என மகாகவிபாரதி பாடிய தூத்துக்குடி, அலைமோதும் திருச்செந்தூர், மீன்பிடி தொழிலில் மேம்பட்டு விளங்கும் மணப்பாடு கிராமம் எல்லாம் நெல்லை மாவட்டத்தைச்சார்ந்தவைகளாயிற்றே கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் என்பதற்கு இது சான்று.

**பாலை:** நிலக்கூறுகெட்டு, வறண்ட மணல் பகுதி பாலை எனப்படும். தமிழகத்தில் வேறெங்கும் இல்லாத செம்மணல் பகுதியுள் 'செம்மண் தேரி' இங்கிருக்கிறது. பாலைப் பகுதி மக்களுக்கு என்னவெல்லாம் தொழிலென இலக்கணம் சொல்கிறதோ, அதெல்லாம் இப்பகுதி மக்கள் தொழிலாக உள்ளன.

டுள்ளது. இதனால் மானாவாரி வேளாண்மை மலர்ச்சி பெற்று வருகின்றது.

## ஆயிரம் ஏக்கர் பெருவிளக்கப் பண்ணைகள்

நெல்லை மாவட்டத்தில் விவசாயம் செய்யப்படாமல் தரிசாக மண்ணரிப்புக்கும், காற்று அரிப்புக்கும் இலக்காகிக் கிடக்கும் உழவர் பெருமக்களின் நிலப் பகுதிகளை ஒருங்கிணைத்து, 10 இடங்களில் ஆயிரம் ஏக்கர் பெருவிளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. உழவர் பெருமக்களுக்கு உகந்தவண்ணம் பயிற்சி அளித்து, பொறியியல், மற்றும் வேளாண்மை விரிவினை அலுவலர்களும் இணைந்துசெயல்பட்டு, தரிசு நிலங்களிலும்வெற்றிகரமாகப் பயிர் விளைக்க உழவர் பெருமக்களுக்கு இதன் மூலம் வாய்ப்பளிக்கப்படுகிறது. நிலவாகுக்கேற்ப பலனும், பயனும், தரவல்ல மர வகைகளை நட்டு வளர்க்கவும் இதில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## உழவர் பயிற்சி நிலையம்

உழவர் பெருமக்களுக்கும் உழவர் மகளிருக்கும், உற்பத்தியை உயர்த்தவல்ல விரிவினை முறைகளைக் கற்பிக்க, பல்வேறு நிலையப் பயிற்சிகளும் வயல் வெளிகளில் செயல்முறைப் பயிற்சிகளும் உழவர் பயிற்சி நிலையம் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டு அவர்களின் ஆர்வமும், ஆற்றலும், தொழில்நுட்பத் திறனும் பெரிதும் மேம்படுத்தப் பட்டு வருகின்றது. இதனால் அறிவியல் வேளாண்மை ஆக்கம் பெற்று வருகின்றது.

பருத்தி விளைச்சல் சிறந்திடவும், மிளகாய் மகசூல் மிகுந்திட சூரிய காந்தி போன்ற புதிய எண்ணெய் வித்துப்பயிர்கள் விளைச்சல் ஏற்றம் பெறவும், இதர பல்வேறு பயிர்களிலும் விளைச்சல் உகந்த வண்ணம் உயர்ந்து நிலைக்கவும் பல்வேறு புதிய உழவியல், பயிரியல், பயிர்க்காப்பு நுட்பங்கள் உழவர் பெருமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. உற்பத்தி உயர வகைவகையான வளர்ச்சித் திட்டங்களை வேளாண்மைத்துறை விழைவுடன் செயல்படுத்தி வருகின்றது.

## பயிற்சி வழித் தொடர்புத் திட்டம்

வேளாண்மை விரிவாக்கப் பணியில் மேற்கூறியவாறு சிறப்பான சாதனைகளைச் செய்து வேளாண்மை வளர்ச்சிக்கும், விளை பொருள் உற்பத்திக்கும் வழி வகுத்துள்ள வேளாண்மைத் துறை, நெல்லை மாவட்டத்தில் சென்ற 1-7-82 முதல் புரட்சிகரமான புதியதொரு விரிவாக்கத் திட்டத்தைப் ''பயிற்சி வழித் தொடர்புத் திட்டம்'' என்ற பெயரில் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் விரிவாக்கப் பணி மேலும் விரிவுபடுத்தப்பட்டு உழவர் குடும்பங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்களின் தொழில் நுட்பத்திறனையும் வேளாண்மை உற்பத்தித் திறனையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்தி, கிராமங்களின் மொத்த உற்பத்தியைக் கணிசமாக உயர்த்த வகை செய்யப்பட்டுள்ளது. ஆராய்ச்சியில் கண்ட அரிய முறைகள் அனைத்தும் அவ்வப்போது உழவர் பெருமக்களுக்குக் கிடைக்க இத்திட்டம் வழி வகை செய்கிறது. உழவர் பெருமக்களின் பிரச்சினைகளுக்கு இத்திட்டம் உடனே தீர்வு காண்கிறது. 'வீடு தேடி வரும் தொழில் கல்வியாக' இத்திட்டம் உழவர்களின் குடும்பங்களுக்கு உற்ற வகையில் உதவி வருகிறது.



கடந்த பத்தாண்டுகளில் ஒவ்வொரு பயிரிலும் உற்பத்தியை மிகுதியாக உயர்த்தி உன்னத சாதனங்களைப் படைத்த நெல்லை மாவட்ட வேளாண்மைத்துறை, தனது புதிய பல திட்டங்களைச் செயல்படுத்துவதின் மூலமாக, பொருநை ஆற்றைப்போல் பொதிகை மலைத் தென்றலைப்போல், குளிர் தரும் குற்றால அருவியைப்போல் பயன் தந்து, உன்னதப்பணியால் உழவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படையத் தொடர்ந்து செயல்படும் என்பதில் ஐயமில்லை!

வறுமையை ஒழிக்க வல்லது
ஒன்றே ஒன்று தான்—
ஒழுங்கும் லட்சிய உணர்வும் கொண்ட
கடுமையான உழைப்பு.

—இந்திரா காந்தி

# சத்யமேவ ஜயதே—ச்ரமேவ ஜயதே

## (உண்மையே வெல்லும்—உழைப்பே வெல்லும்)



davp 82/492





# 34-வது குடியரசு நாள் விழா அணிவகுப்பு

சென்னை மெரினாக் கடற்கரையில் 34-வது குடியரசு நாள் விழா அணிவகுப்பு நிகழ்ச்சி 26.1.83 அன்று காலை 8 மணிக்குத் தொடங்கி, கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் வகையில் ஈடில்லாச் சிறப்புடன் நிகழ்ந்தது. ஹெலிகாப்டர் விமானம் மலர் மாரி பொழிய விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

மேதகு ஆளுநர் அவர்கள் காந்தியடிகள் சிலைஅருகே நாட்டுக் கொடியை ஏற்றி வைத்த பின்னர், அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

இந்த அணிவகுப்பில் தரைப் படை, கடற்படை, விமானப் படை, காவல்துறை, முன்னாள் இராணுவத்தினர், இரயில்வே பாதுகாப்புப்படை, தேசிய மாணவர் படை, தீயணைப்புப் படை, சாரணர்படை, பள்ளிக் குழந்தைகள் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு அணிவகுப்பாக ஆவடி டேங்கு பாக்டரியின் விஜயந்தா, சப்மெரின், நாட் முதலியனவும், தருமபுரி காவல் துறையினரின் காவடி - கரக ஆட்டமும், இமாசலப் பிரதேசத்தின் கலைக்குழுவும் பங்கேற்றன. அத்துடன் தேசிய ஒருமைப் பாட்டுக் கொள்கையையும்புதிய இருபது அம்சத் திட்டக் கொள்கைகளையும், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்திட்டக் கொள்கையையும் விளக்கும் வகையில் அலங்கார ஊர்திகள் அமைந்திருந்தன.

இவ்விழாவில் பள்ளிச் சிறுவர் சிறுமியர் பங்கேற்ற ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் எல்லோருடைய கருத்தையும் கவர்ந்தன. வண்ண வண்ண உடைகள் உடுத்தி, இந்தியத் திருநாட்டின் பல்வேறு நாட்டிய நிகழ்ச்சிகளை மாணவியர் ஆடிவந்தது அருமையான காட்சியாகும்.

அணிவகுப்பு நிகழ்ச்சி முடிந்து, சிறுவர் சிறுமியர் ஆடல் பாடல் தொடங்கும் முன்னர் மாண்புமிகு முதல்வர் விடுதலைப்





போராட்ட வீரர்களுக்குத் தாமிரப் பதக்கங்களை வழங்கினார். வீரச் செயல்கள் செய்தோருக்கு அண்ணா பதக்கங்களை வழங்கினார். தீயணைப்புப் பிரிவினர் ஏணி அமைந்த ஊர்தியை இயக்கிக் காட்டியது அனைவரையும் கவர்ந்த நிகழ்ச்சியாக விளங்கியது.

விழா இறுதியில் பல்வேறு வண்ணங்களில் பறக்கவிடப்பட்ட பலூன்கள் வானில் வண்ணக் கோலமிட்டன.

முப்பத்து நான்காவது குடியரசு நாள் விழா அணிவகுப்பு அலங்கார ஊர்திகள், ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் அனைத்தும் மிகச் சிறப்பாக அமைந்து, குடியரசு நாளின் மாட்சியை உணர்த்தின.

—மாமூலன்.



## அண்ணா வீரப் பதக்கம்

சென்னையில் நடைபெற்ற 34-வது குடியரசுநாள் (26.1.83) விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 31 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு தாமிரப்பத்திரம் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து குடியரசுநாள் விழாவன்று வழங்கப்படும் அண்ணா வீரப்பதக்கங்களை மூவருக்கு முதல்வர்வழங்கினார். வீரப் பதக்கம் பெற்றோர் விவரம் வருமாறு:-

### செல்வன் பூம்பொழிலன்

29.6.82 அன்று மாலை 5 மணியளவில் சென்னை நகரின் பீட்டர்ஸ் சாலை குடியிருப்பில் உள்ள ஒரு கிணற்றில் 5 வயதுடைய பாலாஜி என்ற சிறுவன் விழுந்துவிட்டான் இதைப் பார்த்த 15 வயதுடைய ரியாஜ் எனும் பையன் பாலாஜியைக் காப்பாற்றுவதற்காகக் கிணற்றுள் குதித்தான். இருவருக்கும் நீச்சல் தெரியாததால் உயிருக்காக கிணற்றுக்குள் போராடினர். இதனைப் பார்த்த 10-ஆம் வகுப்பு படிக்கும் பூம்பொழிலன் எனும் சிறுவன் கிணற்றினுள் குதித்து இருவரையும் காப்பாற்றினான்

### டாக்டா பி. எ. கணிக்கர்

1979–ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உதகமண்டலத்தில் வகுப்புக் கலவரம் நடைபெற்றபோது அய்யப்பன் என்பவரை ஒரு கூட்டம் தாக்கியது. இதனால் அவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படும் போல் இருந்தது. திரு. கணிக்கராஜ் எனும் ஹோமியோபதி டாக்டர் கூட்டத்தினுள் புகுந்து அய்யப்பனைக் காப்பாற்றி ஒரு காவல் நிலையத்தில் சேர்ப்பித்தார். மேலும் அவர் அய்யப்பனை சிகிச்சைக்காக உதக மண்டல அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று வேண்டிய உதவிகள் செய்து அவரைக் காப்பாற்றினார்.

### திரு எஸ். கலியன்

தஞ்சாவூர் மணம்புச்சாவடியில் உள்ள கேட்ல்ஸ் பாலத்தின் அருகே உள்ள நதியில் மசாக் எனும் மேல்நிலைப்பள்ளி மாணவன் 25.7.81 அன்று குளித்துக் கொண்டிருக்கும் போது, நீரில் அடித்துச் சொல்லப்பட்டான். இதைப் பார்த்த கலியன் என்னும் சிறுவன் நதியில் குதித்து, மிகுந்த சிரமத்துடன் போராடி தன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாது மாணவன் மசாக்கைக் காப்பாற்றினான்.











# திக்கெல்லாம் புகழ் திருநெல்வேலி

**திரு நிர்மல்சிங் ஹீரா, இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**திருநெல்வேலி.**

கிராமங்கள் மிகுதியாக உள்ள நம்நாட்டில் நகரங்கள், தொழில் நகரங்கள் போன்றவைகளும் தங்களின் முக்கியத் தேவைகளான உணவு, உடை போன்ற மூலப் பொருள்களுக்குக் கிராமப்புறங்களையே பெரிதும் நம்பியிருக்கின்றன. எனவே கிராமங்கள் தான் நாட்டின் முதுகெலும்பாகும். கிராமத்தின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சியாக அமைகிறது.

கிராமங்கள் புத்துணர்ச்சியையும் புதுப்பொலிவையும் பெற்று, கிராமப்புற வாழ்வைப்பொருள் பொதிந்த விருப்பு மிகுந்த வாழ்வாக மாற்றும் திட்டமே தன்னிறைவுத் திட்டமாகும். கிராம மக்களின் வாழ்வில் புதிய வரலாற்றைத் தோற்றுவிக்கும் அடிப்படை இலட்சியத்துடன் உருவாக்கப்பட்டதுதான் இத்திட்டம்.

கிராம மக்கள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்ல சாலை வசதியில்லா கிராமங்கள், கல்வி அறிவைப் பெருக்கிக் கொள்ள வசதியில்லாத்—அதாவதுபள்ளிக் கட்டடம் இல்லாத சிற்றூர்கள், தாய் சேய் நலம் பேணி வளர்க்க வசதியில்லாத கட்டடமற்ற தாய்சேய் நிலையங்கள், கிராம மருத்துவக் கட்டடம் இல்லாத நிலை போன்ற இடர்ப்பாடுகளை நீக்கி கிராமங்களின் ஆதார வசதிகளைப் பெருக்கும் பணிகளே தன்னிறைவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.

திட்டங்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்துக்குள் முனைந்து பணியாற்றி நிறைவேற்றப்படவேண்டும் என்ற அரசின் முடிவு இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இதுபோன்ற திட்டத்தை வேறு எந்த மாநில அரசும் மேற்கொள்ளவில்லை என்பதும், தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இதற்கு முன் இப்படியோர் திட்டம் அறிமுகப் படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கவை

பொருநை வளமாக்கும் நெல்லைச் சீமையிலே தன்னிறைவுத் திட்டம் 1980-1981ல் 5 ஊராட்சி ஒன்றியங்களிலும் 1981-1982ல் 12 ஒன்றியங்களிலும் அரசு நிர்ணயித்த காலத்திற்கு முன்னரே செவ்வனே நிறைவேற்றப்பட்டன. இணைப்புச் சாலைகள், பாலங்கள், பள்ளிக்கட்டடங்கள் மகப்பேறு நிலையக் கட்டடங்கள் மருந்தகக் கட்டடங்கள் ஆதி திராவிடர் குடியிருப்பிலிருந்து மயானங்களுக்குச் சாலைகள் அமைத்தல் போன்ற வேலைகள் ரூபாய் 637.010 இலட்சம் செலவில் கிராம மக்கள் மன நிறைவெய்தி பூரிக்கும் நிலையில் முடிக்கப்பெற்றன. பாதுகாக்கப் பட்ட குடிநீர் வசதி 287 குடியிருப்புகளுக்கு ரூபாய் 212.630 இலட்சம் செலவில் சிறப்பாக முடிக்கப்பட்டது. ஆதி திராவிடர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் 1311, 2974 குடிசைகளுக்கு மின்னொளி வழங்கும் திட்டம் செயல் படுத்தப்பட்டது.

முதல், இரண்டாம் கட்ட தன்னிறைவுத் திட்டங்களால் பயனடைந்தோர் எண்ணிக்கை 14,07,864. அதில் ஆதி திராவிடர் மக்கள் மட்டும் 2,64,909.

மூன்றாம் கட்டமாகத் தன்னிறைவுத் திட்டம் கீழே குறிப்பிட்டுள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்த அரசு பணித்துள்ளது.

1.பாளையங்கோட்டை 2. ஆலங்குளம், 3. கீழ்ப்பாவூர், 4. கடையநல்லூர் 5. செங்கோட்டை, 6. களக்காடு, 7. பாப்பாக்குடி, 8. அம்பாசமுத்திரம், 9. ஸ்ரீவைகுண்டம் 10.ஆழ்வார்திருநகரி, 11. உடன்குடி, 12. சாத்தான்குளம், 13. வாசுதேவநல்லூர், 14.குருவிகுளம்.

செயல்படுத்தப்படவிருக்கும் திட்டங்கள் பற்றிய விவரம் வருமாறு

| வேலைகள் விவரம் | எண்ணிக்கை | மதிப்பீட்டுத்தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. இணைப்புச் சாலைகள் | 418 | 139.510 |
| 2. சிறு பாலங்கள் | 859 | 177.220 |
| 3. பள்ளிக் கட்டடங்கள் | 4 | 2.600 |
| 4. கிராம மருந்தகங்கள் | 27 | 17.550 |
| 5. மகப்பேறு நிலையங்கள் | 48 | 28.800 |
| | 1356 | 365.680 |



பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் — தருவையிலுள்ள கிராம மருந்தகம்

மேலும் கிராம மக்களுக்குக் கூடுதல் பயன் அளிக்கும் திட்டங்களாகப் பின்வரும் திட்டங்களும் நிறைவேற்றப்பட உள்ளன.

1. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி.
2. கிராமப்புற வீட்டு வசதி.
3. ஆதி திராவிட நலத்துறையினரின் சிறப்புத் திட்டம்.

மூன்றாவது கட்ட திட்டங்களினால் பயன் பெறும் மக்கள் தொகை 11,74,036. ஆதிதிராவிடர்கள் 1,87,375.

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் கிராம வேலை வாய்ப்புகள் அளிப்பதும், தனி நபர் வருமானத்தை உயர்த்துவதும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் நோக்கங்களாகும். தனி மனிதனின் வாழ்க்கை முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு அவனை உயர்த்துவதன் மூலம் சமுதாயத்தை உயத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டதுதான் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமாகும். நலிவடைந்தோர் நலன் நாடும் இந்த நல்ல திட்டம் ஏழை விவசாயிகள், விவசாயக் கூலிகள், மற்றும் கைவினைஞர்கள் ஆகியோர்க்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

கிராம மக்களின் பொருளாதார வளங்காண வழிகோலும் இத்திட்டம், நெல்லை மாவட்டத்தில் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டது. அரசு நிர்ணயித்த குறியீடான ரூ. 186 இலட்சங்களையும் விஞ்சி ரூ. 290.33 இலட்சங்களை அரசு மானியமாகப் பல்வேறு திட்டங்கள் மூலமாக 39,499 மக்களுக்கு வழங்கி இம்மாவட்டம் நற்பணியாற்றி சரித்திரம் படைத்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த ஆதிதிராவிடர் 14,505 பெண்கள் 13,767.

வேளாண்மை வளர்ச்சிக்கு ரூ31.34 லட்சங்களும், சிறுபாசன வளர்ச்சிக்கு 8.34 இலட்சங்களும் கால்நடை மேம்பாட்டிற்கு ரூ. 133.85 லட்சங்களும் மீன்வளம் காண ரூ.3.98 லட்சங்களும் அரசு மானியமாக இம்மாவட்டத்தில் உள்ள 145 வங்கிகள், 345 கூட்டுறவு வேளாண்மைக் கடன் வழங்கும் சங்கங்கள், 17 நிலவள வங்கிகள் ஏழை எளிய மக்களுக்கு வழங்கிய கடன்கள் மூலம் வழங்கப்பட்டிருக்கிறது.

## கிராம இளைஞர் சுய வேலை வாய்ப்பு

வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி நிற்கும் இந்நாளில் இளைஞர்களைத் தன்னம்பிக்கையுடன் எதிர்காலத்தை எதிர்நோக்கும் வகையில் வாழ வழி வகுக்க 'கிராம இளைஞர் சுய வேலை வாய்ப்புத் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது. 18 முதல் 35 வயதுக்குட்பட்ட இருபால் இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் திறமைக்கேற்ப, கிராமச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தொழில்கள் வகுக்கப்பட்டு அவர்களுக்கு அத்தொழில்களில் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களைக் கொண்டு பயிற்சியும், தொழில் செய்முறைப் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 9 வகையான பல்வேறு தொழில்களில் இளைஞர்கள் ரூ. 113.19 இலட்சம் அரசு மானிய உதவியுடன் பயிற்றுவிக்கப்படுகின்றனர். பயிற்சிக்குப் பின்னரும் அவர்கள் பயின்ற தொழிலைச் செய்து வாழ்க்கை பயன்பெற வங்கிக் கடன் உதவி பெற்று வாழ வழி வகுக்கப்படுகின்றது.

## தொழில் வளர உற்பத்தி பெருக ஆதார வசதிகளைப் பெருக்குதல்

கூட்டுறவு பால் பண்ணைகளுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கவும், கறவைக் கூடங்கள் கட்டவும், பால்பதன குளிர்நீர் சாதனங்கள் வாங்கவும், பால் விநியோகம் செய்ய



ஊர்திகள் வாங்கவும், செயற்கை முறை இனவிருத்தி செய்ய உபகரணங்கள் வாங்கவும், மண்பாண்டத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நவீன சூளைகள் கட்டவும், தொழிற் கூடங்கள் கட்டவும், நவீன இயந்திரங்கள் வாங்கவும், பொருட்களை ஏற்றி செல்ல ஊர்திகள் வாங்கவும் 50 சத விகித மானியமாக ரூ. 28 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

சங்கரன்கோவிலில் விசைத் தறிக்கூடம், மற்றும் விசைத் தறிகள் அமைக்க அரசு ஒதுக்கீடு செய்த தொகை ரூ. 40 இலட்சத்தில் ரூ. 20 இலட்சம் ஒருங்கிணைந்த் ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியமாக வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 100 ஆதிதிராவிட வகுப்பினருக்கும், 100 இதர வகுப்பினருக்கும் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்த வழி வகை செய்யப்பட்டுள்ளது.

## 1982-83க்கான திட்டம்

கிராமங்கள் தோறும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் கணக்கெடுப்பு எடுத்துஐந்தாண்டுகளுக்கான தொகுப்பு பொருளாதாரத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 248 இலட்சம் அரசு மானியமாகவும் ரூ. 25 இலட்சம் உபகரணங்களுக்காகச் செலவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## குழந்தைகளுக்கு நண்பகல் உணவு வழங்கும் திட்டம்

குழந்தைகளுக்கு நுண்ணறிவு வளர்ச்சி 5 முதல் 14 வயதுக்குள்ளாகவே முடிவடைந்துவிடுகிறது. எனவே நல்ல சத்துணவினை இந்தப் பருவத்தில் குழந்தைகளுக்கு ஊட்டினால் அவர்கள் வருங்காலத்தில் ஆற்றல் மிக்கவர்களாக திடகாத்திர உடலும் தெளிந்த நல்லறிவும் கொண்டவர்களாக, எண்ணியது எண்ணியவாறு முடிக்கும் திண்ணியராய்த் திகழ முடியுமென்ற அறிஞர் பெருமக்களின் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு குழந்தைகளுக்கு நண்பகல் உணவு வழங்கும் திட்டத்தினை வகுத்துச் செயலாக்க அரசு பணித்துள்ளது.

''திருநெல்வேலியுறை செல்வர் தாமே'' என்று திருஞான சம்பந்தரால் பாராட்டப்பெற்ற வள்ளல் பாங்குமனம் கொண்ட, நல்லோர் உதவி கொண்டு கிராமந்தோறும் வாடகையில்லாக் கட்டடங்கள் பெற்றும் மற்றும் உபகரணங்கள் பெற்றும் இத்திட்டத்தினைச் செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இம் மாவட்டத்தில் இத்திட்டத்திற்கென 1336 உணவு மையங்கள் செயல்படவும் வாழ்க்கையிலே வசதியில்லா 1,31,340 குழந்தைகள் நல்ல சத்துணவும், 'நர்சரி' கல்வி பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கென மாதம் ஒன்றுக்கு 1,103 மெட்ரிக் டன் புழுங்கல் அரிசியும், 169 மெட்ரிக் டன் துவரம் பருப்பும், 78 மெட்ரிக் டன் பாமாயிலும் செலவாகிறது.

## இலவசப் பற்பொடி திட்டம்

பல்லில் ஏற்படும் நோய், உடலின் பல பாகங்களிலும் ஏற்படும் நோய்களுக்கு ஆதாரமாக இருக்கிறது. இதனை உணராத கிராமப்புற மக்கள் பெரிதும் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள்.

எனவே, அவ்வாறான துன்பங்களிலிருந்து கிராமப்புற ஏழை எளிய மக்கள் வீட்டுச் சிறார்கள் விடுபடவெனத் தமிழக அரசு இலவசப் பற்பொடி வழங்கும் திட்டத்தைத் துவக்கியது. பண்டித நேரு பிறந்த நாளான குழந்தைகள் நாளன்று (14-11-82) இத்திட்டம்நெல்லை மாவட்டத்தில் சீரும் சிறப்புமாகத் துவக்கி வைக்கப்பட்டது.

அத்திட்டத்தின்படி - 1536 குழந்தைகள் காப்பகங்களிலும், 2838 கிராமப்புறப் பள்ளிச் சிறார்களுக்கும் இலவசப் பற்பொடி வழங்கப்படுகிறது. இம் மாவட்டத்தில் இதற்காக மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் பற்பொடி பாக்கெட்டுகள் 4,39,452 ஆகும்.

''எல்லோரும் வாழ வேண்டும் இன்புற்றிருக்க வேண்டும்'' என்ற ஆன்றோர்வாக்கிற்கிணங்க அரசின் திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றி அதன் பயன் உரியோருக்கு உரிய காலத்தில் உடைமையாக்க இம்மாவட்டத்து அலுவலர்கள் அனைவரும் அரசின் எண்ணத்திற்கொப்ப முனைந்து செயல்படுகின்றனர். 'உரிமையை மட்டும் எண்ணிய எந்தச் சமுதாயமும் மேன்மை அடைந்ததில்லை. கடமைகளைக் கருதியவர்களே மேன்மையடைந்திருக்கிறார்கள். கடமையைச் செய்தால் உரிமை தானாக வந்துவிடும்' என்ற உணர்வுள்ள நல்ல சமுதாயத்தை உருவாக்க 'பிறருடைய துன்பத்தைத் தன்னுடையதாக ஏற்றுக் கொள்வதில் எவன் இன்பமடைகிறானோ அவனே உண்மையான தொண்டன்' என்ற அறிஞர்களின் கருத்தைக் கருவாகக் கொண்டு, திருஞான சம்பந்தர் பாடியது போல் 'திக்கெல்லாம் புகழ் திருநெல்வேலி' என்ற பெயர் நிலைத்து நிற்க எழிலுறு எல்லா நலன்களும் பெற்ற மக்கள் வாழும் பகுதியாக இதனை உருவாக்க அனைவரும் பாடுபட்டு வருகிறோம்.

### அட்டையில்...

எட்டயபுரத்தில் உள்ள மகாகவி பாரதியார் பிறந்த இல்லம் இது. தொல்பொருள் ஆய்வுத் துறையின் பாதுகாப்பில் உள்ளது.

இங்கு பாரதி பயன்படுத்திய பொருள்கள்- கைத்தடி, வாள், கிளி, கிருஷ்ணன் பொம்மைகள் உள்ளன. பாரதி பற்றிய நூல்கள், அவரது வாழ்க்கைக் குறிப்புகள், தமிழ் ஆங்கிலக் கையெழுத்துப் பிரதிகள், ஆஷ் கொலை குறித்து பாரதி எழுதிய ஆங்கிலக் கடிதம் முதலியன அழகுற தொகுக்கப்பட்டுள்ளன.

மகாகவி பாரதி நூற்றாண்டு விழா நினைவாகத் தமிழக அரசு அழகுற உருவாக்கவிருக்கும் மணிமண்டப அமைப்பே, சென்னையில் நடைபெறும் சுற்றுலா வர்த்தகத் தொழில் பொருட்காட்சியில், செய்தித்துறை அரங்கின் வெளித் தோற்றமாக உருவாக்கப்பட்டுள்ளது. அதுவே இந்த இதழின் அட்டையை அலங்கரிக்கிறது.எட்டயபுரத்தில் இம்மணிமண்டபம் அமையும்





# ஆதிதிராவிடர் நலம் பெற...



திருநெல்வேலி மாவட்டத்தில் 5,12,387 ஆதிதிராவிட மக்கள் உள்ளனர். இவர்களில் பாதிக்குமேல் வறுமை நிலையிலுள்ளார்கள். வறுமை நிலையிலுள்ளவர்களுக்குப் பொருளாதார மேம்பாடு ஏற்பட வேண்டுமானால் அவர்களை நிரந்தர வருமானம் தரக்கூடிய தொழில்வகைகளில் ஈடுபடச் செய்வதேயாகும்.

தமிழ்நாடு அரசு வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தில் பொருளாதார மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டங்கள் 1980-81 முதல் ஆரம்பிக்கப்பட்டன. ஏழை ஆதிதிராவிட மக்கள் இத்திட்டங்களில் ஈடுபடச் செய்து பொருளாதார வளர்ச்சி பெற மாவட்டங்கள் தோறும் மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மாவட்டத்திலுள்ள அனைத்து வளர்ச்சிப் பணி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, அந்தந்த துறை மூலம் ஆதிதிராவிடர்கள் பலன் பெறச் செய்வதே இக்கழகத்தின் முக்கியப் பணியாகும்.

மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம் மூலம் சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் கைவினைஞர்கள் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டங்கள் ஆதிதிராவிட மக்களுக்குப் பயன் அளிக்கக் கூடிய வகைக்காக குறியீட்டுக்கடன் 'தாட்கோ' மூலம் வழங்கப்படுகிறது.

1981-82ல் 6417 பேர் பயன்பெற்றார்கள். குறியீட்டுக் கடன் ரூ37,72,752.00 1982-83ல் 280 பேர் பயன் பெற்றார்கள். குறியீட்டுக் கடன்ரூ1,39,650.00 குறியீட்டுக் கடனாக மொத்தம் 43,21,100.00 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

1982-83ல் திருநெல்வேலி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டாரம் தேர்ந்தெடுக்கப்பட்டு தாட்கோவின் சிறப்புக் கூட்டுத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி ஓட்டப்பிடாரம் வட்டாரத்தில் ஆதிதிராவிடர்கள் மிகுதியாக வாழும் 12 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள 1000 குடும்பங்களின் மேம்பாட்டிற்கான கீழ்க்கண்ட சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

நகரப்பகுதியிலுள்ள ஆதிதிராவிடர் வறுமை நிலையிலுள்ள 500 குடும்பங்களுக்கு மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்த புள்ளி விவரங்கள் தயார் செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு துறையும் தனக்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் 18 விழுக்காடு ஆதி திராவிடர்களுக்காகச் செயல்படுத்த வேண்டுமென வலியுறுத்தும் சிறப்புக் கூட்டுத் திட்டம் மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் நேரடி கவனத்தின் மூலம் செயல்படுகிறது

ஆதிதிராவிட மக்களுக்காகத் தனிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அச்சங்கங்கள் வளர்ச்சி பெற அதற்கு வேண்டிய மூலதனச் செலவினங்கள் மத்தியச் சிறப்புத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தின் தொழில்கள் செழிக்க தாட்கோ மானியம் வழங்கப்பட்டுள்ளது. அவை வருமாறு:

பாலையாபுரம் பாதிரியார் நெசவாளர் சங்கம், பணிக்கூடம் அமைக்க, ரூ. 1,38,000. செந்தியம்பலம் நெசவாளர் சங்கம் பணிக்கூடம் கட்ட ரூ.1,38,000. சுப்பிலாபுரம் நெசவாளர்கள் சங்கம் தறிகள் வாங்க ரூ.1,01,250. வடக்கு காரு

**எஸ். திருமலைச்சாமி**
மாவட்ட வளர்ச்சி அலுவலர்,
திருநெல்வேலி.

குரிச்சி செங்கல் மற்றும் ஓடு தொழிற் கூட்டுறவுச் சங்கம் லாரி வாங்க ரூ.2,26,000. நெசவு ஆலை, தூத்துக்குடி ரூ.5,57,000. கிராமிய நூற்பு ஆலை, புளியங்குடி ரூ.2,44,000. விசைத்தறி நிலையம் சங்கரன் கோவில் ரூ.40,00,000. பாரதியார் கூட்டுறவு நூற்பு ஆலை, எட்டயபுரம் ரூ4,97,00,000. அருந்ததியர்களுக்குக் காலணிகள் செய்யத் தொழிற் கூடம் அமைத்தல் ரூ. 3,50,000. மாவட்ட கிராம வளர்ச்சி நிறுவன அரிசனங்களுக்கு இரண்டாவது தடவை பால் மாடுகள் வாங்க ரூ48,30,000.

ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டி வழங்கப்பட்டுள்ள வீடுகளில் தலா இரண்டு தென்னைகள் வளர்க்க இம்மாவட்டத்தில் இவ்வாண்டு 1250 தென்னைக் கன்றுகள் நடப்பட்டுள்ளன.

ஆதிதிராவிட இளைஞர்கள் காவல்படை மற்றும் இராணுவத்தில் சேருவதற்குத் தகுதி பெற அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

போக்குவரத்துக் கழகங்கள் ஒவ்வொன்றிலும் 100 ஆதிதிராவிட மக்களை நியமனம் செய்ய 'தாட்கோ' மானியம் வழங்கியுள்ளது.

ஆதிதிராவிட மாணவ மாணவிகள் தங்கிப் படிக்க விடுதிகள் கட்டுதல், சமுதாயக்கூடங்கள் பள்ளிக்கூடங்கள் கட்டுதல், பாலர் பள்ளிகள் கட்டல், சுகாதாரப் பணியாளர்கட்கு வீடுகள் கட்டுதல் போன்ற பணிகளைக் கழகம் செய்துள்ளது.

1982-83 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் 593 அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள தலா ரூ.3250 வீதம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் 207 சதுர அடிக்குக் குறையாத பரப்பில் ரூ.4000 மதிப்புள்ள வீட்டினைத் தானே கட்டிக் கொள்ள அரசு உத்தரவிட்டுள்ளது.

## வயது வந்தோர் கல்வி

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் "வயது வந்தோர் கல்வியில் எவ்விதத் தாமதமும் நேராமல் விரைவு படுத்தப்படும்" என அண்மையில் கூறியதற்கிணங்க—நெல்லை மாவட்டத்தில் முதியோர் கல்விப் பணி வேகத்தோடு இயங்கி வருகிறது.

தமிழக அரசு நிதி ஆதாரத்தோடு— சங்கரன்கோவில், விளாத்திகுளம், நாகலாபுரம், ஒட்டப்பிடாரம் வட்டாரங்களில் 400 வயதுவந்தோர்கள் கல்வி மையங்கள் நடைபெற்றுவருகின்றன. 6 முதல் 14 வயதுப் பிரிவினர்க்கு 82 பள்ளிசாரா மையங்களும், 14 எழுத்தறிவு மேம்பாட்டு மையங்களும் நடைபெற்றுவருகின்றன.

நெல்லை மாவட்டத்தில் மத்திய அரசு நிதி உதவியுடன் கடையம், கடையநல்லூர், செங்கோட்டை பகுதிகளில் வயதுவந்தோர் கல்வி மையங்கள் 300, நான்காவது கட்டமாக இயங்கிவருகின்றன.

இவற்றால் இங்கே இலட்சக்கணக்கான வயதுவந்தோர் கற்றுப் பெருமை பெற்றிருக்கின்றனர்.



## கிருஷ்ணாபுரம் சிற்பங்கள்

திருநெல்வேலியிலிருந்து 13 கி.மீ. தூரத்தில், திருச்செந்தூர் போகிற வழியில் உள்ளதுதான் கிருஷ்ணாபுரம். இங்குள்ள அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் கிருஷ்ணப்ப நாயக்கர், திருமலை நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டதாகும். சுமார் 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்தப் பழமை வாய்ந்த கோயிலில், மிக நுண்ணிய வேலைப்பாடமைந்த கல்சிற்பங்கள் உள்ளன.

அழகிய கல் தூண்கள், கர்ணன், அர்ஜுனன், நாடோடி நடனம், குறத்தி ராஜகுமாரனைத் தூக்கிச் செல்லல், குறவன் ராஜகுமாரியைத் தூக்கிச் செல்லல், வீரபத்திரர், ரதி ஆகிய சிலைகள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன.

## கடைசி அட்டையில்...

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோயில்களில் உள்ள நுணுக்கமான வேலைப் பாடமைந்த சிற்பங்கள் சில இச் சிறப்பிதழின் கடைசி அட்டையை அணி செய்கின்றன.

இன்னும் சில நெல்லை மாவட்டச் செய்திகள் "தமிழரசு" அடுத்த இதழில் (16-2-'83) இடம் பெறும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்…அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு !

Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676

தமிழரசு
1-2-1983












